DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam, Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வேகம் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1507
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday February 21, 2025

# ஒன்றாரியோ மாகாண அரசாங்கத்தை தெரிவு செய்யும் தேர்தலில் முன் கூட்டியே வாக்களிக்க விரும்புகின்றவர்களுக்கான செய்தி



எதிர்வரும் பெப்ரவரி 27ம் திகதியன்று நடைபெறவுள்ள ஒன்றாரியோ மாகாண அரசாங்கத்தை தெரிவு செய்யும் தேர்தலில் முன் கூட்டியே வாக்களிக்க விரும்புகின்றவர்களுக்கான தகவல்களை ஒவ்வொரு வேட்பாளரும் தங்களது தொகுதியில் உள்ள வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பாக அறிவித்துள்ளார்கள்.

தேர்தல் தினத்தன்று மக்கள் கூட்டத்தில் நின்று வாக்களிப்பதை தவிர்க்கும் முகமாக வாக்காளர்கள் பெப்ரவரி மாதம் 20ம் திகதி தொடக்கம் 22ம் திகதி வரை தங்கள் தொகுதிகளில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## Canada Liberal Party's Prominent Leadership Candidate Mark Carney addressed supporters and MPs in Scarborough

# கனடிய லிபரல் கட்சி தலைமைப் பதவிக்கு போட்டியிடும் முன்னணி வேட்பாளர் Mark Carney ஸ்காபுறோ ஆதரவாளர்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார்





19-02-2025 அன்று புதன்கிழமையன்று கனடிய லிபரல் கட்சி தலைமைப் பதவிக்காக போட்டியிடும் முன்னணி வேட்பாளர் **Mark Carney** அவர்கள் ஸ்காபுறோ கென்னடி கொன்வென்சன் மண்டபத்தியில் அவரை ஆதரிக்கும் அமைச்சர்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியுடன் உரையாற்றினார்.

மேற்படி விழா மண்டபத்தில் பல்லின சமூகங்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில சமூகமளித்திருந்த சமூகத் தலைவர்கள்- ஊடகவியலாளர்கள்- அரசியல் ஆர்வலர்கள்- வர்த்தகப் பிரமுகர்கள்- கல்வியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மத்தியில் **Mark Carney** அவர்கள் உற்சாகமாக உரையாற்றினார்.

மேற்படி கூட்டத்தை ஸ்காபுறோ மத்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சலிமா சாகிட் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். அத்துடன் **Mark Carney** அவர்களை அறிமுகம் செய்த மேடைக்கு அழைக்கும் பணி நமது அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ஹரி ஆனந்தசங்கரி அவர்களுக்கு வழங்கப்பெற்றிருந்தது. அங்கு உரையாற்றிய **Mark Carney** அவர்கள் கட்சியின் புதிய தலைவரை நாம் அனைவரும் தேர்ந்தெடுத்த பின்னர் ஆட்சியை மீண்டும் கைப்பற்றி இந்த தேசத்தின் அனைத்து வயதுடைய மக்களுக்காகவும் கடுமையாக உழைத்து கனடா என்னும் அற்புதமான தேசத்தை காப்பாற்றுவோம் என்று கூறிய போது சபையில் கரகோசம் மண்டபத்தின் கூரையையும் அதிரச் செய்தது.

SHIYARA FINANCIAL SERVICES
(An Agency for the Real Estate, Mortgage & the Finance)
வீடு-வியாபார நிலையங்கள் வாங்க, விற்க
Mortgages - Refinancing
Equity Line of Credit
Personal - Business Loans
Line of Credits - Credit Cards
Debt Consolidation
கிருஷ்ணா - KRISHNA
(647) 308-6069
shiyara@ymail.com
ENJOY THE FREEDOM OF BETTER CREDIT

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

# On February 27 Vote Liberal for

பெப்ரவரி மாதம் 27ம் திகதிய தேர்தலில்
ஒன்ராரியோ லிபரல் கட்சிக்கு வாக்களியுங்கள்

- **A family doctor for all**
  ஒன்றாரியோ வாழ் அனைவருக்கும் குடும்ப வைத்தியர்
- **Bringing back rent control**
  வாடகை கட்டுப்பாட்டை மீளவும் கொண்டு வருதல்
- **A tax cut for your family**
  உங்கள் குடும்பத்திற்கான வரி விலக்கு



## Mazhar Shafiq
## Scarborough Centre

120-1550 Birchmount Road, Scarborough
(647) 691-5122 info@mazharshafiq.ca

LIBERAL ONTARIO

@MazharShafiq @VoteMazharShafiq www.MazharShafiq.ca

Authorizeed by the CFO for the Mazhar Shafiq Campaign

---

NISSAN | VILLAGE NISSAN

தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு
சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

2025 **KICKS PLAY S**

LEASE FROM $298 MONTHLY WITH $1,299 DOWN.

THAT'S LIKE PAYING

**$69** WEEKLY AT **4.99%** APR FOR 39 MONTHS O.A.C.

PLUS, QUALIFYING NISSAN OWNERS MAY RECEIVE UP TO

**$500** IN LOYALTY BONUS

OFFER ENDS JANUARY 2ND, 2025.



NISSAN

WINTER **READY** EVENT



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT

905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN

25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com

HWY 7 · HWY 407 · Kennedy Rd. · South Unionville Ave. · N

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# தையிட்டி விகாரை தொடக்கம் கிழக்கில் இடம்பெறும் தமிழர் நிலம் பறிப்பு வரை எந்த அரசு வந்தாலும் தொடரத்தான் வேண்டுமா?

யாழ்ப்பாணம் கைதடி விகாரை எத்தனையோ வருடங்களாக இரகசியமாக கட்டப்பெற்று இன்று வெளிச்சத்திற்கு வந்த விடயமாக பேசப்படுகின்றது. இத்தனை ஆண்டுகள் எமக்கான மக்கள் பிரதிநிதிகள் வடக்கிலும் கிழக்கிலும் அனைத்து சலுகைகளையும் பெற்றுக் கொண்டு பாராளுமன்றத்திலும் எழுந்து நின்று பேச்சுகளை எறிந்து எதனையும் சாதிக்கவில்லை.

உதாரணமாக தையிட்டி விகாரையிலிருந்து மிக அண்மையில் தனது மாளிகை போன்ற வீட்டில் வாழ்ந்தவர் தான் எமது தலைவர்களில் ஒருவராக விளங்கிய அமரர் மாவை சேனாதிராஜா அவர்கள். அவரது பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய காலத்தில் சம்பந்தன் ஐயா அவர்களின் "அன்பு" வேண்டுகோளுக்கு இணங்க அனைத்தையும் அடக்கி வாசித்தவர். இதைப்போன்றே கிழக்கில் சாணக்கியன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து பாராளுமன்றத்திலன் அனல் பறக்கும் பேச்சுக்களை அவ்வப்போது மக்களைக் கவர்ந்தாலும் கிழக்கில் எரியும் பிரச்ச்னைகளாக விளங்கிய மட்டக்களப்பு மாதவனை மயிலத்தமடு மேச்சல்தரை பிரச்சனை போன்ற வற்றை கவனிக்காதவர்கள் போல ஆட்சியாளர்களிடம் சமரசம் செய்த வண்ணம் தங்கள் பாராளுமன்றப் பயணத்தை மகிழ்ச்சியோடு பூர்த்தி செய்து மீண்டு அடுத்த அமர்வுகளிலும் அவ்வாறு பேசிப் பேசி காலத்தைக் கடத்தலாம் என்ற நிலையில் அடுத்து வந்த தேர்தலிலும் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய கோடிககணக்கான ரூபாய்கள் பணத்தைத் துணையாகக் கொண்டு மீண்டும் வெற்றிவாகை சூடினார். ஆனால் அநுரவின் ஆட்சி அமைந்ததனால் "அடக்கி வாசிப்பவராய்" அனைத்து சலுகைகளையும் அனுபவித்து வருகின்றார். இவ்வாறு தான் ஏனைய தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் பாராளுமன்றப் பயணத்தை "தந்திரமாக" நகர்த்திக் கொண்டு போகின்றார்கள். அவர்கள் ஜனாதிபதி அநுர மற்றும் பிரதமர் போன்றவர்களையும் சந்திக்கின்றார்கள். மறு ப க்கத்தில் அநுர குமார திசநாயக்காவின் அரசாங்கத்திற்கு "குழி பறிக்க" திட்டமிடும் "குள்ள நரிகள்" கூட்டத்தோடும் சகவாசம் வைத்து மக்களிடம் "நல்ல் பெயரை சம்பாதித்து விடலாம் என்று கனவு காண்கின்றார்கள்

ஆனால். வுடக்கிலும் கிழக்கிலும் கடந்த அரசாங்க காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பெற்ற திட்டமிட்ட சிங்கள குடியேற்றத் திட்டங்கள் மற்றும் தமிழர் நிலங்களை தங்கள் அதிகாரங்களைக் கொண்டு பறித்தெடுத்து தமிழர்களின் பரம்பலைக் குறைத்தும் பெரும்பான்மை இனத்தவரை தமிழர் தாயக நிலங்களில் குடியேற்றியும் காரியங்கள் கச்சிதமாக இடம்பெற்று வருகின்றதை நாம் செய்திகள் வாயிலாக அறிகின்றோம்.

இவ்வாறான வடக்கின் தையிட்டி பௌத்த மகா விகாரையும் பிரகாசமாக எழுந்து நின்று பௌத்த கோசத்தையும் சிங்கன இனவாதத்தையும் ஒலிக்கச் செய்யும் அரசு சார்ந்த வைபவங்கள் நடந்தேற அதைக் கவனிக்க வேண்டிய மக்கள் பிரதிநிதிகளோ, இத்தனை ஆண்டுகள் தங்கள் "வேலைகளை" மாத்திரம் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மாத்திரம் இந்த தையிட்டி மஹா விகாரை தொடர்பாக எதிர்ப்புக்களை காட்டும் வகையில் எத்தனையோ வருடங்கள் போராடிப் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் போராடிக் கொண்டிருக்கும் காலப்பகுதியில் மிகவும் இரகசியமாக பௌத்த விகாரை விகாரமான தோற்றத்துடன் தமிழர் மண்ணில் அதுவும். தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளில் பிரித் ஓதுதலுடன் பௌத்தத்தின் தாக்கம் அந்த பிரதேசத்தில் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாகத் உள்ளது.

யாழ் தையிட்டி விகாரைகள் விவகாரத்தில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றினைந்து எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் இதன் போது விகாரைக்கு ஊடகவியலாளர்கள் செல்வத்கு பொலிசார் அனுமதியளிக்காது வீதியில் தடுத்து நிறுத்தினர்

ஆனால் தமிழர்களின் நிலங்களில் சட்டவிரோதமான சிங்கள குடியேற்றங்களை தடுக்க நடவடிக்கை எடுக்காமல் அரசாங்கமோ அன்றி அரச சார்பான அரசியல்வாதிகளோ செயற்பட்டால் அவர்களது பதவிகளால் எவ்வித பயனும் இல்லை என்பதையே நாம் இவ்வாரக் கதிரோட்டத்தில் குறிப்பிட விரும்புகின்றோம்.

உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?



Legalize your basement now!

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



Coverall Group Inc.
Contact: Siva 416-706-8160

## கனடா, நடேஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க குளிர்கால ஒன்றுகூடல் - 2025 !

கனடா, நடேஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் எதிர்வரும் மார்ச் முதலாம் தேதி சனிக்கிழமையன்று மாலை 6 மணிக்கு இந்த ஆண்டுக்கான குளிர்கால ஒன்றுகூடலைச் சிறப்பாக நடத்தவுள்ளது.

நிகழ்வு நடைபெறும் இடம்: J&J Swagat Convention Centre 415 Hood Road # 22 Markham

நடேஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

தொடர்புகளுக்கு:
(647) 807-9357 (647) 299-7443 (416) 402-1372

**Condo Room For Rent**

One Room available immediately in a Condo Near Warden and Finch

Please contact
647 648 8822 ( Ranji )

Working lady preferred

**Room For Rent**

Orton Park/Ellesmere சந்திப்பிற்கு அருகில் 1 Bedroom Basement அனைத்து வசதிகளுடன் வாடகைக்குண்டு.
Close to T.T.C , School.
Separate Entrance
ஆண்கள் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு:
647-928 0667

# ரொறன்ரோவில் குடும்பநாளில் பனிப்புயலும் விமான விபத்தும்

- குரு அரவிந்தன்



**ரொ**றன்ரோவில் "குடும்பநாள்" கொண்டாடுவதற்காக வழமைபோல திங்கட் கிழமை விடுமுறை விட்டிருந்தார்கள். பொதுவாக இந்த நாளில் குடும்பமாக எல்லோரும் உணவகங்களுக்குச் சென்று உணவருந்தி, பரிசுகள் கொடுத்து மகிழ்வார்கள். ஆனால் சென்ற வாரம் முழுவதும் பனி கொட்டிக் கொண்டிருந்ததால், வீதிகள் பனியால் மூடப்பட்டிருந்தன. வார இறுதியில் ரொறன்ரோ முழுவதும் 16 முதல் 23 சென்டிமீட்டர் வரை பனி பெய்துள்ளது. வெளியே செல்வதைத் தவிர்க்கும்படி அறிவித்தல் வந்தாலும், அவசர தேவைக்காகச் சென்றவர்களின் வண்டிகள் விபத்தில் சிக்கிக் கொண்டன. நெடுஞ்சாலைகளில் அதிக விபத்துக்கள் ஏற்பட்டன. அதனால் அனேகமான குடும்பங்கள் குடும்பநாளை வீட்டுக்குள்ளேயே கொண்டாட வேண்டி வந்தது.



பொதுவாக வீதியில் உள்ள பனிக்குவியலை இயந்திரங்கள் மூலம் கரையில் அள்ளிப் போடுவார்கள். ஆனால் தொடர்ந்தும் ஒருவாரமாகப் பனி கொட்டிக் கொண்டிருப்பதால் பனிக்குவியலை அள்ளிப்போட இடமில்லாமல் இருக்கின்றது. வீதிகளைத் துப்புரவு செய்யக் குறைந்தது மூன்று வாரங்களாவது எடுக்கும் என்று கணிப்பிட்டிருக்கின்றார்கள். இன்றும் பனி கொட்டிக் கொண்டே இருக்கின்றது. இந்த வார இறுதியிலும் பனிப்புயலால் அதிக பனி கொட்டப்படலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.

சென்ற திங்கட்கிழமை பியர்சன் விமான நிலையத்தில் மட்டும் சுமார் 1000 விமான சேவைகளில் 130,000 பயணிகள் பயணித்தனர். மினியாபோலிஸ்-செயின்ட் பால் சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு வந்த டெல்டா ஏர்லைன்ஸ் விமானம் ரொறன்ரோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும்போது பனிப்புயலில் சிக்கித் தலைகீழாகக் கவிழ்ந்ததில் ஒரு குழந்தை மற்றும் இரண்டு பெரியவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

விமானத்தில் 76 பயணிகள் மற்றும் நான்கு பணியாளர்கள் உட்பட 80 பேர் இருந்தனர். மதியம் 2:45 மணியளவில் சம்பவம் நடந்ததை அடுத்து அனைத்து



பயணிகளும் பாதுகாப்பாக விமானத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இந்த விபத்தில் உயிர் இழப்பு எதுவும் ஏற்படவில்லை. மூன்று ஏர் ஆம்புலன்ஸ் ஹெலிகாப்டர்கள் மற்றும் இரண்டு ஆம்புலன்ஸ்கள் சம்பவ இடத்திற்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களை அருகிலுள்ள மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனர்.

பனிப்புயல் காரணமாகப் பியர்சன் விமான சேவையில் சில சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன. 2023-20224 ஆண்டு குளிர்காலத்தைவிட இது அதிகமாக உள்ளது என்று செய்திகள் குறிப்பிடுகின்றன. பாடசாலை பேருந்துக்கள் இயங்காததால் மாணவர்களின் வருகையும் குறைவாகவே இருந்தது. பனிக்குவியல் காரணமாக சில வீதிகளில் வண்டித் தரிப்பிடத்தில் வண்டிகளை விடவேண்டாம் என்று பொலிசார் அறிவித்ததை கவனத்தில் கொள்ளாமல் விடப்பட்ட 1700 வண்டிகளுக்குத் தலா 200 டொலர் அபராதம் விதிக்கப்பட்டது.


**Andrea Hazell has a PLAN for Scarborough Families**
**ON FEBRUARY 27, YOU HAVE A CLEAR CHOICE:**

The Ontario Liberal Party is the only party with a fully costed election platform, which includes:

- Building 1.5 million new homes, and scraping the land transfer tax for first-time home buyers.
- Cutting income tax and home heating tax for the middle-class, saving Ontario families $1,150 each year.
- Ensuring every Ontarian has access to a family doctor within four years.
- Doubling ODSP benefits within two years to support vulnerable individuals
- Eliminating interest on OSAP loans and raising the repayment income threshold to $50,000.

Re-Elect ANDREA HAZELL
for Scarborough-Guildwood



Connect with Andrea

AndreaHazell.ca
3545 Kingston Road, M1M 1R6
(647) 913 - 1810
Connect@AndreaHazell.ca
@AndreaHazelll
@AndreaHazelll
@AndreaHazell

LIBERAL ONTARIO

SCAN ME

Authorized by the CFO for the Andrea Hazell Campaign

# கிளிநொச்சி அறிவியல்நகரிலுள்ள ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தில் தமிழ்மொழிமூலமான பயிற்சி வகுப்புக்களையும் ஆரம்பிக்குமாறு பிரதமர் ஹரிணி தெரிவிப்பு!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



இந்தப் பிராந்தியத்திலுள்ள மாணவர்களும் முழுமையாக நன்மையடையும் வகையில் தமிழ்மொழிமூலமான பயிற்சி வகுப்புக்களையும் ஆரம்பிக்குமாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கிளிநொச்சி அறிவியல்நகரிலுள்ள ஜேர்மன் பயிற்சி நிறுவனத்துக்கு பிரதமர் அவர்கள் 16ம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமை காலை சென்றிருந்தார். அங்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் ஆகியோருடன், ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தின் அதிபர் மற்றும் பணியாளர்கள் பிரதமரை வரவேற்றனர். இதன் பின்னர் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவு இளையோர் ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தில் இணைய முடியாத நிலைமை காணப்படுவதாக மாவட்டச் செயலர் மற்றும் ஆளுநர் ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

ஆங்கிலமொழி மூலமாக பயிற்சிகள் வழங்கப்படுதல் மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியடைந்திருத்தல் என்பன தகைமையாகக் காணப்படுவதால் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் பலர் இணைய முடியாத நிலைமையில் இருப்பதாகக் குறிப்பிட்டனர். இதனையடுத்து கருத்துத் தெரிவித்த பிரதமர், தமிழ் மொழி மூலமான பயிற்சிகளை ஆரம்பிக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

கலந்துரையாடலைத் தொடர்ந்து இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தையும் பிரதமர், ஆளுநர் உள்ளிட்ட குழுவினர் சுற்றிப் பார்வையிட்டனர்.







# யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமாக மரக்குற்றிகளை எடுத்துச்சென்ற சந்தேகநபர் வாகனத்துடன் கைது!

யாழ். தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாள் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரக்குற்றிகளை சூட்சுமமாகக் கடத்திச் சென்ற பாரவூர்தி ஒன்றை கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் 15ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் எழுதுமட்டுவாள் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரணசிங்க அவர்களின் வழிகாட்டலில், போக்குவரத்து பிரிவுப் பொறுப்பதிகாரி உதவிப்பொலிஸ் பரிசோதகர் நிலந்த மற்றும் போக்குவரத்துப் பிரிவு உதவிப் பொறுப்பதிகாரி தம்பிராஜா தர்மரத்தினம் அவர்களினாலும் எழுதுமட்டுவாள் சோதனைச்சாவடியில் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உதவியுடனும் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதில் சுமார் 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான வேம்பு, நாவல் மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகளையும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் தீவில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் கணிய மணல் அகழ்வை அனுமதிக்க முடியாது என்கிறார் வி.எஸ்.சிவகரன்

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (15-02-2025)

மன்னார் தீவில் மக்களின் வாழ்வியலும், எதிர்கால நலனையும் பாதிக்கின்ற கணிய மணல் அகழ்வுக்கு ஒரு போதும் அனுமதி வழங்க முடியாது எனவும் கணிய மணல் அகழ்வுக்கு சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கையை வழங்க முன்னெடுக்கவுள்ள கள விஜயத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 15ம் திகதி சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் தீவில் மூன்று திட்டங்கள் அரசினால் நடைமுறைப்படுத்தப்பட இருக்கும் சூழ்நிலையில் அதானியுடைய காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை அதானி நிறுவனம் பின் வாங்கியுள்ளதாக கூறப்படுகிறது.ஆனால் அரசாங்கம் எதிர்வரும் வாரம் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக அறிகிறோம்.

மின்சாரத்தை கொள்வனவு செய்வதில் விலை நிர்ணயத்தில் ஏற்பட்ட முரண்பாடு, அத்திட்டத்தை மீளாய்வு செய்ய அரசு குழு ஒன்றை நியமித்திருந்த சூழ்நிலையிலே அதானி குழுவினரால் இவ்வாறான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

முழுமையாக இத்திட்டத்தில் இருந்து அவர்கள் வெளியேறுவார்களா? அல்லது எதிர்வரும் வாரம் இடம்பெற உள்ள பேச்சு வார்த்தையுடன் அவர்கள் மீண்டும் இணங்கி போவார்களா? என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது.

எனவே மன்னார் தீவில் அவர்கள் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை அமுல் படுத்தக் கூடாது என்பதே எமது தொடர்ச்சியாக கோரிக்கையும், ஜனநாயக போராட்டமுமாக அமைந்துள்ளது.

மக்களின் அடிப்படை இருப்பையும், உணர்வையும், புரிந்து கொண்டு அவர்கள் மன்னார் தீவில் இருந்து வெளியேற வேண்டும். அவர்கள் வெளியேறுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

## கணிய மணல் அகழ்வு

மேலும் இரண்டு தடவைகள் கணிய மணல் அகழ்வு குறித்து மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் சுமார் 23 திணைக்களங்கள் கள விஜயத்தை மேற்கொண்டு கணிய மணல் அகழ்வுக்கான சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கையை வழங்க கள விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்திருந்த போது மக்களின் எதிர்ப்பு காரணமாக குறித்த இரு தடவைகள் அவர்களினால் நடைமுறை படுத்த முடியவில்லை.

அவர்கள் மீண்டும் கள விஜயத்தை மேற்கொள்ள பாதுகாப்பு கோரியுள்ளனர். பாதுகாப்புடன் சென்று கள ஆய்வு மேற்கொள்ள அவர்கள் பாதுகாப்பை கோரியுள்ளனர். நீதிமன்றத்தின் ஊடாக அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அறிகின்றோம்.

திங்கட்கிழமை அவர்கள் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு புதன்கிழமை மன்னாரிற்கு 23 திணைக்களங்களும் வந்து கள ஆய்வு முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக அறிகின்றோம்.எனவே கனிய மணல் அகழ்வுக்கான கள ஆய்வில் ஈடுபட அவர்கள் வருகை தரக் கூடாது. மக்களின் விருப்பம் இன்றி அவர்கள் குறித்த நடவடிக்கையை முன்னெடுக்க கூடாது.

மன்னாரில் கடந்த ஒரு மாதத்திற்கு முன் மழை விட்டும் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் தேங்கியுள்ள மழை நீரை வெளி யேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் பல்வேறு விதமான சுற்றுச்சூழல் தாக்கத்தையும் சமூக இருப்புக்கான கேள்விக் குறியையும்,மக்கள் வாழ்விடங்களில் இருக்க முடியாத ஒரு நிலைப்பாடும் காணப்படுகின்ற மையினால் இந்த பகுதியில் மண் அகழ்வு செய்யக் கூடாது என்கிற மக்களினுடைய போராட்டத்தை மதித்து அவர்களுடைய உணர்வுகளுக்கு செவி சாய்த்து இத் திட்டத்தில் இருந்து அவர்களும் வெளியேற வேண்டும்.

இவ்வாறு இன்றி அடாத்தாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அவர்கள் வருவர்களாக இருந்தால் மன்னார் மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். அதற்கு எதிராக மாவட்டம் தழுவிய ரீதியில் பாரிய ஜனநாயகப் போராட்டத்தை மக்கள் முன்னெடுப்பார்கள்.

எனவே அரசு இந்த மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு, இத்திட்டங்களில் இருந்து அவர்கள் வெளியேற வேண்டும். மேலும் கரையேற மணல் அகழ்வு செயல் திட்டத்தையும் அரசு கைவிட வேண்டும்.

இந்த மூன்று திட்டங்களையும் மன்னார் தீவு பகுதியில் இருந்து அவர்கள் கை விட்டு, வெளியேறி மக்களின் வாழ்வியல் இருப்புக்கும், வாழ்வியல் சுகாதார சுற்றுச் சூழல் பாதிப்புக்களின் இருந்து அவர்களை பாதுகாத்துக் கொள்ளும் நிலைப்பாட்டிற்கு அரசு சாதகமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என மன்னார் மக்கள் சார்பில் நாங்கள் இந்த கோரிக்கையை விடுக்கின்றோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார், மீனவ சங்க பிரதி நிதி என்.எம். ஆலம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர்.




# "ஏர் நிலம்" தொண்டர் அமைப்பின் ஏற்பாட்டில் சிறப்பாக இடம்பெற்ற மூத்த உழைப்பாளர்கள் கௌரவிப்பு விழா

- எஸ்.ஆர்.லெம்பேட் (15-02-2025)

ஏர் நிலம் தொண்டர் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழர் திருநாளாம் தைத்திருநாள் பொங்கல் விழா நிகழ்வு மற்றும் மூத்த உழைப்பாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் 15ம் திகதி அன்று சனிக்கிழமை காலை அடம்பன் மாளிகைத்திடல் மாணிக்க பிள்ளையார் கோவில் வளாகத்தில் இடம்பெற்றது.

வருடா வருடம் இடம் பெறும் குறித்த நிகழ்வு இவ்வருடம் "நம்பி கை கொடுப்போம்" "நம்பிக்கை கொடுப்போம்" எனும் தொனிப்பொருளில் பாரம்பரிய பொங்கல் நிகழ்வுடனும் அதே நேரம் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மூத்த உழைப்பாளர்களை கௌரவிக்கும் முகமாகவும் ஒழுங்கு செய்யப்பட்டு இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட ஏர் நில அமைப்பின் இணைப்பாளர் கவிஞர் பெனில் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மாந்தை மேற்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் டிலைக்ஸன், மாளிகைதிடல் கிராம உத்தியோகஸ்தர் லீனற் அருள் மதி சந்தியாகு, கமநல அபிவிருத்தி உத்தியோகஸ்தர் பிரியந்தன் உட்பட ஏர்நில அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

குறித்த நிகழ்வின் போது வரவேற்பு நடனம், கிராமிய நடனம், கவிதை, பேச்சு, ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 27 மூத்த உழைப்பாளர்கள் பொன்னாடை போர்த்தி மாலை அணுவிக்கப்பட்டு நினைவு சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அதே நேரம் நிகழ்வில் பல்வேறு கலைநிகழ்வுகளை அரங்கேற்றம் செய்த பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதல்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








# மன்னார் பொது வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான விசேட வைத்திய நிபுணர் திடீரென பணியில் இருந்து விலகல்

## வெளிநாடு செல்ல இருப்பதாக அறிவிப்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (17-02-2025)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய சிறுவர்களுக்கான விசேட வைத்திய நிபுணர் எவ்வித முன் அறிவித்தல் இன்றி பணியில் இருந்து விலகி உள்ளமையினால் தமது குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் உரிய முறையில் வைத்திய சேவையினை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான நோயாளர் விடுதி இலக்கம்-07 மற்றும் பிரசவிக்கின்ற குழந்தைகளுக்கான விசேட சிறுபிள்ளை வைத்திய நிபுணர் கடமையாற்றி வந்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த வைத்திய நிபுணர் எவ்வித முன் அறிவித்தல் இன்றி பணியில் இருந்து விலகியுள்ளார். இதனால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான நோயாளர் விடுதி இலக்கம் 7 இல் அனுமதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் புதிதாக பிறக்கும் குழந்தைகளுக்கான சிகிச்சைகள் தாமதம் அடைந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட தமது குழந்தைகளை யாழ்ப்பாணம் அல்லது வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ் விடயத்தில் வடமாகாண ஆளுநர் உடனடியாக தலையிட்டு குறித்த வைத்திய நிபுணருக்கு பதிலாக ஒருவரை உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஆஸாத் எம்.ஹனிபா வை தொடர்பு கொண்டு வினவிய போது, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த சிறு பிள்ளைகளுக்கான வைத்திய நிபுணர் திடீரென கடமைக்கு சமூகமளிக்காது இருந்தார்.

அவர் தொடர்ச்சியாக கடமைக்கு வருகை தராத நிலையில் அவருடன் தொடர்பை ஏற்படுத்தினோம். எனினும் தான் வெளிநாடு செல்ல உள்ளதாகவும், இதனால் கடமைக்கு சமூகமளிக்கவில்லை என தொலைபேசி வாட்சப் ஊடாக கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக நாங்கள் உறிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம்.

இந்த நிலையில் தற்காலிகமாக வவுனியாவில் இருந்து ஒரு வைத்திய நிபுணரை கடமைக்கு அமர்த்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டு சித்திரவதைக்கு உள்ளான தமிழருக்கு சுவிசில் இழப்பீடு கோரி வழக்கு

சுவிட்சர்லாந்தில் புகலிடம் மறுக்கப்பட்டு இலங்கைக்கு திரும்பிச் சென்று 2022ஆம் ஆண்டு மீண்டும் சித்திரவதைக்கும் பாலியல் வன்முறைக்கும் உட்பட்ட தமிழர் ஒருவருக்காக சுவிட்சர்லாந்து சட்டத்தரணிகள் இழப்பீடு கோரி வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்துள்ளனர்.

பீற்றர் மோறோ எஸ் ஏ (Peter & Moreau SA) என்ற சட்ட நிறுவனத்தைச் சேர்ந்த எமா லைடென் மற்றும் பெனடிக்ட் டி மோர்லூஸ் (Emma Lidén மற்றும் Bénédict de Moerloose) ஆகியோர் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்துடன் (ITJP) இணைந்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது சுவிட்சர்லாந்து தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்களை இலங்கைக்குப் பலவந்தமாக திருப்பி அனுப்புவதை உடனடியாக இடைநிறுத்த வேண்டும் எனவும் துன்புறுத்தலின் நிருபிக்கப்பட்ட முழுமையான ஆபத்தினைக் கருத்திற் கொண்டு நிலுவையிலுள்ள அனைத்து விண்ணப்பங்களையும் மீள்பரிசீலனை செய்யவேண்டும் எனவும் சுவிட்சர்லாந்தினைக் கேட்டுள்ளது.

“அந்த நேரத்தில் எமது கட்சிக்காரரினால் இலங்கைக்கு அவர் திருப்பி அனுப்பப்பட்டால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைக் காட்டும் பலமான ஆதாரங்கள் சுவிட்சர்லாந்தின் குடியகல்விற்கான அரச செயலகத்திடம் இருந்தது அவர்கள் துன்புறுத்தலுக்கான ஆபத்தினை ஆராய மறுத்துவிட்டார்கள். கட்சிக்காரரின் கோப்பில் இருந்த புதிய மற்றும் எச்சரிக்கும் தகவல்களையும், மனஉளைச்சலின் அவரது தெளிவான வெளிப்படுத்தல்களையும் புறக்கணித்ததன் மூலம் அவர் இலங்கைக்கு திரும்பிச் சென்ற பின்னர் மீண்டும் கடுமையாக பாதிக்கப்படும் நிலைக்கும் மீண்டும் உளநிலை பாதிக்கப்படும் நிலைக்கும் அவரை அவர்கள் ஆளாக்கியுள்ளார்கள்” என எமா லைடென் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கானது இ.எஸ் இற்கு ஏற்பட்ட தார்மீக பாதிப்புகளுக்காக 150,000 சுவிஸ் பிராங்குகளை இழப்பீடாக கேட்பதுடன் சித்திரவதைக்கு எதிரான தீர்மானம் மற்றும் மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றத்தின் கீழான கடப்பாடுகளுக்கு இணங்க சுவிட்சர்லாந்து அவரது வழக்கினை சரியான முறையில் பரிசீலிக்கத் தவறிவிட்டது என வாதிடுவதுடன் குடியகல்விற்கான அரச செயலகத்தினை அதற்கு பொறுப்பாளியாக்கிறது.

“ஐரோப்பிய நாட்டிலிருந்து இலங்கைக்கு தமிழர் ஒருவர் திருப்பி அனுப்பப்பட்டு அதன் பின்னர் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதை நான் பார்ப்பது திரு இ.எஸ் இன் வழக்கில் மட்டுமல்ல. புகலிடக்கோரிக்கையினை ஆராயும் அதிகாரிகள் வாழ்வு மற்றும் சாவு சம்பந்தமான வழக்குகளை கையாளுகின்றார்கள் அத்துடன் இந்த வழக்குகள் ஆராய்வதற்கு சிக்கலானதாக இருப்பினும் அவர்கள் அந்த வேலையினை மிகவும் கவனத்துடன் செய்வது அவசியமானதாகும்” என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

தனது குடும்பத்தின் பாதுகாப்பிற்காக தன்னை வெளிக்காட்ட விரும்பாத இந்த நபரான, இ.எஸ் தற்போது ஐக்கிய இராச்சியத்தில் இருக்கிறார் அங்கு அவருக்கு 2024 இன் பிற்பகுதியில் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டது. ஐக்கிய இராச்சியத்தில் அந்த செயல்முறையின் ஒரு பகுதியாக இ.எஸ் தனக்கு நடந்த சம்பவத்தை உறுதிப்படுத்தும் ஒரு சுயாதீன சட்ட வைத்திய அறிக்கை ஒன்றினைப் பெற்றிருந்தார் - இவ்வாறான ஒன்றினை சுவிட்சர்லாந்தில் பெற்றுக் கொள்ளமுடியாது. அவர் ஐக்கிய இராச்சியத்தில், உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தினால் நடாத்தப்பட்ட உளவியல் சமூக ஆதரவு செயற்திட்டத்திலும் இணைந்து கொண்டார். போதிய நிதி உதவி இன்மையால் இந்த ஆதரவுச் செயற்திட்டம் மூடப்படும் நிலையை எதிர்நோக்கியுள்ளது.

# அஷ்ர.ஃப் சிஹாப்தீனின் "கழுதை மனிதன்" மொழி பெயர்ப்பு சிறுகதைத் தொகுதி வெளியீடும், புரவலர் இம்ரான் நெய்னாரின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும்







சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளரும் எழுத்தாளருமான அஷ்ர.ஃப் சிஹாப்தீன் மொழி பெயர்த்த “கழுதை மனிதன்” சிறுகதைத் தொகுதி வெளியீடும் இலங்கை நெய்னார் சமூக நலக் காப்பகத்தின் மாணாக்கருக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தெமடகொட வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

பிரபல எழுத்தாளர் கவிஞர் அல் அஸுமத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரபல சிரேஷ்ட சட்டத்தரணி ஷிராஸ் நூர்தீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். நூலின் முதற் பிரதியை யுனிவர்ஸல் ட்ரவல் கன்ஸல்டன்ஸி-அஜ்மா நிறுவனக் குழுமப் பணிப்பாளர் அக்கீல் ஜுனைட் பெற்றுக் கொள்வதையும் மாணாக்கருக்கான பாடசாலை உபகரணங்களை இம்ரான் நெய்னார் வழங்குவதையும் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படபிடிப்பு: எஸ். ராமதாஸ்

YOU MAY BE SURPRISED TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER

CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS

PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE

NON MEDICAL LIFE INSURANCE

| AGE | 25000 | | 50000 | |
|---|---|---|---|---|
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |



Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5772 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# கொழும்பில் இருந்து ஆரம்பித்த துவிச்சக்கர வண்டி பவனி யாழ். புத்தூர் வைத்தியசாலையை வந்தடைந்தது!



## கனேடிய உயர்ஸ்தானிகர் மற்றும் அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகரும் இணைந்துகொண்டு சுமார் 10 கிலோமீட்டர்கள் தூரம் துவிச்சக்கர வண்டியில் பயணித்தனர்



புத்தூரில் அமைந்துள்ள தூய லூகா மெதடிஸ்த திருச்சபை வைத்தியசாலையின் அபிவிருத்திக்கான நிதி சேகரிப்புக்காக ஆரம்பிக்கப்பட்ட மாபெரும் துவிச்சக்கரவண்டிப் பவனி 15ம் திகதி சனிக்கிழமை அன்றையதினம் குறித்த வைத்தியசாலையை வந்தடைந்தது.

கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலே புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்கள், சிங்களவர்கள், வெள்ளையர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நிதி திரட்டும் துவிச்சக்கர வண்டி பவனியில் ஈடுபட்டிருந்தனர்.

80பேர் கடந்த 12.02.2025 அன்று கொழும்பில் இருந்து பயணத்தை ஆரம்பித்து நான்கு நாட்கள் பயணம் செய்து சனிக்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணத்தின் புத்தூரை வந்தடைந்தனர். இவ்வாறு வருகை தந்தவர்கள் தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி மங்கல வாத்தியங்கள் இசைக்க வரவேற்கப்பட்டனர்.

நிகழ்வு ஆரம்பமாகின்றபோது கனேடிய உயர்ஸ்தானிகர் மற்றும் அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகரும் இணைந்துகொண்டு சுமார் 10 கிலோமீட்டர்கள் தூரம் துவிச்சக்கர வண்டியில் பயணித்தனர். அத்துடன் கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் ஒலிம்பிக் துவிச்சக்கர வண்டி போட்டியில் பதக்கம் பெற்றவரும் கலந்துகொண்டார்.

# சாவகச்சேரி உதவிப் பிரதேச செயலர் மரணம் – சடலத்தை அடக்கம் செய்ய உத்தரவு!



தீயில் எரிந்த சாவகச்சேரி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் 15-02-2025 அன்றையதினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். நீர்வேலி தெற்கு பகுதியைச் சேர்ந்த சதீஸ் தமிழினி என்ற 34 வயதுடைய குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், இவர் 6 மாதங்கள் கர்ப்பிணியாக உள்ளார். கடந்த 08.02.2025 அன்று தீயில் எரிந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அவரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது, நுளம்பு திரியை பற்ற வைத்த பின்னர் தீக்குச்சியை தவறுதலாக அருகில் உள்ள மண்ணெண்ணெய் கொள்கலன் மீது போட்டதால் அதன்மூலம் ஏற்பட்ட தீ விபத்தில் தான் சிக்கியதாக வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

தொடர்ச்சியாக 9 தினங்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பெற்று வந்துள்ளார். அவரது சிசுவையேனும் உயிருடன் காப்பாற்றுவதற்கு வைத்தியர்கள் தீவிர சிகிச்சை மேற்கொண்டனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி சிசுவுடன் அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சடலத்தை புதைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஏற்பாட்டில் இராசபோசனம்

## ஊரெழுவில் நிகழ்ந்த சிறுதானியப் பொங்கல் விழா



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தைப்பொங்கல் விழாவை ஆண்டுதோறும் சிறுதானியப் பொங்கல் விழாவாகக் கொண்டாடிவருகிறது. இராசபோசனம் என்ற கருப்பொருளில் நடைபெறும் இச் சிறுதானியப் பொங்கல் விழா இம்முறை ஊரெழு வளர்பிறை சனசமூக நிலைய முன்றலில் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை மிகச்சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

வளர்பிறை சனசமூக நிலையத்தின் தலைவர் மு.ஜங்கரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் பங்கேற்றிருந்தார். சிறப்பு விருந்தினர்களாகப் பசுமை இயக்கத்தின் கலை, இலக்கிய அணியின் துணைச் செயலாளர் கை.சரவணன், சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த.யுகேஸ், பொருளாளர் க.கேதீஸ்வரநாதன் நாவலம்பதி ஞானவைரவர் ஆலயத்தின் தலைவர் இ.ராதா ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள்.





பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான உறியடியோடு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்ற இச் சிறுதானியப் பொங்கல் விழாவில் சாமை மற்றும் வரகு அரிசிப் பொங்கல்களும் குரக்கன் கூழும் பரிமாறப்பட்டன. தமிழர்களின் உணவுப் பண்பாட்டில் சிறுதானியங்கள் அருகிவரும் நிலையில், மீளவும் அவற்றின் பயன்பாட்டை ஊக்கிவிக்கும் நோக்கிலேயே சிறுதானியப் பொங்கல்விழா தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் ஆண்டுதோறும் எழுச்சிபூர்வமாக் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# சீனா மீனவர்களை பயன்படுத்தி இந்தியாவை அச்சுறுத்த முடியாது என்கிறது யாழ். மாவட்ட மீனவர் சம்மேளனம் தெரிவிப்பு!

இந்திய அத்துமீறிய இழுவமடி படகுகளால் எமது மீனவர்கள் பாதிக்கப்படுவரும் நிலையில் அதனைப் பயன்படுத்தி சீனா இந்திய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் எம்மை பயன்படுத்துவதற்கு இடமளிக்க மாட்டோம் என யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கிராமிய அமைப்புக்களில் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்தார்.

18ம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சமாசத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த வாரம் சீனா தூதரக அதிகாரிகளை எமது கடற் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் சந்தித்தோம்.

அவர்களை சந்தித்ததன் நோக்கம் கடந்த கொரோனா காலங்கள் மற்றும் இந்திய இழுவைப் படகுகளினால் பாதிக்கப்பட்ட எமது மீனவர்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளை செய்தார்கள்.

அவர்கள் செய்த உதவிக்கு நன்றியை தெரிவித்ததோடு தொடர்ந்தும் இந்திய இழுவைமாடியால் பாதிக்கப்பட்டு வரும் எமது மீனவர்களுக்கு உதவி செய்யுமாறு கோரிக்கை விடுத்தோம். இதே கோரிக்கையை இந்தியா அரசிடமும் முன் வைத்திருக்கிறோம் யார் எமது மக்களுக்கு உதவிக்கரம் நீட்டினாலும் அதை நாம் பெற்றுக் கொள்ள தயாராக இருக்கிறோம்.

இந்தியா அத்துமீறிய இழுவைமடிப் படகுகளால் தொடர்ச்சியாக நாம் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் சீனா எமக்கு உதவி செய்கிறோம் என எமது கடல் பிராந்தியத்தால் இந்திய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் எம்மை பயன்படுத் எதிர்பார்த்தால் அதைச் செய்ய முடியாது.

இந்தியா எமது அயல் நடு அது மாத்திரமல்ல எமது தொப்புள் கொடி உறவு என்ற ரீதியில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக எமது கடலை பயன்படுத்த அனுமதிக்கப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் டிப்பர் மோதி 55 வயது மதிக்கத்தக்க ஆணொருவர் பலி!



யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அரியாலை மாம்பழம் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் 55 வயது மதிக்கத்தக்க ஆணொருவர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளார். குறித்த விபத்து 18ம் திகதி அன்று பிற்பகல் இடம்பெற்றது.



யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த குறித்த நபரின் துவிச்சக்கரவண்டி மீது, யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த டிப்பர் மோதியதில் இந்த விபத்து சம்பவத்தில் உள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. விபத்தினை ஏற்படுத்திய சாரதி யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# இந்த ஆண்டு எம்.பி.க்களுக்கு வாகனங்களோ அல்லது வாகன அனுமதிப்பத்திரங்களோ இல்லை

## ஆனால், யாழ்ப்பாண நூலகத்திற்கு அத்தியாவசிய வசதிகளை வழங்க 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

### இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க அவர்கள் 17ம் திகதி திங்கட்கிழமையன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த நாட்டின் 2025 வரவு செலவுத் திட்டம்





- ந.லோகதயாளன்

2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு மசோதாவினை இலங்கையின் நிதியமைச்சரும் ஜனாதிபதியுமான அனுரகுமார திஸாநாயக்க 17ம் திங்கட்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

அதன் விபரங்களை அவர் ஒவ்வொன்றாகவும் நிதானமாகவும் வாசித்தளித்தார்.

இவ்வருடத்தின் வரவு செலவுத் திட்டத்தில் கடந்த அரசாங்கங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது போன்று வாகனங்களோ அன்றி வாகன அனுமதிப்பத்திரங்களோ அல்லது மதுபான அனுமதிப்பத்திரங்களோ வழங்கப்படவில்லை என்பதும் அதேவேளை யாழ்ப்பாண நூலகத்திற்கு அத்தியாவசிய வசதிகளை வழங்க 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்ட விடயமும் தமிழ் மக்களை நன்கு கவர்ந்த விடயங்களாகத் தெரிகின்றன.

2025 வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு அமைகின்றன.

இதற்கமைய 2025 ஆம் ஆண்டுக்கான வருமானமாக 4,990 பில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், செலவாக 7,190 பில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.அதற்கமைய வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை 2,200 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது ஜனாதிபதி தனது வரவு செலவு திட்ட உரையை இரண்டு மணி நேரம் 45 நிமிடங்கள் ஆற்றினார். அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றம் இன்று பிற்பகல் 2:00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தனது உரையில், "நாம் அனைவரும் ஒன்றாக நாட்டைக் கட்டியெழுப்புவோம், ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்துவோம். இந்த அழகிய புனித பூமி எங்கள் தாய்நாடு என்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்." என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் இனி இன மோதல்கள் இல்லை

தற்போதைய பதில் பொலிஸ்மா அதிபர் மூலம் பொலிஸ் திணைக்களத்தில் உள்ளவர்களுக்கே அதிக தண்டனைகளை வழங்கியுள்ளார்.

வளமான இலங்கை மூலம் அனைவரின் இலக்குகளையும் நிறைவேற்றுதல்.

இந்த நாட்டில் இனி இன மோதல்கள் இல்லை.

இனிமேல் மதம், இனம், பாலினம், வேறு எதுவும் பிரிக்கும் காரணியாக இருக்காது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களையும் எங்களுடன் இணைய அழைக்கிறோம்.

இலஞ்சமற்ற சமூகம்

இலஞ்சம் பெறும் அனைவரும் அஞ்சும் ஒரு சமூகத்தை உருவாக்குதல்.

முதலீட்டாளர்களிடமிருந்து இலஞ்சம் பெற்றால் அவர்களில் யாரையும் நாங்கள் மன்னிக்க மாட்டோம்.

ஊழலின் மூல காரணத்தை முதலில் களைய வேண்டும்.

பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

நாம் அனைவரும் ஒன்றாக ஒரு நீண்ட மற்றும் உறுதியான பயணத்தை மேற்கொண்டுள்ளோம்.

நமது பொருளாதாரம் மிகவும் கடினமான சூழ்நிலையில் உள்ளது, அங்கிருந்து நமது பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

எனவே, வரவு செலவுத் திட்ட கொள்கைகளை கவனமாகப் படிக்குமாறு மக்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அவை எனது தனியான முயற்சி அல்ல, மாறாக நமது அரசாங்கத்தின் கூட்டு முயற்சி.

நமது அரசாங்கத்தில் பலர் நாடாளுமன்றத்திற்கு புதியவர்கள் . எனினும், அவர்களுக்கு நடைமுறை அறிவும் அனுபவமும் இருக்கிறது.

அரசு வருவாய் ஈட்டும் நிறுவனங்கள் டிஜிட்டல் மயமாக்கப்படும்

வரி வசூல் தொடர்பான ஒழுங்குமுறை மற்றும் சட்ட கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்.

அரசு வருவாய் ஈட்டும் நிறுவனங்கள் டிஜிட்டல் மயமாக்கப்படுகின்றன.

நாணயங்களும், பணத்தாள்களும் இல்லாத ஒரு சகாப்தத்தை நோக்கி இலங்கை நகர்ந்து கொண்டிருக்கிறது.

ஊழலைத் தவிர்க்க இது ஒரு நல்ல முடிவு. இந்த முடிவுகளால் முறைகேடாக சொத்துக்களை குவிப்பவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

வரி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க வரி முறை டிஜிட்டல் மயமாக்கப்படுகிறது.

அதிகாரிகளுக்கு தேவையான ஆதரவை நாங்கள் வழங்குவோம். நாட்டுக்கு உங்கள் ஆதரவை வழங்குங்கள்.

வரி செலுத்துவோரின் ஒவ்வொரு ரூபாய்க்கும் நாங்கள் சட்டத்தை நிலை நாட்டுவோம். வரி ஏய்ப்பு மற்றும் சட்டவிரோத நிதி நடவடிக்கைகளைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் உத்தரவாதமாக வழங்கப்படும்

பொது-தனியார் கூட்டாண்மைக்கான புதிய சட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்பு ஓய்வு பெற்ற அனைத்து ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியமும் மூன்று கட்டங்களாக அதிகரிக்கப்படும்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் உத்தேச நாளாந்த ஊதியம் உத்தரவாதமாக வழங்கப்படுதல்.

இவ்வாண்டு சம்பள உயர்வுக்காக 110 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

ஆண்டு சம்பள உயர்வு 250 ரூபாயிலிருந்து 450 ரூபாயாக அதிகரிப்பு.

தனியார் துறை ஊதிய உயர்வை ஏப்ரல் மாதத்திலிருந்து 27,000 ஆகவும், அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து 30,000 ஆகவும் உயர்த்த முதலாளிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்த ஆண்டு சம்பள உயர்வுக்காக 110 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

30, 000 அரச சேசை வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்

அரச சேவையில் குறைந்தபட்ச சம்பளம் 40,000 ரூபாவாக உயர்த்தப்படும்.

வேலையில்லாத பட்டதாரிகள் அதிக அளவில் உள்ளனர்.

அரச சேவையில் காணப்படும் 30, 000 அத்தியாவசிய வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுகிறது. அதற்காக 10,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படுகின்றன.

அரசியல் ரீதியான அடிப்படையில் யாரும் அரச சேவையில் இணைக்கப்படுவதில்லை.

புதிய நீர் வழங்கல் திட்டங்களை நிறைவு செய்ய 2000 மில்லியன்

சமூக நீர் வழங்கல் மற்றும் புதிய நீர் வழங்கல் திட்டங்களை நிறைவு செய்வதற்கு 2000 மில்லியன் ரூபாய்.

தேசிய இலங்கையர் தின கொண்டாட்டத்திற்கு 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

கலைஞர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இது மிக விரைவாக கட்டப்படும்.

பராமரிப்பு இல்லாததால் அடுக்குமாடி குடியிருப்புகளின் அத்தியாவசிய பராமரிப்புக்காக 1000 மில்லியன் ரூபாய்.

தேசிய இலங்கையர் தின கொண்டாட்டத்திற்கு 300 மில்லியன் ரூபாய்.

இது அனைத்து கலாச்சார கூறுகளையும் ஒன்றிணைக்கும் ஒரு விழாவாக கொண்டாடப்படுகிறது.

யானை-மனித மோதலைக் குறைக்க 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

யானை-மனித மோதலுக்கான இழப்பீட்டுக்கு 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்திற்கு 5,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்திற்கு 5,000 மில்லியன் ரூபாய். க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை அரசியல் கோணத்தில் பார்க்க வேண்டாம்.

அனைத்து மக்களும் ஒன்றாக அனுபவிக்கக்கூடிய ஒரு கலாச்சார விழா நடத்தப்படும்.

அஸ்வெசும திட்டத்திற்காக 232.5 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

கிழக்கு மாகாணம் பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்களை சமர்ப்பித்துள்ளது மற்றும் இந்திய அரசாங்கத்திடம் ஆதரவை எதிர்பார்க்கிறது.

பரவலாக்கப்பட்ட வரவு செலவு திட்டத்திற்காக ஒவ்வொரு எம்.பி.க்கும் பத்து மில்லியன் ரூபாய்.

வடக்கில் பாலங்கள் மற்றும் சாலைகளை புனரமைக்க 5,000 மில்லியன் ரூபாய்.

புதிய பேருந்து நிறுவனத்தின் கீழ் புதிய பேருந்துகள் நிறுவப்படும்

நாடு முழுவதும் கிராமப்புற சாலைக-ளின் மேம்பாட்டிற்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்கு கூடுதலாக 3000 மில்லியன் ரூபாய்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் நீண்டகால கடன்களைத் தீர்ப்பதற்கான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

அவிசாவளைக்கு அப்பால் ரயில் பாதை அமைப்பது குறித்த ஆய்வுக்கு 250 மில்லியன் ஒதுக்கீடு.

ரயில் போக்குவரத்து நவீனமயமாக்கப்பட்டது, ரயில்வே திணைக்களத்தை மேலும் திறமையாக்க 500 மில்லியன் ஒதுக்கீடு.

புதிய பேருந்து நிறுவனத்தின் கீழ் புதிய பேருந்துகள் நிறுவப்படும்.

பொதுப் போக்குவரத்து அமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது.

நவீன மற்றும் வசதியான பேருந்துகளின் தொகுப்பு ஒரு சிறந்த திட்டமாக அறிமுகப்படுத்தப்படுகிறது. ஆரம்பத்தில் கொழும்பு நகரின் பிரதான வீதிகளில் நூறு பேருந்துகள் நிறுத்தப்படும். அந்த நோக்கத்திற்காக 3000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

மது ஒழிப்பு சமூக திட்டத்திற்கு 500 மில்லியன் ரூபாய்

தண்டனை கைதிகளுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம்.

மது ஒழிப்பு சமூக திட்டத்திற்கு 500 மில்லியன் ரூபாய்கள்.

மூத்த குடிமக்களுக்கு அதிக வட்டி விகிதங்களை வழங்க 15,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

வெளிநாடுகளுக்குத் திரும்பும் இலங்கையர்களுக்கான விமான நிலைய தீர்வை விலக்கு வரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பண்டிகை உணவுப் பொதிக்கு ஒரு மில்லியன் ரூபாய்.

பேரிடர் இழப்பீட்டுத் தொகை ஒரு மில்லியன் ரூபாய்.

பேரிடர்களால் சேதமடைந்த சொத்துக்களுக்கு இரண்டரை மில்லியன் ரூபாய் இழப்பீடு.

மாற்றுத்திறனாளிகளுக்கான விரிவான தரவுத்தளத்தை நிறுவ 100 மில்லியன் ரூபாய்.

நன்னடத்தை காலத்தில் உள்ள குழந்தைகளின் நலனுக்காக 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

இடம்பெயர்ந்த குழந்தைகளுக்கு நிலையான மற்றும் பாதுகாப்பான வீட்டை அமைக்க ஒரு மில்லியன் ரூபாய்.

தடுப்பு மையங்கள் மற்றும் அனாதை இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு மாதாந்திர உதவித்தொகை 5,000 ரூபாய்.

அனாதைகளுக்கான சமூகப் பாதுகாப்பு அதிகரிக்கப்படுகிறது.

நன்னடத்தை காலத்தில் உள்ள குழந்தைகளின் நலனுக்காக 500 மில்லியன் ரூபாய்.

முதியோர் உதவித்தொகை உயர்வு

சிறுநீரக பிரச்சினை உள்ளவர்களுக்கான மாதாந்திர உதவித்தொகை 7,500 ரூபாவிலிருந்து 10000 ரூபாவாக உயர்த்தப்படும்.

முதியோர் உதவித்தொகை 3,000 ரூபாவிலிருந்து 5,000 ரூபாவாக உயர்த்தப்படும்.

நன்னீர் மீன்பிடித் துறையின் மேம்பாட்டிற்காக 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

இலங்கை இலவங்கப்பட்டை மற்றும் பிற பொருட்களின் உற்பத்திக்காக 250 மில்லியன் ரூபாய்.

தென்னை முக்கோணத்தில் மேம்பாட்டுப் பணிகளுக்காக 500 மில்லியன் ரூபாய்.

வட மாகாணத்தில் 16,000 புதிய ஏக்கர் தென்னை தோட்டங்கள் நிறுவப்படும்.

தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க நாங்கள் பாடுபட்டு வருகிறோம். தேங்காய்க்கான உலகளாவிய தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

நீர்ப்பாசனத் துறையின் மேம்பாட்டிற்காக 78,000 மில்லியன் ரூபாயும், பழைய நீர்ப்பாசன முறைகளை மேம்படுத்துவதற்காக 2000 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு அமைப்பை மேம்படுத்த 100 மில்லியன் ரூபாய்.

பால் உற்பத்தியை அதிகரிக்கவும், மேம்படுத்தவும் 2500 மில்லியன் ரூபாய்.

பயன்படுத்தப்படாத நிலங்களை மேம்படுத்தும் ஆரம்ப பணிக்காக 250 மில்லியன் ரூபாய்.

நெல் கொள்முதல் செய்ய 5,000 மில்லியன் ரூபாய்

விவசாயத்திற்கு புதுப்பிக்கப்பட்ட தரவு அமைப்பை நிறுவுதல். இது போதுமான நெல் பாதுகாப்பு இருப்பை பராமரிக்கிறது.

நெல் விவசாயிகளுக்கு உர மானியம் தொடர்ந்து வழங்கப்படும். இதற்காக ரூ.35,000 மில்லியன் ஒதுக்கப்படும்.

நெல் சந்தைப்படுத்தல் சபை சட்டத்தில் திருத்தம்.

விவசாய அமைச்சகத்திற்கு வழங்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக, மேலும் 500 மில்லியன் ரூபாய்.


மின்சாரச் சட்டம் திருத்தப்படும்

விரைவில் மின்சாரச் சட்டம் திருத்தப்படும்.

குறைந்தபட்ச கட்டணங்களின் அடிப்படையில் எரிசக்தி முதலீடுகளுக்கான வாய்ப்புகளை வழங்குகிறது.

(தொடர்ச்சி 27 பக்கம்)

# தேர்தல் ஆண்டில் ஒரு விகாரை



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**சு**மந்திரன் தமிழரசுக் கட்சி மீதான தன்னுடைய பிடியை இறுக்கி வருகிறார். அதாவது சிறீதரன் மேலும் பலவீனமாக்கப்பட்டிருக்கிறார். கட்சி தொடர்ந்தும் நீதிமன்றத்தில்தான் நிற்கப் போகிறது என்று தெரிகிறது. ஆயின், வரவுள்ள தேர்தல்களை அக்கட்சி எவ்வாறு அணுகப்போகிறது?

தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரிய கட்சி, தான் மட்டுமே என்று அந்தக் கட்சி நம்புகிறது. சிவப்பு மஞ்சள் கொடியை அசைத்தால் வாக்குகள் திரளும் என்றும் நம்புகிறது. எனவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் தன்னால் தனித்து நின்று குறிப்பிடத்தக்களவு ஆசனங்களைப் பெற முடியும் என்று அந்த கட்சி நம்புகின்றதா?

ஆனால் சிவப்பு மஞ்சள் கொடிகளை அசைப்பதால் மட்டும் அல்லது "தாயகம் தேசியம் சுயநிர்ணயம்" என்று தொடர்ச்சியாக மந்திரம் போல சொல்வதனால் மட்டும் தமிழ் வாக்குகளைத் திரட்டி விட முடியாது என்பதைத் தான் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் நிரூபித்து இருக்கிறது. அதிலிருந்தும் கற்றுக் கொள்ளவில்லை என்றால் வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய தரப்பு தொடர்ந்து தோற்கப் போகிறதா?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தோல்விகளிலிருந்து பாடம் கற்றிருப்பதாகத் தோன்றுகின்றது. கடந்த பௌர்ணமி நாளன்று தையிட்டியில் நடந்த போராட்டம் ஒப்பீட்டளவில் வெற்றி. எனினும் அங்கே திரண்டது ஆயிரக்கணக்கான மக்கள் இல்லை. அந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு உள்ள முக்கியத்துவம் என்னவென்றால், அந்தப் போராட்டத்தை தொடர்ந்து ஒரு பேசு பொருளாக வைத்திருந்தது அந்தக் கட்சிதான். அதே சமயம் அந்தப் போராட்டத்தை அடுத்தடுத்த கட்டத்துக்கு மக்கள் மயப்படுத்தத்தவறியதும் அந்தக் கட்சிதான். அவர்களால் அந்தப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்த முடியவில்லை என்பது தான் சரி. கடந்த பௌர்ணமி நாளன்று ஏனைய கட்சிகளும் பங்குபற்றியதால் போராட்டம் ஒப்பீட்டுளவில் எழுச்சிகரமாக நடந்தது.

ஆனால் ஒவ்வொரு போயா தினத்தன்றும் போராடி தையிட்டியை மீட்க முடியாது. நில அபகரிப்புக்கும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கும் எதிரான போராட்டம் மாதத்தில் ஒரு தடவை மட்டும் நடத்தப்படும் ஒன்றாக இருக்க முடியாது. ஏனென்றால் நில அபகரிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் தொடர் நடவடிக்கைகள். பல தசாப்த கால தொடர்ச்சியான நடவடிக்கைகள். மிகவும் நிறுவனமயப்பட்ட, அதிக வளம் பொருந்திய அரசு உபகரணங்களால் முன்னெடுக்கப்படுகின்ற தொடர்ச்சியான நடவடிக்கைகள். இக்கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும்போது கூட எங்கேயாவது ஒரு சிறு குன்றில் ஒரு பௌத்த விகாரைக்கு ஒரு செங்கல் வைக்கப்பட்டிருந்திருக்கும்.

அதாவது சிங்கள பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள், அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் தமிழ் மக்களின் தேசிய இருப்பை அழிக்கும் நடவடிக்கைகள் கடந்த பல தசாப்தங்களாக தொடர்ச்சியாக முன் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக 2009க்கு பின்னரும் அது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் தமிழ் எதிர்ப்புத்தான் குறைந்து போய்விட்டது. இப்படிப்பட்டதோர் பின்னணியில் நில அபகரிப்புக்கும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கும் எதிராகத் தொடர்ச்சியாகப் போராட வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் தமிழ்த் தரப்புக்கு உண்டு. ஆனால் அடுத்த பௌர்ணமி வரை இன்னுமொரு எழுச்சிக்காகக் காத்திருக்க வேண்டிய நிலைமைதான் கள யதார்த்தமா?

கடந்த சில மாதங்களாக தமிழ்த்தேசியக் கட்சிகளை ஒருங்கிணைக்கும் வேலைகளை கஜேந்திரகுமார் முன்னெடுத்து வருகிறார். ஆனால் அந்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் ஒரு புதிய யாப்பை உருவாக்கும் பொழுது தமிழ் தரப்பு தனக்கிடையே ஓர் ஐக்கியத்தைப் பேண வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலானவை. யாப்பு இப்போதைக்கு வருமோ இல்லையோ தெரியாது. ஆனால் தேர்தல் வரும் என்பது மட்டும் தெரிகிறது.

தேர்தல்களை நோக்கி தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ் மக்கள் மத்தியில் இறங்கித் தீயாக வேலை செய்கிறது. ஆயின், வருமோ வராதோ என்று நிச்சயமாகத் தெரியாத ஒரு யாப்புருவாக்க முயற்சி நோக்கித் தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைப்பது சரியா? அல்லது நிச்சயமாக வரக்கூடிய தேர்தல்களை நோக்கி கட்சிகளை ஒருங்கிணைப்பது சரியா?

இந்த ஐக்கியம் தேர்தல்களை நோக்கமாகக் கொண்டது அல்ல என்ற ஒரு வியாக்கியானம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மத்தியில் இருப்பதாகத் தெரிகிறது. தேசத் திரட்சிக்கான ஐக்கியம் இது என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் தேர்தலும் தேசத் திரட்சிக்குள் அடங்கும். தேசத்தைத் திரட்டுவதற்கு உரிய உபாயங்கள் என்று பார்த்தால் தேர்தலும் அதற்குள் வரும். தேர்தல் களம் என்பது ஒப்பீட்டளவில் அதிகரித்த ஜனநாயகப் பண்புடையது. கட்சிகள் வெற்றி வாய்ப்புகளை கவனத்தில் எடுத்து உற்சாகமாக, ஒரு விதத்தில் சுயநலத்தோடு உழைக்கும். அந்தச் சுயநலம் சில சமயம் தேசத்தை திரட்டுவதற்கு எதிரானதுதான். ஆனாலும் தேர்தல் களங்களில்தான் கட்சி அரசியல் அதிகம் சுறுசுறுப்பானதாக, உற்சாகமானதாக இருப்பதுண்டு. எனவே தேர்தல்களைத் தவிர்த்து விட்டு தேசத்தைத் திரட்டப் போகிறோம் என்பது நடைமுறைச் சாத்தியமானது அல்ல. தேர்தல்களில் தமிழ்த் தேசியத் தரப்பு தொடர்ந்து பின்னடைவைச் சந்திக்குமாக இருந்தால் அரசாங்கத்தின் கை மேலோங்கி விடும்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதமர் ஹரிணியின் மேடை ஒன்றில் மானிப்பாயில், அமைச்சர் சந்திரசேகரன் ஆற்றிய உரை எதைக் குறிக்கின்றது? அவர் கூறுகிறார், சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்படும் பெண்கள் தவறாக பயன்படுத்தப்படுவதாக. அதில் அவர் பாவித்த வார்த்தைகள் கடுமையானவை. பொது மேடையில் பயன்படுத்தக் கூடாதவை. சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்படும் பெண்களை அந்த இல்ல நிர்வாகம் தவறாக நடத்துகின்றது அல்லது துஷ்பிரயோகம் செய்கிறது என்ற பொருள்பட அவருடைய உரை அமைந்திருந்தது. அவர் ஒரு அரசாங்க அமைச்சர். சிறுவர் நலன்களுக்கு பொறுப்பான, பெண்கள் நலன்களுக்குப் பொறுப்பான அமைச்சிடம் அதைக் கூறி உடனடியாகவே சட்ட நடவடிக்கை எடுக்கலாம். மானிப்பாயில் ஒரு பொது மேடையில் அதை அவர் கூற வேண்டிய தேவை என்ன?

அதுமட்டுமில்லை, அமைச்சர் சந்திரசேகரன் இந்திய மீனவர்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருக்கிறார். இது மீனவ அமைப்புகளைக் கவரும் நோக்கத்தைக் கொண்டது. இந்திய மீனவர்களால் பாதிக்கப்படும் மீனவர்களை இது உற்சாகப்படுத்தும். இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதன் மூலம் கரையோரப் பகுதியில் உள்ள வாக்காளர்களை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது.

தையிட்டி விகாரை தொடர்பாக அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகள் எவற்றையும் இதுவரை எடுக்கவில்லை. படையினரிடமிருந்து அந்த விகாரை புத்தசாசன அமைச்சிடம் கைமாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் புத்த சாசன அமைச்சும் படைத்தரப்பும் வேறு வேறு அல்ல. இரண்டுமே ஒரே சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் நிகழ்ச்சிநிரலை முன்னெடுக்கும் வெவ்வேறு உபகரணங்கள்தான்.

படையினரிடமிருந்து விகாரையை புத்தசாசன அமைச்சு பொறுப்பெடுத்தால் அந்த விகாரைக்குள்ள ராணுவ பரிமாணம் குறைந்துவிடும். அதனால் தமிழ் எதிர்ப்புக் குறைந்து விடும் என்று அரசாங்கம் கணக்கு போடுகிறது. புத்த சாசன அமைப்பு பொறுப்பெடுத்தால் விகாரை வளாகத்தில் இருந்து படைத்தரப்பு சற்று விலகி நிற்கும். ஆனாலும் படைத்தரப்பின் நிழலில்தான் அந்த விகாரை தொடர்ந்தும் பாதுகாக்கப்படும்.

யாழ். நாக விகாரை ஆகட்டும், நைனா தீவில் உள்ள விகாரையாகட்டும் தையிட்டியில் இருந்து சுமார் 13 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஜம்பு கோளப் பட்டணம் என்று பெயரிடப்பட்டிருக்கின்ற மாதகல் சம்பில் துறையைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள பௌத்த கட்டுமானங்களாகட்டும் எல்லாவற்றையும் படைத்தரப்புத்தான் பரிபாலித்து வருகின்றது. மன்னாரில் திருக்கேதீஸ்வரர் ஆலயத்துக்கு அருகே உள்ள விகாரையும் அப்படித்தான். தொகுத்துச் சொன்னால் தமிழ்ப் பகுதிகளில் உள்ள எல்லா விகாரங்களும் பௌத்த மதக் கட்டுமானங்களும் ஏன் மரபுரிமை சொத்துக்கள் என்று அடையாளம் காணப்பட்ட அகழ்வாராய்ச்சி மையங்களும்கூட படைத்தரப்பினரால்தான் பாதுகாக்கப்படுகின்றன. படைத்தரப்பின் மேற்பார்வைக்குள்தான் அவை பரிபாலிக்கப்படுகின்றன. ஆயுதங்கள் இன்றி பாதுகாக்கப்படும் ஒரு புத்த விகாரையைக்கூட தமிழ்ப் பகுதிகளில் காட்ட முடியாது. இதுதான் இலங்கைத் தீவில் தேரவாத பௌத்தத்தின் நிலை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரும் இந்த நிலைமையில் மாற்றம் இல்லை. இந்த அரசாங்கம் ஏழைகளுக்கு நெருக்கமான ஒரு அரசாங்கமாகத் தன்னைக் காட்டிக் கொள்கிறது. எளிமையான ஒரு அரசாங்கமாக தன்னைக் காட்டிக் கொள்கிறது. இந்த வாரம் வெளியிடப்பட்ட வரவு செலவுத் திட்ட அறிக்கை ஏழை மக்களைக் கவரும் நோக்கிலானது என்று கூறப்படுகிறது. அந்த அறிக்கையை சமர்ப்பித்து ஆற்றிய உரையில் அனுரா பின்வருமாறு கூறுகிறார்..."எங்களில் யாரும் லஞ்சம் எடுப்பதில்லை. அப்படி எடுத்தால் அவர்களுக்கு எந்த மன்னிப்பும் கிடையாது. ஊழல் இல்லாத ஆட்சியை உருவாக்குவேன். லஞ்சம் வாங்கப் பயப்படும் நாட்டை உருவாக்குவேன். அப்படிப்பட்ட ஆட்சியால் மட்டும்தான் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும்."

அவர் கூறுவது சிங்கள மக்களுக்குப் பொருந்தலாம். ஆனால் தமிழ் மக்களுக்குப் பொருந்தாது. தமிழ் மக்கள் ஊழலுக்கு எதிராகவோ அரசு நிர்வாக துஷ்பிரயோகங்களுக்கு எதிராகவோ போராடவில்லை. நமது தேசிய இருப்பை அழிக்கமுப்படும் இன ஒடுக்கு முறைக்கு எதிராகத்தான் போராடி வருகிறார்கள். எனவே தமிழ் மக்கள் கேட்பது தமது தேசிய இருப்பை பாதுகாக்க வேண்டும் என்றுதான்.

ஊழலற்ற ஆட்சியால்தான் நாட்டைக் கட்டியெழுப்பலாம் என்று கூறுவது தவறு. இனவாதமற்ற, இன அழிப்புக்கு பரிகாரம் தரத் தயாராக உள்ள, அதாவது, இனப் பிரச்சினையைத் தீர்க்கத் தேவையான அரசியல் திட சித்தத்தை - "பொலிட்டிக்கல் வில்லைக்" - கொண்டிருக்கும் ஒரு அரசாங்கத்தால் மட்டுந்தான் இச்சிறிய தீவைக் கட்டியெழுப்ப முடியும்.

**வீணாவின் கவிக்கணை**

நமக்கு விழும்
ஒவ்வொரு அடியும்,
நம்மை விட்டு
விலகிச்செல்கையில்,
ஏதோ ஒன்றை நமக்கு
உணர்த்திச்செல்லும்,
அதை சரியாக
புரிந்துகொண்டால்,
அடுத்த அடியில்
ஏற்படவிருக்கும்
பலத்த காயத்திலிருந்து
தப்பித்துக் கொள்ளலாம்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மக்களின் காணிகள் மக்களுக்கே உரித்தாக வேண்டும் என ஜனாதிபதி அநுர யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு!



மக்களின் காணிகள் மக்களுக்கே உரித்தாக வேண்டும் எனவும், வடக்கின் காணிப்பிரச்சினை தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டு, வெகு விரைவில் மக்களுக்கு மீண்டும் காணிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்திக்காக அல்லது பாதுகாப்புக் காரணங்களுக்காக நாட்டின் எந்தப் பகுதியிலும் காணிகளை அரசாங்கம் சுவீகரிக்க முடியும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அந்தக் காணிகளுக்குப் பதிலாக கட்டாயமாக மாற்று காணிகளை மக்களுக்கு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மக்களுக்கான மிக முக்கியமான திட்டங்களுக்காக யாழ்ப்பாணம் கீரிமலையில் உள்ள ஜனாதிபதி மாளிகையை முற்றாக விடுவிக்கத் தயாரெனவும், அதற்கான உரிய முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

போரினால் இடம்பெயர்ந்த குடும்பங்கள் இன்னும் வடமாகாணத்தில் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாகவும், இது குறித்து ஆராய்ந்து விரைவான தீர்மானங்களை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுகாதாரம், கடற்றொழில், சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு, போக்குவரத்து பிரச்சினைகள், ஆளணி குறைபாடு, காணிவிடுவிப்பு உட்பட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆராயப்பட்டது. யாழ் மாவட்டத்தில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை பாராளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும் ஜனாதிபதிக்கு முன்வைத்தனர். அதில் அநேக பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி உடனுக்குடன் தீர்வு வழங்கியதோடு அவை தொடர்பில் கலந்து கொண்ட வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி பணிப்புரைகளை வழங்கினார்.

பிரதமரின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு அரச நிறுவனங்களை நடத்திச் செல்வதற்கு 30,000 வெற்றிடங்கள் காணப்படுவதாக அடையாளம் கண்டுள்ளதென தெரிவித்த ஜனாதிபதி, ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்பதோடு, பட்டதாரிகளுக்கும் இதன்போது வாய்ப்பு கிட்டும் என்றும் தெரிவித்தார்.

இதில், பொலிஸ் திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு தமிழ் பேசும் இளைஞர் யுவதிகளுக்கு அதிக வாய்ப்புகள் வழங்கப்படும் எனவும், விண்ணப்பிப்பதற்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பரந்தன், மாங்குளம், காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் மூன்று புதிய கைத்தொழில் வலயங்களை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், யுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிய இலங்கையர்களை முதலீடு செய்ய அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தின் மீது விசேட அக்கறை செலுத்தி அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

தீவுப் பகுதிகளில் போக்குவரத்து சீராக இல்லை எனவும் கிராமப் புறங்களில் சிறுவீதிகளை இணைத்து முன்னெடுக்கப்பட்ட பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.றஜீவன் இங்கு தெரிவித்தார். கிராமப் புறங்களில் கூடுதலான பஸ்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். வீதி அபிவிருத்தி தொடர்பாகவும் தீவுகளுக்கான போக்குவரத்து குறைபாடுகள் குறித்தும் படகு சேவைகள் ஆரம்பிப்பது பற்றியும் மக்கள் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டனர்.

தற்போதைய அரசாங்கம் வடக்கு மாகாணத்தில் போக்குவரத்து கட்டமைப்பை பலப்படுத்த வலுவான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது. அதன்படி இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்கள் இணைந்து செயற்படும் திட்டமொன்றை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. வட. மாகாணத்திற்கான புகையிரத சேவைகளை அதிகப்படுத்துவது தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

அடுத்த வருடம் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இந்த நாட்டிற்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், வடமாகாணத்தில் சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய புதிய சுற்றுலாத் தலங்கள் இனங்காணப்பட்டு அவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி இங்கு தெரிவித்தார்.

வடக்கில் சில துறைகளில் காணப்படும் ஆளணிக் குறைபாடு தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது. வடமாகாண அரச சேவைக்கான புதிய ஆட்சேர்ப்புகளை அரசியல் அதிகாரத்தின் தலையீடு இன்றி தீர்த்து வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும், அரச சேவையை வடக்கில் மேலும் பலப்படுத்துவதாகவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உறுதியளித்தார்.

கடற்றொழில் பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்பட்டதோடு இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாகவும் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது குறித்தும் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் குறிப்பிட்டார்.

மீன்பிடி பிரச்சினைக்கு தீர்வுகாண இராஜதந்திர ரீதியில் அதிகபட்சமாக தலையீடு செய்வதாக ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார்.

மீன்பிடித்துறைமுகம், மீனவர்களுக்கான வீட்டுத்திட்டம், தீவுகளுக்கான படகுச் சேவைகளில் உள்ள குறைபாடுகள் பற்றியும் இங்கு ஆராயப்பட்டது.

நீர்ப் பிரச்சினை தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டிருந்ததோடு நீர்விநியோக திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி முன்னேடுப்பது குறித்து வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கோரிக்கை முன்வைத்தார். நாட்டிலேயே மிகக் குறைந்த அளவு குழாய் நீரை பயன்படுத்தும் மாகாணமாக வடமாகாணம் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், தற்போது வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நீர் திட்டங்கள் துரிதப்படுத்தப்படும் என்பதுடன், இம்முறை வரவு செலவு திட்டத்தில் புதிய நீர் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு மக்களுக்கு பாரிய பிரச்சினைகள் இருப்பதை ஏற்றுக்கொள்வதாக கூறிய ஜனாதிபதி, வடக்கின் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம் உட்பட முழு அரச சேவையையும் மேலும் வலுப்படுத்துவது குறித்து விசேட கவனம் செலுத்துவதாகவும் குறிப்பிட்டார். மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த அரச-ியல் அதிகார தரப்பும் அரச பொறிமுறையும் இணைந்து செயற்பட வேண்டுமென ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் முக்கியமாக ஆராயப்பட்டதோடு தெல்லிப்பளை புற்றுநோய் ஆஸ்பத்திரியில் காணப்படும் குறைபாடு குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து வெளியிட்டார். சீரீ ஸ்கேனிங் இயந்திரம், அவசர சிகிச்சைப் பிரிவு போன்ற குறைபாடுகள் தொடர்பில் அவர் உரையாற்றியதோடு அவை அவசர தேவையாக உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

மேலும், தமிழ் புற்றுநோயாளர் மகரகமையில் இருந்து இங்கு அனுப்புவதில் ஏற்படும் சில சிக்கல்கள் குறித்தும் சிறிய ஆஸ்பத்திரிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாக வைத்தியர் ராமநாதன் அச்சுனா எம்.பி கருத்து முன்வைத்தார். வைத்தியர் இடமாற்றங்களினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து எஸ்.ஸ்ரீதரன் எம்.பி மற்றும் வைத்தியர் சரவணபவநந்தன் சண்முகநாதன் ஆகியோர் கருத்து வெளியிட்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள கிராமிய வீதிகளை புனரமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டதோடு 180 கிலோ மீட்டரை விட அதிக வீதிகளை திருத்த வேண்டியுள்ளதாகவும் தீவுகளில் உள்ள வீதிகளே அதிகம் சேதமடைந்துள்ளதாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் இங்கு சுட்டிக்காட்டினர். வீதி அபிவிருத்தி தொடர்பில் வடமாகாண எம்.பிகள் சிலரும் கருத்து வெளியிட்டனர்.

வடக்கிலுள்ள கிராமிய வீதிகளை புனரமைக்க இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் 5 பில்லியன் ரூபா விசேட நிதி ஒதுக்கீடு செய்வதாகவும் அதனை முழுமையாக பயன்படுத்துமாறும் ஜனாதிபதி தெரிவித்தார்.

யாழ் நகர மண்டப எஞ்சிய நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வது குறித்தும் ஆராயப்பட்டது. இதற்கான இந்த வருடம் 400 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதோடு கட்டடத்தை பயன்படுத்தக் கூடிய வகையில் அதனை அமைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

கடவுச் சீட்டு பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்த ஜனாதிபதி, யாழ் மாவட்டத்தில் கடவுச்சீட்டு அலுவலகமொன்றை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதற்கான அலுவலகம் அமைப்பது தொடர்பில் மாவட்ட செயலாளருடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மாற்றுத் திரனாளிகளுக்கு அரச நியமனம் வழங்குகையில் வாய்ப்பு வழங்க வேண்டும் என இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதேசவாசி ஒருவர் கோரினார். தொழில்வாய்ப்பு வழங்குகையில் மாற்றுத்திரனாளிகளுக்கு குறிப்பிட்ட ஒதுக்கீடொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

அதேநேரம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பங்கேற்றிருந்த யாழ். மாவட்ட சுகாதார, போக்குவரத்து, நீரியல் வளத்துறை, போக்குவரத்து துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்ததுடன் அவர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி சாதகமான தீர்வுகளை கூறினார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன் கருணானந்தன், வைத்தியர் சரவணபவநந்தன் சண்முகநாதன், ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி, சிவஞானம் சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மற்றும் இராமநாதன் அர்ச்சுனா, வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், வடமாகாண பிரதமச் செயலாளர் எல்.இளங்கோவன், யாழ்.மாவட்டச் செயலாளர் எம்.பிரதீபன் ஆகியோருடன் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் வட பிராந்தியத்திற்குப் பொறுப்பான முப்படை அதிகாரிகள் உட்பட அரச அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் எம்.பி பயணித்த வாகனம் விபத்துக்குள்ளானது






யாழ்ப்பாண மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் எளையபாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் பயணித்த கார் சாவகச்சேரி தனங்கிளப்பு பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிக்கும் பொழுது முன்னால் சென்று கொண்டிருந்த வடி ரக வாகணம் சாவகச்சேரி நோக்கி திருப்பிய வேளை பின்னால் வந்த பாராளுமன்ற உறுப்பினரின் கார் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அவரது உதவியாளர், சாரதி மூவரும் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரியாலையில் அமைந்துள்ள சித்துப்பத்தி இந்து மயான மனிதப் புதை குழியை பார்வையிட்ட கஜேந்திரகுமார் MP



அரியாலையில் அமைந்துள்ள சித்துப்பத்தி இந்து மயானத்தில் மனித எச்சங்கள் காணப்படுகின்றன. அந்த மயானத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் ஆகியோர் 15ம் திகதி சனிக்கிழமையன்று பார்வையிட்டனர்.



# வட்டுக்கோட்டையில் இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்துகொண்ட நிகழ்வில் பெரும்திரளான மக்கள்



பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்துகொள்கின்ற மக்கள் சந்திப்பானது 15ம் திகதி சனிக்கிழமை அன்றையதினம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள மோகன் அரங்கில் ஆரம்பமாகியது.

இதில் அமைச்சர் சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஶ்ரீ பவானந்தராஜா, இளங்குமரன், ரஜீவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்வு — 2025





யாழ்ப்பாண மாவட்டச் செயலகமும் சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து நடாத்தும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்வு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் 14ம் திகதி வெள்ளிக்கிழமை MED செயற்றிட்ட தலைவர் திருமதி. ஞானரதன் பிரியரஜினி, அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மாற்றுத்திறனாளிகளின் திறன்களை மேம்படுத்தும் வகையில் மாவட்ட மட்டத்தில் இத் தடகள விளையாட்டுப்போட்டி இடம்பெற்றது.

7 வகையான மாற்றுத்திறனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 87 வகையான விளையாட்டுக்கள் நடைபெற்றன.

இவ் மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட மட்ட தடகள விளையாட்டுப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலகம் முதலாவது இடத்தினையும், பருத்தித்துறை பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தினையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டார்கள். மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட தடகள விளையாட்டு போட்டியில் வெற்றியீட்டிய விளையாட்டு வீரர்களுக்கு சான்றிதழ்களும், வெற்றிக் கேடயங்களும் வழங்கிவைக்கப்பட்டது.



மேலும் இந் நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாற்றுத் திறனாளிகள், பெற்றோர்கள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டிருந்தார்கள்.

# யாழ்ப்பாணத்தில் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பெண் மயக்கமடைந்த நிலையில் உயிரிழப்பு!

யாழ்ப்பாணத்தில் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இதன்போது விடத்தல்பளை, மிருசுவில் பகுதியைச் சேர்ந்த நடராசலிங்கம் புஸ்பராணி (வயது 67) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண் கடந்த 08 - 11 ஆம் திகதி வரை காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் 11ஆம் திகதி சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி 15ம் திகதி அன்று அதிகாலை உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

# யாழ்ப்பாணத்தில் கல்சியத் தண்ணீரை குடித்த முடியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணத்தில், கல்சியத் தண்ணீரை அருந்திய முதியவர் 15ம் திகதி சனிக்கிழமை உயிரிழந்துள்ளார். கலாசாலை வீதி, திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த ராசன் மைக்கல் (வயது 85) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், இவர் கடந்த 14 ஆம் திகதி தவறுதலாக கல்சியம் கலந்த தண்ணீரை அருந்தியுள்ளார். இந்நிலையில் சிகிச்சை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி 15ம் திகதி சனிக்கிழமை அன்றையதினம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

# இலங்கை அரசின் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்






யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருகை தந்த இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ.சுனில்குமார கமகே அவர்களும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் .மருதலிங்கம் பிரதீபன் அவர்களும் இணைந்து யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கினை 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்றையதினம் பார்வையிட்டனர்.

இதன்போது துரையப்பா விளையாட்டு அரங்கின் தேவைப்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்தனர். குறிப்பாக ஒளியமைப்பு வசதிகள், பராமரிப்பு வசதிகள் மற்றும் உள்ளக அரங்கு அமைப்பது தொடர்பாகவும் ஆராய்ந்ததோடு இதற்கான திட்ட முன்மொழிவு பொறிமுறை ஒன்றினை உருவாக்கித் தருமாறு கௌரவ அமைச்சர் அவர்கள் அரச அதிபரிடம் கேட்டுக்கொண்டார்.

மேலும் வேலனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஏற்கனவே சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட காணி தொடர்பாகவும் அதனுடைய தற்போதைய நிலைமை தொடர்பாகவும் கௌரவ அமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் வேலணை பிரதேச செயலாளர் திரு.க.சிவகரன் அவர்களும் கலந்து கொண்டார்.

# யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இல்ல அலங்காரத்துக்கு தடை – பழைய மாணவன் மீதும் தாக்குதல்!





யாழ்ப்பாணம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் 20ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியின் போது இல்ல அலங்காரங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-,

குறித்த பாடசாலையில் கடந்த வருடம் இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் நடைபெற்ற போது இல்லங்கள் கார்த்திகைப் பூ மற்றும் பீரங்கி அமைப்பு போன்ற வடிவில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் பாடசாலையின் நிர்வாகத்தினர் விசாரணைக்கு அழைக்கப்பட்டு இருந்தனர். அந்த விசாரணைகள் இதுவரை முடிவுக்கு வரவில்லை.

இது இவ்வாறு இருக்கையில் இந்த ஆண்டு இல்லங்களுக்காக போடப்பட்ட பந்தலில் அலங்காரங்கள் செய்வதற்கு பாடசாலை நிர்வாகத்தால் தடை விதிக்கப்பட்டதாக பாடசாலையின் நெருங்கிய தரப்பினரால் குற்றம் சாட்டப்படுகிறது. அத்துடன் சாதாரண அலங்காரம் கூட செய்ய வேண்டாம் என தடை விதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அலங்காரம் செய்வதற்கு முயன்ற பழைய மாணவன் மீதும் ஆசிரியர் ஒருவர் 19ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் தாக்குதல் நடாத்தியதில் அந்த மாணவன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை உறுதிப்படுத்தியது.

இச்சம்பவம் குறித்து வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் யமுனா அவர்களை தொடர்புகொண்டு வினவியவேளை, தாங்கள் அலங்காரங்களுக்கு இவ்வாறு தடை விதிக்கவில்லை என கூறியதுடன் தாக்குதல் சம்பவம் குறித்தும் இதுவரை தகவல் வெளியாகவில்லை என தெரிவித்தார்.

இது குறித்து பாடசாலை அதிபரை தொடர்புகொண்டு வினவிய வேளை, மாணவர்கள் கடந்த ஆண்டு வீட்டில் வைத்து அலங்காரங்களை செய்துவிட்டு அதனை கொண்டுவந்து இல்லங்களை அலங்கரித்ததால் பாரிய பிரச்சினை ஏற்பட்டது. அந்த விசாரணைகள் இதுவரையும் முடிவுறுத்தப்படவில்லை. இதனால் நாங்கள் மிகுந்த மனவுளைச்சலுக்கு உள்ளாகியுள்ளோம்.

இல்லங்கள் எல்லாம் இந்த ஆண்டு திருப்திகரமாக தான் அமைக்கப்பட்டது. இல்ல அலங்காரங்களுக்கு புள்ளிகளும் வழங்கினோம். எம்மீது குற்றம்சாட்டிய தரப்பினர் யார் என்று கூற வேண்டும். அவ்வாறு கூறாமல் செய்தி பிரசுரித்தால் அந்த செய்திக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்வேன்.

இந்த ஆண்டு, அலங்காரங்கள் குறித்து எந்த தரப்பினராலும் எமக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில்லை. அத்துமீறி உள்நுழைந்து அலங்காரம் மேற்கொண்ட பழைய மாணவரை நாங்கள் தடுத்து நிறுத்தினோம். அவர்மீது நாங்கள் தாக்குதல் நடாத்தவில்லை என்றார்.

Carefirst Family Health Team

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.

அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.



Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca




11/24

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு முன்னாயத்த கலந்துரையாடல்



மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையின் தலைவர் ராமகிருஸ்ணன் கலந்து கொண்டார்.

மேலும் பிரதேச செயலாளர்கள்,திணைக்கள தலைவர்கள்,அரச தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகள், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்வரும் 26 ஆம் திகதி (26-02-2025) இடம்பெற உள்ள மகா சிவராத்திரி விழாவிற்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கடந்த வருடங்களை போன்று இம்முறையும் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்ள உள்ள நிலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக போக்குவரத்து ஒழுங்குகள்,சுகாதாரம்,மின்சாரம்,நீர் விநியோகம்,உணவு,பாதுகாப்பு,மருத்துவ வசதிகள்,உள்ளடங்களாக முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து விடையங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கடற்றொழில் அமைச்சரின் அழைப்பில் முல்லைத்தீவுக்குச் சென்ற தமிழ் தாய்மார்களுக்கு இலங்கைப் பிரதமரின் "கதவு மூடப்பட்டது"

பொதுத் தேர்தல் பிரச்சாரத்தின் போது வன்னி தமிழ் மக்களின் கோரிக்கைகளை எழுத்து மூலம் பெற்றுக்கொண்ட தற்போதைய பிரதமர், மீண்டும் பிரதமரான பின்னர் தமது பிரதேசத்திற்கு வந்தபோது அவரைச் சந்திக்கும் வாய்ப்பை இழந்தமை தொடர்பில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்த் தாய்மார்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர் என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

2025 பெப்ரவரி 16 ஆம் திகதி முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற தேர்தல் வெற்றியைக் கொண்டாடும் பொதுக் கூட்டத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்துகொண்டார்.

மேற்படி கூட்டத்திற்கு இலங்கை மீன்பிடி அமைச்சர் சந்திரசேகரன் அவர்களின் அழைப்பின் பேரில் பிரதமரை சந்திக்க வந்த போதும் பிரதமரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவரை சந்திக்கும் வாய்ப்பை தடுத்ததாக, பூர்வீக நிலத்தை மீட்பதற்காக பல வருடங்களாக போராடி வரும் கேப்பாப்புலவைச் சேர்ந்த விவேகானந்தன் இந்திராணி, முல்லைத்தீவு ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி குற்றம் சுமத்தியுள்ளார்.

"கடற்றொழில் அமைச்சர் ஒரு மணிக்கு வருமாறும் சந்திக்க முடியுமெனவும் குறிப்பிட்டார். அனுமதி பெற்றுதான் நாங்கள் வந்தோம். இங்கு வந்தால் ஒரு நிமிடமேனும் சந்தித்து, உங்கள் பிரச்சினைகள் என்ன? உங்களுக்கு என்ன நடந்தது என எந்த கதையையும் கேட்கவில்லை. நாங்கள் கடிதம்கூட கொண்டுவரவில்லை, காரணம் கடந்த 2024ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்திற்காக இவர் புதுக்குடியிருப்பு பகுதிக்கு வந்தபோது கேப்பாப்புலவு மக்களாகிய நாங்கள் இவருக்கு மகஜர் ஒன்றை கையளித்திருந்தோம். ஆகவே தொடர்ந்து மகஜர்களை கொடுத்து ஏமாந்தமையால் நேரில் கதைக்கும் எண்ணத்துடன் வந்தோம். எனினும் ஒரு நிமிடமேனும் சந்திக்க அனுமதிக்கவில்லை."

முல்லைத்தீவு மாவட்டத்தில், இராணுவத்தினரால் பூர்வீக நிலங்களை பலவந்தமாக கையகப்படுத்தியதன் காரணமாக, சுமார் ஒன்றரை தசாப்தங்களாக காடுகளுக்கு நடுவில் அரசாங்கத்தால் நிறுவப்பட்ட கிராமத்தில் சிக்கித் தவித்த தமிழ் மக்கள் குழு உடனடியாக தமது காணிகளை விடுவிக்குமாறு 2024 நவம்பரில் புதிய பிரதமரிடம் கோரியது.

நூற்றுக்கணக்கான ஏக்கர் தமது சொந்த நிலத்தை மீட்டு வாழவும், வாழ்வாதாரத்தை தக்கவைக்கவும் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக போராடி வரும், முல்லைத்தீவு, கேப்பாபுலவு பிரதேச மக்கள் பொதுத் தேர்தல் பிரச்சாரத்திற்காக முல்லைத்தீவுக்கு வந்திருந்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவிடம் எழுத்து மூலம் இந்த கோரிக்கை விடுத்திருந்தனர்.

மூன்று தசாப்தங்களாக வடக்கில் நடத்தப்பட்ட கொடூரமான உள்நாட்டுப் போர் இரத்தக்களரியுடன் முடிவடைந்த பின்னரும், இலங்கை அரசின் பாதுகாப்புப் படையினரால் தமிழர்களின் காணிகளை பலவந்தமாக கையகப்படுத்தியதன் காரணமாக பூர்வீக நிலங்களை இழந்து வறுமையில் வாடும் தமிழ் மக்கள் இன்னமும் தமது காணிகளைப் பெறுவதற்கான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

2025 பெப்ரவரி 16ஆம் திகதி தேர்தல் வெற்றியை கொண்டாடும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதமர் ஹரிணி அமரசூரியவை சந்திக்கும் வாய்ப்பை பிரதமரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மறுத்ததாக குற்றம் சுமத்தும் விவேகானந்தன் இந்திராணி, பிரதேச மக்களின் காணிப்பிரச்சினை தொடர்பில் எதுவுமே தெரியாத ஒருவர் பிரதமரின் இணைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார்.

"சிவரூபன் என்ற ஒருவரை இணைப்பாளராக நியமித்துள்ளனர். அவர் அபிவிருத்தி தொடர்பிலேயே கதைக்கின்றார். கேப்பாப்புலவு என்ற வரலாறு வெளிநாடு என எங்கோ எல்லாம் போயுள்ளது. ஆனால் மாவட்ட இணைப்பாளருக்கு கேப்பாப்புலவு காணி பிரச்சினை இருக்கிறது. காணி விடுவிப்பு அதுத் தொடர்பில் எதுவும் தெரியாத ஒருவரை மாவட்ட இணைப்பாளராக போட்டுள்ளனர். அவரிடமும் சந்திப்பதற்கு நாங்கள் ஒரு நிமிடம் கேட்டோம். எனினும் அவருக்குரிய பாதுகாப்பு படையினர் நீங்கள் போக முடியாது என எங்களை தள்ள ஆரம்பித்தனர். ஆகவே நாங்கள் இன்னமும் ஏமாந்துகொண்டிருக்க முடியாது. எனவே எஞ்சிய இந்த 59 ஏக்கர் காணியை பெறுவதற்கு மக்களாகிய நாங்கள் முன்பு போல் போராட வேண்டும்."

கடந்த 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது, தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகளை பலவந்தமாக அரசாங்க இராணுவம் கையகப்படுத்தியதோடு, ஆயிரக்கணக்கான உயிர்களையும் உடைமைகளையும் அழித்து ஆரம்பிக்கப்பட்ட அந்த போருக்கு தற்போதைய ஜனாதிபதியின் தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியின் பலத்த ஆதரவு கிடைத்தது.

கேப்பாபுலவு மாதிரிக் கிராமத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் தமது காணிகளை தமக்கு விரைவில் பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்தி 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ஆம் திகதி பிரதமரிடம் கடிதம் ஒன்றைக் கையளித்தனர்.

அரச நிலைப்பாட்டின்படி கேப்பாபுலவு கிராமத்து மக்கள் "மீள்குடியேற்றம்" செய்யப்பட்டுள்ளார்கள், ஆனால் உண்மை நிலை என்பது, அந்த நிலத்திற்கு உரிய குடும்பங்கள் தமது சொந்த நிலங்களிலிருந்து வலிந்து வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

எதற்கெடுத்தாலும் "தேசியப் பாதுகாப்பு" என்ற போர்வையில் நடவடிக்கைகளை முன்னெடுத்த மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் 2012 ஆம் ஆண்டு, கேப்பாபுலவு கிராமத்திலிருந்து வலிந்து வெளியேற்றப்பட்ட குடுமங்களை சீனியாமோட்டை என்ற பகுதியில் காட்டை ஓரளவுக்கு சீர் செய்து அங்கு குடியமர்த்தினர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பரந்துபட்டளவில் நிலங்களை இராணுவம் கபளீகரம் செய்து அங்கு கட்டடங்களை கட்டியுள்ளன. அதன் மூலம் அந்த நிலங்களுக்கு சட்டரீதியாக உரியவர்கள் காட்டுப்பிரதேசத்தில் அவர்களது விருப்பத்திற்கு மாறாக குடியேற்றப்பட்டுள்ளனர்.



கேப்பாபுலவு மக்கள் வலிந்து குடியேற்றப்பட்ட மக்கள் மிகவும் அவலமான ஒரு நிலையில் வாழ்ந்து வருவதற்கு ஐக்கிய நாடுகள் சபையும் காரணம் என குற்றஞ்சாட்டப்படுகிறது. அந்த சமயத்தில் இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதியாக காலஞ்சென்ற கலாநிதி சுபிநாய் நந்தி இருந்தார்.

உடனடியாக அந்தப் பகுதியைச் சேர்ந்த தனி நபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு உரிய 70 ஏக்கர் நிலங்களை விடுவிக்க வேண்டும் என பிரதமரிடம் கடந்த வருடம் நவம்பர் கையளிக்கப்பட்ட கடிதத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

"இங்கு 55 குடும்பங்களுக்கு சொந்தமான 59.5 ஏக்கர் காணிகள், 3 நபர்களுக்கு உரிய 11.5 ஏக்கர் காணிகள், 3 நபர்களுக்கு உரிய 75 ஏக்கர் காணிகள் (25 வீட்டுத்திட்டம்), 104 குடும்பங்களுக்கு சொந்தமான 84.5 ஏக்கர் காணிகள், 6 நபர்களுக்கு சொந்தமான 86 ஏக்கர் காணிகள். 9 குடும்பங்களுக்குச் சொந்தமான 25 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். மேலும் கடற்கரையோரப் பிரதேசங்களில் மீனவ சமூகத்தினர் காலங்காலமாக மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். அந்த பகுதிகள் எல்லாம் கடந்த 50 ஆண்டுகளாக இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது".

கேப்பாப்புலவு மக்கள் எதிர்கொள்ளும் கடும் சிரமங்கள் ஐ.நா உட்பட பல்வேறு அமைப்புகளால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கடந்த வருடம் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

கடந்த 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ஆம் திகதி, ஐ.நாவின் அகதிகளுக்கான அமைப்பு அவர்களது இன்னல்கள் குறித்து அறிக்கையிட்டிருந்தது.

"உலகத்திற்கு நாங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுவிட்டதாக ஒரு பொய் பரப்படுகிறது" என்று உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களில் ஒருவரான 43 வயதை உடைய சிவகுரு ஐங்கரமுத்து உதயகுமாரி மெனிக் பாமில் பேருந்து ஒன்றில் செல்லும் போது, தான் எங்கு கொண்டு செல்லப்படுகிறோம் என்பது தெரியாமலேயே பேருந்தில் அழைத்துச் செல்லப்படுவதாக ஊடக நிறுவனம் ஒன்றிடம் அவர் தெரிவித்ததாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"போருக்கு பின்னர் மெனிக் பார்ம் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த அவர்கள் கேப்பாபுலவிலுள்ள தமது சட்டபூர்வமான சொந்த நிலங்களுக்கு அனுப்பப்படுவதற்கு பதிலாக, இலங்கையில் வடமேற்கே உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில், அரசுக்கு சொந்தமான வேறு இடத்திற்கு அனுப்பப்பட்டனர். ஏனென்றால் அவர்களது நிலங்களை இராணுவம் வலிந்து அபகரித்து தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது, எனவே அவர்களால் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியுமா, இல்லையா, அல்லது ஏதாவது இழப்பீடுகள் அவர்களுக்கு இடைக்குமா இல்லையா என்பதை அறிய அவர்கள் காத்திருக்க வேண்டும்" என்று 2102 ஆம் ஆண்டு அவர்கள் தொடர்பிலான அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

2012 செப்டெம்பர் 24ஆம் திகதி அவர்களை அவர்களது காணிகளில் குடியமர்த்துவதற்குப் பதிலாக, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த தற்போதைய வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் அவர்களை பலவந்தமாக "மாதிரி கிராமத்திற்கு" குடியேற்றியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

"நாங்கள் எமது சொந்த பூமியிலேயே அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மறுபுறம், எமது சொந்த நிலங்களில் இராண்டும் மகிழ்ச்சியாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். எமது பூர்வீக இடத்தை இராணுவத் தலைமையகமாக அறிவித்துள்ளனர். இத் ஊழல் இல்லையா? முந்தைய இராணுவத் தலைமையகம், இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. எமது பூர்வீக நிலம் எப்போது இராணுவத் தலைமையகமாக இருந்தது? மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் எப்படி இராணுவப் பாதுகாப்பு தலைமையகத்தை அமைக்க முடியும்?" என அடுக்கடுக்கான கேள்விகளை பிரதமரிடம் கையளித்த கடிதத்தில் அவர்கள் வினவியிருந்தனர்.

இலங்கையின் அரசாங்கங்கள் தமிழ் மக்களை மீள்குடியேற்றியதாக கூறி சர்வதேச சமூகத்தை ஏமாற்றிவிட்டதாக குற்றம் சுமத்துகின்ற தமிழ் மக்கள், சர்வதேச அமைப்புகளால் அடிப்படை உரிமையாக வகைப்படுத்தப்பட்டுள்ள முறையான கழிவறை வசதிகள் மற்றும் குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் அக்கிராமங்களில் இல்லை எனவும் அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பாரம்பரிய தமிழர் தாயக காணிகள் படையினர் வசம் காணப்படுவதாக தமிழ் பிரதிநிதிகள் குறிப்பிடுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் 1,673 ஏக்கர் தனியார் காணிகளை ஆயுதப்படையினர் இன்னமும் ஆக்கிரமித்துள்ளதாக, 2025 ஜனவரி 31 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவிடம் மாவட்டச் செயலாளர் மருததலிங்கம் பிரதீபன் குறிப்பிட்டிருந்தார்.

"இது தான் ஒரு ஜனநாயக நாட்டில் நீதியா?" என பிரதமரிடம் கடந்த வருடம் நவம்பர் 4ஆம் திகதி கையளித்த கடிதத்தில் கேப்பாப்புலவு தமிழர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.






மீண்டும் தேர்வு செய்யுங்கள்
விஜய் தணிகாசலம்
ஸ்காபரோ றூஜ் பார்க் PC வேட்பாளர்
RE-ELECT
FEB
27
2025
ONTARIO PC
விஜயின் அணியில் இணைந்து ஆதரிக்க அழையுங்கள்
vijaythani.ca
info@vijaythani.ca
416-354-6320
221 Morrish Rd
Authorized by the CFO for the Vijay Thanigasalam Campaign


ONTARIO PC
மீண்டும் தெரிவு செய்யுங்கள்
அரிஸ் பாபிகியன்
ஸ்கார்பாரோ-அஜின்கோர்டுக்கான பிசி வேட்பாளர்
"முடிவுகளை வழங்கக் கூடிய உங்களுக்கான குரல்"
- ஷெப்பர்ட் சுரங்கப் புகையிரதப் பாதை கிழக்கு நீட்டிப்பை முன்னேற்றுதல்
- புதிய பிர்ச்மவுண்ட் மருத்துவமனையை உருவாக்க 1 பில்லியன் டாலர் முதலீடு
- மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு நபரையும் ஒரு குடும்ப மருத்துவரிடம் இணைக்க 1.8 பில்லியன் டாலருக்கும் அதிகமாக முதலீடு செய்தலவர்
- தமிழ் சமூக மையம் அமைப்பதற்கான நிதியைப் பெற உதவியவர்
- பிரிட்லெட்டவுன் சமூகம் மற்றும் சுகாதார மையத்தை உருவாக்க உறுதியான நிதி ஒதுக்கியவர்
- க்ரைம்-ஹேவன் ஸ்கார்பாரோ டெல்டா ஹாஸ்டலை மூடுவதற்கு வாதிடப்பட்டது
எங்களுக்கு உங்கள் உதவி தேவை!
ஆரம்பத்தில் தன்னார்வத் தொண்டு, நன்கொடை மற்றும் வாக்களிப்பதன் மூலம் அரிஸ் பாபிகியன் அவர்களுக்கு தங்கள் ஆதரவை வழங்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அழைக்கவும்: (416) 775-9510
அரிஸ் பாபிகியன் அவர்களுக்கு உங்கள் வாக்குகளை அளியுங்கள்!
அரிஸ் பாபிகியன் பிரச்சாரத்திற்காக CFO ஆல் அங்கீகரிக்கப்பட்டது.

# ONTARIO PC

**DOUG FORD AND RAYMOND CHO ARE FIGHTING FOR A STRONGER ONTARIO**
**வலுவான ஒன்டாரியோவைப் பாதுகாக்க போராடுவோம்**

We need a strong mandate from the people for our plan to protect Ontario.
ஒன்டாரியோவைப் பாதுகாக்க எமக்கு மக்களின் உறுதியான ஆணை வேண்டும்.

- Building Our Economy - எமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவோம்
- Protecting Workers - தொழிலாளர்களைப் பாதுகாப்போம்
- Keeping Us Competitive - போட்டிமிகுத் தன்மையை பேணுவோம்
- Cleaning Up Our Streets - தெருக்களை சுத்தம் செய்வோம்
- Delivering Better Care - சிறந்த சுகாதார சேவையை வழங்குவோம்

**MOVING SCARBOROUGH FORWARD - STRONGER & BETTER**
**ஸ்காபரோவை மேலும் வலுவாக, சிறப்பாக முன்னேற்றுவோம்!**

- *2 new Subway Lines* - இரண்டு புதிய *Subway* பாதைகள் ✓
- *A new Birchmount Hospital* - புதிய *Birchmount* மருத்துவமனை ✓
- *New UTSC Medical School* - புதிய மருத்துவக் கல்லூரி ✓

DELIVERED

NEW

*Sheppard East Subway Extension - Construction Completion A Year Sooner*
*Sheppard East Subway* விரிவாக்கம் - ஒரு வருடத்திற்குள் பூர்த்தி

*NEW GO Line serving Scarborough*
ஸ்காபரோவிற்கு புதிய *GO Line* சேவை

*Hwy 401 Eastbound Rebuild & Upgrade*
நெடுஞ்சாலை *401* கிழக்கு புனர்நிர்மாணம், மேம்படுத்தல்

VOTE

**ELECTION DAY**
**Thu, Feb 27 9AM-9 PM**
வாக்களிக்கும் நாள்
பெப். 27 - வியாழன்
காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை

TWO DAYS LEFT!
Advance Polls - Feb 21, 20 10AM-8PM
21, 22ஆம் திகதிகளிலும்
முன்கூட்டியே வாக்களிக்கலாம்
காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை



RE-ELECT
மீண்டும் தெரிவோம்

# RAYMOND CHO

PC CANDIDATE FOR
**SCARBOROUGH NORTH**
PC வேட்பாளர் - ஸ்காபரோ வடக்கு

PROTECT ONTARIO

NEED A RIDE • REQUEST A LAWN SIGN
MAKE A DONATION • SIGN UP AS VOLUNTEER

X @RaymondChoPC
f @RaymondChoPC

647-256-8880 www.voteforcho.ca vote@voteforcho.ca

4500 Sheppard Avenue East, Unit 111, Scarborough

Authorized by the CFO of the Raymond Cho Campaign







- First Tamil elected to political office in North America with over 19 years of experience
  வட அமெரிக்காவில் பொதுசேவைக்கு முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டு 19 வருடங்களாக தொடர்ந்து சேவை புரிந்தவர்.

- Advocated for a York University Campus in Markham by securing an allocation of $127 million.
  யோர்க் பல்கலைக்கழக உயர் கல்வி வளாகத்தை மார்கத்துக்கு கொண்டுவருவதற்கு, குரல் எழுப்பி $127 மில்லியன் நிதியை அரசிடம் இருந்து சேர்த்துக்கொடுப்பதற்கு பாடுபட்டவர்.

- Championed the new Aaniin Community Centre and Library
  Aaniin சன சமூகநிலையம், நூலகம் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றியவர்.

- Responsible for naming many streets in Markham in honour of the Tamil identity, community and culture.
  தமிழர்களின் அடையாளங்களையும், வரலாற்றையும், முகங்களையும் அங்கீகரிக்கும் வகையில் கனடாவில் பல வீதிகளுக்கு, பூங்காக்களுள்க்கும் தமிழ் பெயர்களை சூடியவர்.

- First to initiate the official recognition of Thai Pongal & Tamil Heritage Month
  மார்க்கம், கனடாவில் முதன்முதலில் தைப்பொங்கலும், தமிழர்மரபுரிமை மாதமும் உத்தியோகபூர்வமாக பிரகணபடுத்துவற்கான முயற்சிகளில் ஈடுபட்டு இவரின் பதவிக்காலத்திலேயே அதை நிறைவேற்றியவர்.

- Unanimously passed a resolution to investigate genocide in Sri Lanka at the City of Markham
  முதன்முதலில் தமிழர்கள் மீதான இனப்டுகொலை முடிவுக்கு கொண்டுவருவதற்கான விசாரணை வேண்டும் என்ற தீர்மானத்தை மார்க்கம் மாநகரசபையில் நிறைவேற்ற முன் நின்று உழைத்தவர்.

- Initiated a Friendship Agreement between the City of Markham and Mullaitivu
  இவரது பதவிக்காலத்தில் மார்க்கம் மாநகர சபைக்கும் வடமாகாணத்துக்கும் (முல்லைத்தீவு) இடையே நட்பு ரீதியான ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது.

- Doug Ford provides strong leadership and a proven track record to fight the tariffs that will impact our economy, with large job losses and increased costs of living.
  எங்கள் பொருளாதாரத்தை பாதிக்கும் அமெரிக்க வரிகளை (25% American Tariffs) எதிர்த்து போராடி, மேலும் அதிக வேலை இழப்புகளையும், வாழ்க்கை செலவின் உயர்வுகளையும் தடுப்பதற்கு Doug Ford-இன் வலுவான தலைமைத்துவமும், அவரின் கடந்த பங்களிப்பும் வழிவகுக்கும்.

***Vote Early! Feb 20-22 (Aaniin Community Centre & Milliken Mills Community Centre)***

markhamthornhill.ontariopc.ca 905 209 6851 logankanapathi

Authorized by the CFO of the Logan Kanapathi Campaign



# மாரிட் ஸ்டைல்ஸ் மற்றும் உங்கள் பக்கம் உள்ள என்.டி.பி. ஒரு வலுவான ஒன்ராறியோவுக்காக போராடுகிறது

## ஒரு அரசாங்கமாக,

- நீங்கள் வேலைக்குச் சென்று விரைவாக வீடு திரும்ப, ஸ்காபரோவுக்கு விரைவான போக்குவரத்து சேவையை நாங்கள் வழங்குவோம்.
- எங்கள் மாதாந்த மளிகை தள்ளுபடித் திட்டம் ஒவ்வொரு மாதமும் மளிகை பொருட்களை கொள்வனவு செய்ய உங்களுக்கு உதவும்.
- உங்கள் குழந்தைகள் உயர் தரமான கல்வியைப் பெறும் வகையில் பாடசாலைகளில் அதிக முதலீடுகளை செய்வோம்.

**பிப்ரவரி 27 அன்று, என்.டி.பி. க்கு வாக்களியுங்கள்.**



**Thadsha Navaneethan**
Scarborough North



**Doly Begum**
Scarborough Southwest



**Sonali Chakraborti**
Scarborough Centre



**Christian Keay**
Scarborough—Guildwood



**Hibah Sidat**
Scarborough—Rouge Park

**மேலதிக விபரங்களுக்கு: ontariondp.ca**

AUTHORIZED BY THE CFO FOR THE ONTARIO NDP

ONTARIO NDP NPD

# ஒன்றாரியோ மாகாண தேர்தலில் ஸ்காபுறோ வடக்குத் தொகுதியில் போட்டியிடும் தமிழ் பேசும் என்டிபி கட்சி வேட்பாளர் தட்ஷா நவநீதன்



எதிர்வரும் பெப்ரவரி 27ம் திகதி நடைபெறவுள்ள ஒன்றாரியோ மாகாண பாராளுமன்ற தேர்தலில் ஸ்கா-புறோ வடக்குத் தொகுதியில் போட்டியிடும் தமிழ் பேசும் வேட்பாளர் தட்ஷா நவநீதன் அவர்களை அவர் போட்டியிடும் தொகுதியின் வாக்காளப் பெருமக்கள் ஏன் அவருக்கு வாக்களிக்க வேண்டுமென வேட்பாளர் தட்ஷா நவநீதன் ஆகிய அவரே தன்னைப் பற்றி எடுத்துரைக்கின்றார்.

ஸ்காபுறோ வடக்கு தொகுதியில் நீண்ட காலமாக வசித்த வரும் நானும் எனது குடும்பத்தினரும் இந்த தொகுதி மக்களின் தேவைகளை நன்கு அறிந்து வைத்துள்ளோம்.

எனது கடந்த கால சமூக சேவை மற்றும் அரசியல் செயற்பாடுகள் ஆகியவற்றை நான் எமது வாக்காளப் பெருமக்களுக்கு எடுத்துச் சொல்வதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

நான் உயர்தர கல்லூரியில் கற்றுக் கொண்டிருக்கும் போதே "மல்வேர்ன் குடும்ப சேவைகள் நிலையத்தின் ஊடாக தொண்டாற்றத் தொடங்கினேன். அங்கு இளைஞர்களை நல்வழிப்படுத்துதல் மற்றும் அவர்களுக்கு கல்வியில் கவனம் செலுத்தி எவ்வாறு வாழ்க்கையில் உயரலாம் போன்ற கருப்பொருளில் இடம்பெற்ற சில திட்டங்களின் பொறுப்பாளராகவும் பணியாற்றினேன்.

நான் அரசியல் விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்றவள். நான் பல்கலைக் கழகத்தில் கற்றுக் கொண்டிருக்கும் போதே சமூக சேவையிலும் அரசியல் தொடர்பான ஆரம்ப செயற்பாடுகளிலும் பங்கெடுத்துள்ளேன். அப்போது ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் இயங்கிவரும் என்டிபி **(NDP)** மாணவர் அணியில் இணைந்து என்டிபி கட்சியின் வளர்ச்சிக்காக மாணவர்கள் மத்தியில் கலந்துரையாடுவது மற்றும் மாணவர்கள் ஏன் அரசியலில் பங்கெடுக்க வேண்டும் போன்ற விடயங்கள் தொடர்பாக தலைமைத்துவம் சார்ந்த பதவிகளில் தொண்டராகப் பணியாற்றி அதன் மூலம் சமூகம் மற்றும் அரசியல் செயற்பாடுகள் பற்றி பல விடயங்களை கற்றுக்கொண்டேன்.

2005ம் ஆண்டு தொடக்கம் 2007ம் ஆண்டு வரை தமிழ் இளைஞர்கள் மேம்பாட்டு மன்றம் என்ற அமைப்பின் முக்கிய பதவிகளில் இணைந்து தமிழ் இளைஞர்களின் மேம்பாட்டிற்காகவும் அவர்களை வழி நடத்தும் குழுவின் தலைவியா-கவும் இயங்கிவந்தேன்.

2006ம் ஆண்டு நகரசபை அங்கத்தவராக விரும்பி அந்த தேர்தலிலும் போட்டியிட்டேன். அதே வேளை ஜேன்-பின்ச் சந்திப்பின் அருகாமையில் அமைந்துள் இளைஞர் அமைப்பின் முக்கிய பணியாளராக இணைந்து அங்கும் இளைஞர்கள் மத்தியில் தோன்றும் கருத்து வேறுபாடுகள் எவ்வாறு அவர்கள் மத்தியில் மோதல்களை ஏற்படுத்துகின்றன என்பதை ஆராய்ந்து அறியும் குழுவில் இணைந்து பணியாற்றினேன்.

தொடர்ந்து இதற்கு முன்னரும் மாகாண அரசின் தேர்தலில் போட்டியிட்டு பல அனுபவங்களைப் பெற்றுக் கொண்டு மீண்டும் 2025ம் ஆண்டு தேர்தலில் ஸ்காபுறோ வடக்கு தொகுதியில் போட்டியிடுகின்றேன்.

நான் எனது கடந்த காலப் சமூகப் பணிகளின் போது "மக்கள் தங்கள் வாக்குகளை ஏன் பயன்படுத்த வேண்டும்?" எமது வாக்குகள் எமது அரசியல் மற்றும் வாழ்வாதாரத் தேவைகளை நாம் எவ்வாறு வெற்றி கொள்ளலாம்" போன்ற தலைப்புக்களில் மக்களுக்கு பயிற்சியளித்துள்ளேன். அதே உத்திகளை நான் போட்டியிடும் தேர்தல் பிரச்சாரத்திலும் பயன்படுத்தி மக்களின் ஆதரவை நாடி நிற்கின்றேன்" என்று வேட்பாளர் தட்'ா நவநீதன் தெரிவித்துள்ளார்.

தட்ஷா நவநீதன் மற்றும் ஒன்றாரியோ **NDP** கட்சியின் வேட்பாளர்கள் அனைவரும் மிகவும் முக்கியமானவற்றை மக்களுக்கு வழங்க அவர்கள் கடமைப்பட்டுள்ளனர்:

- எமது என்டிபி கட்சியின் ஆட்சி ஒன்றாரியோ மாகாணத்தில் அமைந்தால் நாம், மாதாந்திர மளிகைச் சலுகைக் கொடுப்பனவு **(Grocery Re-bate Payment)** ஒன்றாரியோ மக்கள் அனைவருக்கும் வழங்க எமது கட்சி தீர்மானித்துள்ளது இந்த திட்டத்தை அறிமுகப்படுத்துவது முதல் வாடகைச் செலவுகளைச் சமாளிப்பது வரை வாழ்க்கையை மிகவும் மாற்றுகிறது

-பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளை மாணவர்கள் கற்பதற்கு ஏற்றவையாக திருத்தி சரிசெய்தல் மற்றும் குழந்தைகளுக்கு அவர்கள் நோக்கங்கள் மற்றும் விருப்பங்கள் ஆகியன செழிக்க தேவையான ஆதரவை வழங்குதல்

- அதிகமான மருத்துவர்களை நியமனம் செய்து அல்லது மாகாணத்திற்குள் அழைத்து பணியமர்த்துவதன் மூலம் மக்கள் தங்களுக்குத் தேவையான கவனிப்பைப் பெற முடியும்

- எங்கள் ஹோம்ஸ் ஒன்டாரியோ திட்டத்தின் மூலம் மக்கள் உண்மையில் வாங்கக்கூடிய வீடுகளைக் கட்டுதல்

- ஒன்றாறியோ வேலைகளைப் பாதுகாத்தல் மற்றும் அமெரிக்க அதிபர் டிரம்பின் கட்டணங்களை எதிர்த்துப் போராடுதல் ஆகியவை எமது கட்சியின் 2025ம் ஆண்டு தேர்தலின் முக்கிய பணிகளாக நாம் தேர்ந்தெடுத்துள்ளோம்" என்று தனது நோக்கங்களை பகிர்ந்து கொண்ட அவர் நிறைவு செய்தார்.



# அமெரிக்க உறவின் முரண்பாடே ஐரோப்பிய இராணுவ தோற்றம்!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா



**(ஐரோப்பாவிற்கான இராணுவம் அவசியம் என்று உக்ரைன் கோருவது, ஐரோப்பாவில் நீண்ட கால போர்க் பகைமை சூழலையே ஏற்படுத்தும். இதனை உடனடியாக சில ஐரோப்பிய நாடுகள் ஆதரிக்க முற்பட்டாலும் நீண்ட காலத்தில் சாத்தியங்கள் குறைவே.**

**அதேவேளை டிரம்பின் பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத், உக்ரைன் நேட்டோவில் இணையும் யோசனையை நிராகரித்துள்ளார். உக்ரைனின் நேட்டோ நம்பிக்கைகள் மற்றும் 2014க்கு முந்தைய எல்லைகள் யதார்த்தமானவை அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்)**

ஐரோப்பாவிற்கான இராணுவம் அவசியம் என உக்ரைன் ஜனாதிபதி விலொடிமிர் ஜெலென்ஸ்கி ஜேர்மனியில் அவசர அவசரமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**ஐரோப்பிய இராணுவம்:**

கடந்த வாரம் ஜேர்மனியின் மியுனிச்சில் இடம்பெற்ற பாதுகாப்பு உச்சிமாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான நீண்டகால பழமை வாய்ந்த உறவு முடிவிற்கு வருகின்றது என அமெரிக்க துணை ஜனாதிபதி ஜேடிவன்ஸ் தெரிவித்துள்ளார் என உக்ரைன் ஜனாதிபதி ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார். ஆயினும் இதனை அமெரிக்க - ஐரோப்பிய இராஜதந்திரிகள் இதுவரை மறுக்கவில்லை.



விரைவில் அமெரிக்க - ரஷ்ய சமாதான பேச்சுவார்த்தைகள் சவூதி அரேபியாவில் நடைபெற உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனை எதிர்க்கும் வண்ணம், எங்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாமல் எங்களின் முதுகின் பின்னால் செய்து கொள்ளப்படும் எந்த உடன்படிக்கையையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் ஐரோப்பாவிற்கு உதவி செய்வதற்கு அமெரிக்கா முன்வராது எனும் தோற்றப்பாட்டில் உக்ரைன் ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

உக்ரைனிற்கு போதிய பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்காததால், எங்களை பாதுகாக்காததால் அமெரிக்காவிற்கு உக்ரைனின் கனியவளங்களை வழங்கும் திட்டத்தை தடுத்து நிறுத்தியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவிற்கு அச்சுறுத்தல் என வரும்போது அமெரிக்கா உதவிக்கு வராது என்பதற்கான சாத்தியக் கூறுகளை நாங்கள் நிராகரிக்க முடியாது என உக்ரைன் ஜனாதிபதி மிகக் காட்டமாக தெரிவித்துள்ளார்.

தனது சொந்த இராணுவத்தை கொண்ட ஐரோப்பா குறித்து பல தலைவர்கள் விருப்பம் வெளியிட்டுள்ளனர். ஐரோப்பிய இராணுவம் உருவாக்குவது குறித்து அவர்கள் சாதகமான பதில்களை தெரிவித்துள்ளனர் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**அமெரிக்கா - ரஷ்ய பேச்சுவார்த்தை:**

விரைவில் நிகழவுள்ள இருதரப்பு அமெரிக்கா - ரஷ்ய அமைதிப் பேச்சுவார்த்தைகளை, ஜெலென்ஸ்கி தனக்குப் பிடித்தபடி- தனது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப நிராகரிக்க முடியும்.

ஆயினும் டிரம்ப் எந்தவொரு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலையீடும் இல்லாமல் புட்டினுடன் ஒரு அமைதி ஒப்பந்தத்தை மேற்கொள்ள விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இங்கிலாந்து பிரதமர் கெயார் ஸ்டார்மர் உக்ரைனுக்கு பிரித்தானிய துருப்புக்களை அனுப்பத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார்.



உக்ரைனின் நேட்டோவில் இணையும் முயற்சியை எப்போதும் இங்கிலாந்து ஆதரிக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேட்டோவின் எதிர்காலத்தில் உக்ரைன் இணைவதற்கு அவசியமானதாக பார்க்கவில்லை என்று டிரம்ப் நிர்வாகம் மிகத் தெளிவாகக் கூறிய போதிலும், இங்கிலாந்து பிரதமர் ஸ்டார்மர் தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கவில்லை.

இருப்பினும் மியூனிக் பாதுகாப்பு மாநாட்டிற்கு முன்னதாக ஜெலென்ஸ்கியுடன் பேசிய ஸ்டார்மர், நேட்டோ கூட்டணிக்கு உக்ரைனின் மாற்ற முடியாத இலக்கை அடையும் பாதைக்கு இங்கிலாந்தின் முழு ஆதரவையும் உறுதியளித்தார்.

**நேட்டோவில் உக்ரைனுக்கு இடமில்லை:**

இதற்கிடையில், டிரம்பின் பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத், உக்ரைன் நேட்டோவில் இணையும் யோசனையை நிராகரித்துள்ளார். உக்ரைனின் நேட்டோ நம்பிக்கைகள் மற்றும் 2014க்கு முந்தைய எல்லைகள் யதார்த்தமானவை அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆயினும் டிரம்ப் உண்மையில் ரஷ்யாவுடன் எங்கு நிற்கிறார் என்பதைக் கண்டுபிடிக்க ஐரோப்பா போராடி வருகிறது. ரஷ்யாவுடன் எப்போதும் நட்புச் சூழ்நிலையை உருவாக்க டிரம்ப் முயன்று வருகிறார். ஆயினும்






ஐரோப்பிய நாடுகள் மத்தியில் ரஷ்யாவை பகைப்பது என்பது பலருக்கும் தெரிந்த விடயம் தான். ஆயுத விற்பனைக்கும் போர்ப்பகைமை சூழலை தங்கள் அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

**உக்ரைனில் பிரித்தானிய துருப்புக்கள்:**

அமெரிக்கா தனது நிலைப்பாட்டை மாற்றுவதால், இங்கிலாந்து தனது துருப்புக்களை உக்ரைனுக்கு அனுப்ப வாய்ப்புள்ளது என்று பிரதமர் கெயர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களை விரைவு படுத்துவதில் இங்கிலாந்து முன்னணிப் பங்காற்றத் தயாராக உள்ளது.

தேவைப்பட்டால், நமது சொந்தப் படைகளை தரையில் நிறுத்துவதன் மூலம் உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களுக்கு பங்களிக்கத் தயாராகவும் விருப்பமாகவும் இருப்பதும் இதன் பொருள் என்றும் அவர் தெரிவித்தார்.

உக்ரைன் நாட்டுக்கு பிரிட்டிஷ் படைகள் அனுப்புவதை நான் எளிதாகச் சொல்லவில்லை. பிரிட்டிஷ் படைவீரர்களையும் பெண்களையும் ஆபத்தில் ஆழ்த்துவதில் வரும் பொறுப்பை நான் மிகவும் ஆழமாக உணர்கிறேன்.

உக்ரைன் நாட்டுக்கு குறைந்தளவு 100,000 பிரித்தானிய துருப்புக்கள் தேவைப்படலாம் என்று மதிப்பிடுகின்றனர். ஆனால் உண்மையில் யார் தான் ரஷ்யாவை எதிர்த்து போரிட போகின்றார்கள் என பிரித்தானிய அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.




அத்துடன் பிரிட்டனின் இராணுவம் வளங்களால் நிரம்பி வழிவதில்லை என்பதும் மற்றொரு முக்கிய விடயமாகும். மேலும் இங்கிலாந்து ஜெனரல்கள் அதிக பாதுகாப்பு செலவினங்களைத் தற்போது கோரி வருகின்றமை அரசுக்கு உள்ள பாரிய தலைவலியாகும்.

இவை எல்லாவற்றையும் விட பிரித்தானிய பொதுமக்கள் தங்கள் குழந்தைகளை இன்னோர் நாட்டில் பலிக்கடாவாக்க சம்மதிக்க மாட்டார்கள். இரண்டாம் உலகப் போரின் பின்னர் பிரித்தானிய படைகள் எந்தவொரு பாரிய படை நகர்த்தல்களையும் நடாத்தவில்லை.

அமெரிக்காவை மீறி பிரித்தானியத் துருப்புக்கள் உக்ரைன் போரில் கலந்து கொள்வது சாத்தியமற்ற ஒரு செயலாகவே கருதப்படுகிறது. பிரித்தானிய துருப்புக்கள் உக்ரைன் எல்லையில் குவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எல்லாம் தேர்தல் அரசியல் ரீதியான இலாபங்களுக்கான வாய்ச்சவாடல்களாகவே கருதப்படுகின்றன.

# டாக்டர் ப.விக்கினேஸ்வரா மூன்றாவது ஆண்டு நினைவாக நூல் வெளியீடு

இலங்கை செய்திகள்
Sri Lanka News




டாக்டர் விக்கினேஸ்வராவின் மூன்றாவது ஆண்டு நினைவாக ஈழத்தின் பிரபல்ய எழுத்தாளர் இ.சு.முரளிதரன் எழுதிய "கதைப்பந்தாட்டம்" எனும் நூல் தற்போது தாயகத்தில் வெளிவருகிறது.

சுன்னாகம் புகழ் டாக்டர் ப. விக்கினேஸ்வரா மண்பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவர் ஆவார். இடர்காலத்தில் அவர் நல்கிய மருத்துவப் பணிகளை யாழ்ப்பாணம் மண்ணும், மக்களும் என்றும் நினைவில் கொள்வர்.

சுன்னாகத்தில் நாற்பது ஆண்டுகள் மருத்துவ பணியாற்றிய வைத்தியர் ப.விக்கினேஸ்வரா அவர்கள் அமரராகி (22-2-2022) மூன்று வருடமாகிறது. ஆனால் அவரிடம் சிகிச்சைபெற்ற மக்கள் இன்றும் அவரது திறமைகளையும், சேவைகளையும் புகழ்ந்து நினைவு கூருகின்றனர்.


ஜீவநதி பதிப்பகத்தின் 436ஆவது வெளியீடாக, பிரபல வைத்தியரும் இடர்காலத்தில் மண் பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவர் சுன்னாகம் டாக்டர் விக்கினேஸ்வரா அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவாக, இ.சு.முரளிதரன் எழுதிய கதைப்பந்தாட்டம் - சுவைஞனின் மதிப்பீட்டுப் படிவம் எனும் நூல் வெளிவருகின்றது.

ஒவ்வொரு வருடமும் டாக்டர் ப.விக்கினேஸ்வரா நினைவாக ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றமை அறிந்ததே. 2022 இல் மறைந்த டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் 31ம் நாள் நினைவாக பேராசிரியர் பாலசுகுமார் எழுதிய "ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்" எனும் நூல் வெளியானது.

இதன்பின் 2023 இல் டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் முதலாவது ஆண்டு நினைவாக ஈழத்தின் பிரபல்ய எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய "பள்ளிக் கூடங்கள் கட்டடக் கூடுகள் அல்ல" எனும் கல்வியியல் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.

கடந்த வருடம் 2024 இல் டாக்டர் விக்கினேஸ்வரா ஈராண்டு நினைவாக கலாநிதி த.கலாமணி அவர்களால் எழுதப்பெற்ற 35 படைப்பாளர்களின் நூல்களுக்கான அணிந்துரைகளின் தொகுப்பு நூலான "கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்" எனும் நூல் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது டாக்டர் விக்கினேஸ்வராவின் மூன்றாவது ஆண்டு நினைவாக "கதைப்பந்தாட்டம்" எனும் நூல் தற்போது தாயகத்தில் வெளிவருகிறது.




# 17ந் திகதி மறைந்த திருமதி. விசாகபூசணம் முருகையா அவர்களின் 31ம் நாள் நினைவு தாயகத்திலும், ரொறன்ரோவிலும் ஒரே நாளில் அனுஸ்டிக்கப்பெற்றது




தமிழ் ஆசிரியையாக ரொறன்ரோவிலும், மொன்றியாலிலும் சேவையாற்றி கடந்த ஜனவரி 17ந் திகதி மறைந்த திருமதி. விசாகபூசணம் முருகையா அவர்களின் 31ம் நாள் நினைவு தாயகத்திலும், ரொறன்ரோவிலும் ஒருசேர அனுஸ்டிக்கப்பட்டது. தாயகத்தில் தொல்புரம் "சர்வோதயா" அமைப்பின் ஏற்பாட்டில் தொல்புரம், மூளாய், சுழிபுரம் கிராமத்தினரின் பங்கேற்புடன் பெப்ரவரி 16ந் திகதி விசாகபூசணம் முருகையா ரீச்சர் நினைவு கூரப்பட்டார். அதே தினம் கனடாவில் ரொறன்ரோ கனடா கந்தசாமி ஆலயத்திலும் நினைவுகூரல் நடைபெற்றது. ரொறன்ரோ நிகழ்வை மறைந்த ஆசிரியை அவர்களின் புதல்வரும் இலக்கியவாதியுமாகிய மொன்றியால் மூர்த்தி தனது குடும்பத்தினரோடு இணைந்து ஏற்பாடு செய்திருந்தார்.





கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

## கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்
## சர்க்கரைப் பொங்கல் விழா - 2025
## சமய அறிவு, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்

இடம்: SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH
5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2

காலம்: **March 22, 2025 (Saturday) 9.00 AM**

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள்:**

மழலைகள் (JK) : 01-01-2020 இற்குப் பின் பிறந்தோர்
ஆரம்பப் பிரிவு (SK) : 2019 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 1 (Gr.1) : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 2 (Gr.2) : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 3 (Gr.3) : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 4 (Gr.4) : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 5 (Gr.5) : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 6 (Gr.6) : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 7 (Gr.7) : 2012 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 8 (Gr.8) : 2011 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர்

❋ மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

குறிப்பு:

1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4வது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு $5.00 அறவிடப்படும்.
5. **ஏப்பிரல் 27, 2025ல்** நடைபெறும் சர்க்கரைப் பொங்கல் விழாவில் போட்டிகளில் பங்கு பற்றிய மாணர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கப்படும்.

**மார்ச்சு 05, 2025க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ..................................................

குடும்பப் பெயர்: ..................................................

பிரிவு: ..................................................

பிறந்த திகதி: ..................................................

தொலைபேசி எண், email: ..................................................

..................................................

பங்குகொள்ளும் போட்டிகள்:

☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
Secretary,
Canada Hindu Maamantram,
41, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email: canhinduma@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு: 416.497.4741
647.620.5171, 416.356.7323
647.992.0587, 905.785.6526

**விண்ணப்ப முடிவு திகதி: மார்ச்சு 05, 2025**




# எம்.பி. யாகப்போகும் "சுமா"வும் வடக்கு முதல்வர் ஆசையில் "சத்தி"யும் ?

***"உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடக்கவுள்ள நிலையில் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளராகவிருந்த சத்தியலிங்கத்தின் பதவி விலகலுக்கும் சுமந்திரனின் பதவி ஏற்புக்கும் பின்னால், "அன் கிளீன் தமிழரசுக்கட்சி" (Unclean Tamil Arasu Party)த் திட்டங்கள் உள்ளன. தற்போது வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் ஆசை காட்டி சத்தியலிங்கத்தின் பொதுச்செயலாளர் பதவியை கைமாற்றியுள்ள சுமந்திரன், சத்தியலிங்கம் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக அறிவிக்கப்படும்போது அவரின் தேசியப்பட்டியல் ஆசனம் ஊடாக பாராளுமன்றம் செல்வதே திட்டம்."***

------------------------------------------------------------ - **கே. பாலா** ----

இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவராக பேராசைப்பட்டு அதில் படு தோல்வி கண்ட நிலையில் "உள்வீட்டு" கலகங்களில் ஈடுபட்டு தமிழ் தேசிய அரசியலையும் தமிழரசுக் கட்சியின் நற்பெயரையும் அதன் கட்டுக்கோப்பையும் நாடளாவிய ரீதியில் நாறடித்து வந்த மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் எனப்படும் எம்.ஏ. சுமந்திரன் தற்போது இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் பதவியைக் கைப்பற்றி யுள்ளார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர்கள் அழுத்தங்களினாலும் அடக்குமுறைகளினாலும் சகுனித் தனங்களினாலும் சுதந்திரமாக செயற்படமுடியாமையினாலும் பதவி விலகிவரும் பட்டியலில் இறுதியாக பதில் பொதுச் செயலாளராக இருந்த மருத்துவர் ப.சத்தியலிங்கமும் பதவியிலிருந்து விலகியதன் அடிப்படையில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலரின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் சுமந்திரன் பதில் பொது செயலாளர் பதவியைக் கைப்பற்றியுள்ளார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் உள்ள இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான இரா.சாணக்கியனின் அலுவலகத்தில் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடந்த 16 ஆம் திகதி இடம் பெற்றது. இக்கூட்டத்தில் இதுவரை பதில் பொதுச் செயலாளர் பதவியில் இருந்த மருத்துவர் ப. சத்தியலிங்கம் எம்.பி. சுகவீனம் காரணமாக பதவியில் தான் தொடர்ந்து இருக்க முடியாது என அறிவித்தமையை அடுத்து சத்தியலிங்கத்துக்கு அடுத்து கட்சியில் துணைச் செயலாளராக இருந்த சுமந்திரனைப் பதில் பொதுச் செயலாளராக நியமிப்பது என மத்திய குழு தீர்மானித்தது.

ஆனால் சுமந்திரனை பொதுச் செயலாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கும் முடிவுக்கு 2024 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் தலைவராக பொதுக்குழுவில் வாக்கெடுப்பின் மூலம் வெற்றிபெற்று சுமந்திரனை தோற்கடித்து நீதிமன்ற தடைஉத்தரவினால் பதவியேற்கமுடியாத நிலையில் இருப்பவரான தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழு தலைவரான சிறீதரன் எம்.பி., அப்போது தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிட்டவரான ஸ்ரீநேசன் எம்.பி. மற்றும் சிறீதரனுடன் இணைந்து சுமந்திரனை எதிர்த்து தலைவர் பதவிக்கு போட்டியிட்டு பின்னர் விலகி சிறீதரனுக்கு ஆதரவளித்தவரான முன்னாள் எம். பி. யோகேஸ்வரன் ஆகியோர் தமது எதிர்ப்பைப் பதிவு செய்தனர். எனினும், அவர்களின் எதிர்ப்பை மீறி பதில் பொதுச் செய லாளர் பதவி சுமந்திரனின் கைகளுக்கு சென்று விட்டது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளராக இருந்த மருத்துவர் ப.சத்தியலிங்கம் பதவி விலக்கியமைக்கும் அந்தப்பதவியை சுமந்திரன் ஏற்றுக்கொண்டமைக்கும் பின்னால் பல தந்திரங்கள், சதுரங்க ஆட்டங்கள், "அன் கிளீன் தமிழரசுக்கட்சி" (Unclean Tamil Arasu Party)த் திட்டங்கள் இருப்பதாக "உள்வீட்டு"த் தகவல்கள் கூறுகின்றன. மருத்துவர் சத்தியலிங்கத்திற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் ஆசை காட்டப்பட்டு, பேரம் பேசப்பட்டே தற்போது பொதுச் செயலாளர் பதவியிலிருந்து இராஜிநாமா செய்ய வைக்கப்பட்டதாகவும் மாகாண சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்படும்போது அவர் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் இராஜிநாமா செய்வதும் அப்போது சுமந்திரன் அந்த தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்வதும் திட்டம் எனவும் தெரியவருகின்றது.

ஆனால் பாராளுமன்றத் தேர்தல் நடக்கவிருந்த காலப்பகுதியில் "தமிழரசுக்கட்சியில் பாராளுமன்றத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைபவர்கள் எக்காரணம் கொண்டும் தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் அனுப்பப்படமாட்டார்கள். அது நானாக இருந்தாலும் பொருந்தும்" என பல இடங்களில் உறுதிபட சுமந்திரன் தெரிவித்திருந்தார். தேர்தலில் தோல்வியடைந்த பின்னரும் "இந்த நிலைப்பாட்டில் நான் தொடர்ந்தும் உறுதியாக உள்ளேன்" எனவும் சுமந்திரன் மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார். ஆனால் பதவி ஆசை யாரைத்தான் விட்டது என்பதுபோன்று தற்போது அவரின் நிலைப்பாடு மாறி வருவதாகவே தெரிகின்றது.

இதேவேளை பொதுச்செயலாளர் பதவி துறப்பு - ஏற்புக்கு பின்னால் உள்ள இன்னொரு கதையும் கூறப்படுகின்றது. அதாவது இலங்கை தமிழரசுக்கட்சியிலிருந்து இம்முறை பாராளுமன்றத்தேர்தலில் போட்டி யிட்டதன் மூலம் 7 எம்.பி.க்களும் தேசியப்பட்டியல் மூலமாக ஒரு எம்.பி.யுமாக 8 எம்.பி.க்கள் பாராளுமன்றத்தில் உள்ளனர். இதில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆசனங்களில் சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில் சிறீதரன், சாணக்கியன் ஆகிய இருவருக்கும் முன்வரிசை ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் இதில் சாணக்கியனை விட சிரேஷ்ட தலைவரான ஸ்ரீநேசனுக்கு இரண்டாவது வரிசை ஆசனமே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சாணக்கியனுக்கு முன்வரிசை ஆசனம் வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்புத்தெரிவித்து சிறீதரன் எம்.பி. பாராளுமன்ற செயலாளருக்கு கடிதம் கொடுத்தாக சுமந்திரன் தரப்பால் கதைகள் வெளியிடப்பட்டன.

இதே நேரம் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றம் வந்த சத்தியலிங்கம் கட்சியின் சிரேஷ்ட தலைவராகவும் பொதுச் செயலாளராகவும் இருக்கின்றபோதும் அவருக்கும் 4 ஆவது வரிசையிலிலேயே ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தான் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் தனக்கு முதல்வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட வேண்டுமென சத்தியலிங்கம் பாராளுமன்ற செயலாளருக்கு கடித்த கொடுத்துள்ளதாகவும் இதனால் சுமந்திரனின் தீவிர விசுவாசியான சாணக்கியனின் முன்வரிசை ஆசனம் பறிபோகக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாலேயே தாலும் சத்தியலிங்கத்தின் பொதுச் செயலாளர் பதவி கைமாறப்பட்டு சாணக்கியனின் முதல் வரிசை ஆசனமும் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு தகவல் உண்டு.

ஏனெனில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பெண் ஒருவர் நியமிக்கப்படுவார் எனப் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் பதவியில் இருந்த மருத்துவர் சத்தியலிங்கம் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக அறிவிக்கப்பட்டார். தேசியபட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஆசனம் வழங்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சத்தியலிங்கத்திடம் நீங்கள் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் தொடருவீர்களா எனக்கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு அவர் பதில் வழங்குகையில், எனது தொழில் அரசியல் அல்ல, நான் ஒரு வைத்தியர். கட்சி இந்த பதவியை தராவிட்டால் மீண்டும் ஒரு அரச உத்தியோகத்தராக செயற்படும் எண்ணத்திலே இருந்தேன். வன்னி மாவட்டமானது திட்டமிட்ட இன அழிப்பு இடம்பெறுகின்ற ஒரு பிரதேசம். எனவே அதை உணர்ந்து செயற்படக்கூடிய ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் தேவையை அறிந்து கட்சி இந்த ஆசனத்தை வழங்கியுள்ளது. இனி-வரும் ஐந்து வருடங்களில் சத்தியலிங்கம் எப்படி செயற்படுவார் என்பதை அனைவரும் நிச்சயமாக பார்ப்பீர்கள். கட்சியின் பொதுச்செயலாளர் பதவியிலும் தொடருவேன் அது பொதுச்சபையில் தீர்மானிக்கப்படக்கூடிய ஒரு விடயம் அதனை விடுவதற்கான சந்தர்ப்பம் இன்னும் எற்ப்படவில்லை என்றார். ஆனால் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்று 3 மாதங்களுக்குள் பொச்து செயலாளர் பதவியிலிருந்து விலகவேண்டிய நிலை அல்லது நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளராக செயற்பட்டு வந்த கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் தனது பதவியில் இருந்து இராஜிநாமா செய்ததை அடுத்து, பொதுச்செயலாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டு வந்தது. இந்நிலையில் கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்காக, கட்சி மட்டத்தில் பொதுச்செயலாளரொருவரை நியமிக்கும் பொருட்டு துணைத்தலைவர்களாக செயற்பட்டு வந்த மருத்துவர் ப.சத்தியலிங்கம் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரில் ஒருவரை பொதுச்செயலாளராக நியமிக்க உத்திதேசிக்கப்பட்டிருந்தது. எனினும் சுமந்திரன் தமிழரசுக்கட்சியின் தலைவர் பதவியிலேயே குறியாக இருந்ததால் சத்தியலிங்கம் பதில் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் 2024 ஆம் ஆண்டு பொதுக்குழுவில் வாக்கெடுப்பு மூலம் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட சிறீதரன் தலைவர் பதவிக்கான போட்டியில் தன்னை எதிர்த்து போட்டியிட்டு தோற்றவரான சுமந்திரனை பொதுச்செயலாளராக மத்திய குழுக் கூட்டத்தில் முன்மொழிந்திருந்த நிலையில், அதற்கு சுமந்திரன் மறுப்பு தெரிவித்திருந்தார். தான் கிழக்கு மாகாணத்திற்கு பொதுச்செயலாளர் பதவி தருவதாக கூறி இருந்தேன். அதை மீற மாட்டேன். கிழக்கிற்கே பொதுச்செயலாளர் பதவியை வழங்குங்கள் என்று கூறி இருந்தார். ஆனால் தற்போது சத்தியலிங்கம் பதவி விலகிய நிலையில் சுமந்திரன் கிழக்கு மாகாணத்திற்கு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றாது பதில் பொது செயலாளராகியுள்ளார்.

இவ்வாறான நிலையில்தான் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடக்கவுள்ள நிலையில் சத்தியலிங்கத்தின் பதவி விலகலுக்கும் சுமந்திரனின் பதவி ஏற்புக்கும் பின்னால், "அன் கிளீன் தமிழரசுக்கட்சி" (Unclean Tamil Arasu Party)த் திட்டங்கள் இருப்பதாக "உள்வீட்டு"த் தகவல்கள் கூறுகின்றன. அதாவது மத்திய குழு உறுப்பினராக, கட்சியின் பேச்சாளராக, துணை பொதுச் செயலாளராக இருந்து கொண்டே தமிழரசுக்கட்சியை ஆட்டிப்படைத்து தமக்கு போட்டியாளர் எனக்கருதியவர்களை, தமது அரச விசுவாசத்துக்கு எதிரானவர்களை, அதிகமாக தமிழ் தேசியம் பேசியவர்களை, தமிழின உணர்வாளர்களை வெளியேற்றிய, ஓரம் கட்டிய. செயற்பட முடியாத நிலையில் வைத்துள்ள சுமந்திரனின் ஆட்டம் இனித்தான் அதிகார பூர்வமாக அதிகரிக்கப் போகின்றது.

ஏப்ரல் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் சிறீதரன் ஆதரவு வேட்பாளர்களை அடியோடு நிராகரிக்கவும் தனது விசுவாச வேட்பாளர்களை நிறுத்தி தமிழரசுக்கட்சியை முழுமையாக தனது கட்டுபாட்டுக்குள் கொண்டு வருவதுடன் அதன் தொடர்ச்சியாக மாகாண சபைக்கான தேர்தலிலும் தனது வேட்பாளர்களை நிறுத்தி வெற்றியை உறுதி செய்து அதன்மூலம் சில கட்சிகளை கூட்டிணைத்து முதலமைச்சர் பதவியில் அமர்வதும் சுமந்திரனின் இந்த பொதுச் செயலாளர் பதவியேற்பின் மறைமுக நிகழ்ச்சி நிரலாக இருக்கலாம் என்ற சந்தேகத்தையும் இலகுவில் நிராகரித்து விட முடியாது.

எது எப்படியோ சுமந்திரன் தனது இலக்குகளில் ஒன்றைக் கைப்பற்றியிருப்பது அவருக்கும் அவரது தீவிர விசுவாசிகளுக்கும் ஒரு வெற்றியாக, எதிர்காலத்தில் தமிழரசுக்கட்சிக்குள் இரு அணிகள் இருக்க முடியாத, சுமந்திரனுக்கு எதிரான அணி வலுவிழக்கச்செய்யப்பட்ட, கட்சி சார்பில் எந்த தீர்மானங்களையும் சுமந்திரன் தனி ஒருவனாக எடுக்கக் கூடிய சூழலை ஏற்படுத்தியிருந்தாலும் ஒட்டு மொத்த தமிழரசுக்கட்சிக்கும் சுமந்திரன் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளராகிருப்பது "சத்திரசிகிச்சை வெற்றி - நோயாளி மரணம்" என்ற நிலையாகவே உள்ளது.

ஓம் சாந்தி

# சிந்திக்க வைக்கும் சிவராத்திரி



மனித வாழ்வில் குழந்தை பிறக்கிறது திருமணம் நடக்கிறது இவ்வாறு பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன. ஒரு நாள் நடைபெறும் நிகழ்வு பின் வருடாவருடம் அவற்றின் ஞாபகார்த்தம் ஒவ்வொருநாளில் கொண்டாடுகிறோம். இவ்வாறு ஒரு நிகழ்வு நிஷமாக நடப்பதும் பின் அதைக் கொண்டாடுவதும் இயல்பாகிவிட்டது. இவை பௌதீகமானது. இதேபோல் ஆத்மாக்களாகிய எமக்கு எம் தந்தையாகிய பரமாத்மாகிய சிவனுடன் உள்ள தொடர்பு அநாதியானது. அந்த தொடர்பும் கூட ஏதோ ஒரு நேரத்தில் நேரடியாக ஏற்படுகிறது. அதுவே பின்னர் ஞாபகார்த்தங்களாக பக்தியின் சம்பிரதாயங்களாக சந்தித்த அதே மனிதரால் உருவாக்கப்படுகிறது. ஆனால் மனித வாழ்வு ஒரு சக்கரம் ஆகும். இதில் சுழல்பவர்களான அழியாக ஆத்மாக்களின் பரமாத்மாவுடனான நேரடியான சந்திப்பும் பின்னர் அவற்றின் ஞாபகார்த்தமான பக்தியின் சம்பிரதாயங்களும் மாறிமாறி வருகின்றன.

ஒவ்வொரு செயலுக்கும் அதற்கான விதிமுறையும் உரிய நேரமும் உண்டு. அதன்படி கலியுக இறுதிவேளையாகிய தற்போதைய நேரம் ஒரு சக்கரம் முடிவுக்கு வருவதால் அடுத்த சக்கரத்திற்கான படைப்புக்கான நேரமுமாகும். அதாவது இதுவரையான ஞாபகார்த்தங்கள் முடிவுக்கு வருதலும் அடுத்த புதிய படைப்பை உருவாக்குபவரான தந்தையான கடவுளும் குழந்தைகளான ஆத்மாக்களும் மீண்டும் ஒருமுறை நேரடியாக சந்திப்பதன் மூலம் குழந்தைகள் மறுபடியும் புதிய படைப்பாக படைக்கப்படும் நேரமாகும். ஆகவே கலியுக இறுதிநேர பக்தியின் சம்பிரதாயங்கள் செய்து வெறுமனே ஞாபகார்த்தங்களைக் கொண்டாடுவதிலிருந்து விழிப்படைந்து தம்மை விடுதலையாக்கி மீண்டும் புண்ணிய ஆத்மாக்களாக மாறும் நேரமிதுவே அதன்படி சிவராத்திரி எனும் சிவவிரதம் எமக்கு தரும் சிந்தனை என்ன எனப் பார்ப்போம்.

1) மகத்துவம் வாய்ந்த இந்த சிவவிரதம் ஏன் இராத்திரி வேளையில் அனுட்டிக்கப்படுகிறது? இந்த சம்பிரதாயம் யாரால் உருவாக்கப்பட்டது?

இராத்திரி என்பது பௌதீக இரவு மற்றும் ஆன்மீக இரவு என இரண்டு வகை உண்டு. ஆன்மீகமான சிவவிரதம் அறியாமை எனும் ஆன்மீக இருளைக் குறிப்பதாகும். ஆனால் இன்றைய மனிதர் தம்மை ஆத்மா என்பதைக் கூட மறந்தவர்களாகி சரீரஉணர்வுடையவர்களாகி ஆன்மீக விழிப்புணர்வற்றவராக இருப்பதால் பௌதீக இராத்திரியில் இவ்விரதத இதை அனுட்டிக்கின்றனர்.

சக்கரத்தின் இறுதி வேளையில் துன்பத்தின் அதி உச்சவேளையில் தர்மத்தை நிலைநாட்ட அவதரித்த கடவுளைச் சந்தித்து துன்பம் நீங்கப் பெற்றவர்களான மனிதர்களே பின்னால் அவர்கள் பிறப்பு இறப்புக்கு உட்பட்டு தூய்மையிழந்து பலவீனப்பட்டபின்னரே பக்தி மார்க்கத்தின் சம்பிரதாயங்களை உருவாக்கினார்கள்.

2) மனிதராலேயே இத்தகைய வழிபாட்டு சம்பிரதாயம் உருவாக்கப்பட்டுள்ளது என்றால் துன்பத்தின்போது கடவுளே என அதே மனிதர் ஏன் அண்ணாந்து மேலே பார்க்கிறார்கள்? இதில் எது சரியானது?

இரண்டும் சரியானதே ஆகும். ஏனெனில் நாம் அனைவரும் ஆத்மாக்களே. ஆத்மாக்களான நாமும் தந்தையான பரமாத்மாவும் வசிக்கும் வீடு மேலேயுள்ள பரந்தாமம் ஆகும். ஆத்மாக்களாகிய நாம் இவ்வுலகிற்கு வந்து சரீரம் எடுக்கவேண்டும். ஆனால் தந்தையோ பிறப்பு இறப்புக்கு அப்பாற்பட்டவர். ஆகவே மேலே பரந்தாமத்திலேயே வசிப்பவர். ஆகவே நிரந்தர வசிப்பிடமான மேலே பரந்தாமத்தை காட்டுவது சரியே.

அடுத்து எமக்காக கீழே இறங்கி வந்து எமக்கு செய்த நன்மைக்காக இங்கே ஞாபகார்த்தமாக உருவாக்கி வழிபாடு செய்கிறார்கள். நன்றியுணர்வின் அடிப்படையில் அதுவும் சரியே. ஆனால் உண்மையில் அவரை எங்கே எப்படி சரியாக அறிந்து தொடர்பு கொள வது என்பது கடவுள் வரும்போது மட்டுமே அவர் விளங்கவைக்கிறார்.

3) சிவராத்திரி விரதம் ஏன் மகாசிவராத்திரி எனக் கூறப்படுகிறது?

புதிய உலகைப் படைப்பவரான கடவுள் அதர்மம் தலைதூக்கும் போது தர்மத்தை நிலைநாட்ட அவதரிப்பேன் என குழந்தைகளுக்கு தான் செய்த சத்தியத்தை நிறைவேற்றவே ஒவ்வொரு சக்கரத்திலும் கலியுக இறுதியில் அவதரிக்கிறார். அவ்வாறு வரும்போது குழந்தைகளிடம் அவர்கள் துன்பத்திலிருந்து விடுபடவேண்டுமாயின் காமம் கோபம் பற்று பேராசை அகங்காரம் போன்ற தீய குணங்களிலிருந்து தூய்மையாகுவோம் என்ற சத்தியத்தை செய்வித்தார். அவ்வாறு இரு பக்கமும் சத்தியத்தைச் செய்து அனுட்டிக்கும் விரதமா-கையால் மகாசிவராத்திரி என்று ஆயிற்று.

4) இவ் விரதத்தில் கண் விழித்தல் முக்கியத்துவம் யாது?

எவ்வாறு இருளில் ஆன்மீக இருள் இருப்பது போல கண்களிலும் இரண்டு பௌதீகக் கண்கள் இருந்தாலும் அவை உடலுக்கானதாகும். மூன்றாவது கண்ணாகிய ஞானம் மூலம் தெய்வீகப்புத்தி எனும் ஆன்மீகக் கண்ணைத் திறப்பதே இங்கு கண்விழித்தல் எனக் குறிப்பிடும் கண்விழிப்பு ஆகும். கலியுகத்தில் அறியாமையால் புத்தியில் தெய்வீகம் இழந்து கல்புத்தி எனும் நிலையில் தவறும் பாவமும் துன்பமும் அதிஉச்சநிலையை அடைந்தது. ஆகவே சிவனின் அவதாரம் இன்றைய மனிதரை தெய்வீகப்புத்தி கொண்ட தேவர்களாக்குகிறது.

5) சிவன் சரீரம் எடுக்காதவர். எவ்வாறு இவ்வுலகில் மனிதராக இருப்பவர்க்கு வழிகாட்டும்
ஞானக்கல்வியைக் கற்பிக்கமுடியும்?

கடவுள் தனக்கென சரீரம் எடுக்காதவராயினும் குழந்தைகளுக்காக ஒரு சரீரத்தை தற்காலிகமாக கடனாக எடுக்கிறார். கலியுகத்தில் வாழ்ந்த மனிதரின் சரீரத்தை தன் கருவியாக்கி அவருக்கு பிரம்மா எனப் பெயரிட்டு பிரம்மாவின் கமலவாயினுடாகவே ஏனையவர்கட்கு இந்த ஞானம் மற்றும் யோகம் இரண்டும் இணைந்த கல்வியை கற்பிக்கின்றார். ஞானத்தின் மூலம் விவேகமானவராகவும் தியானத்தின் மூலம் இதுவரையான பாவத்தை அழித்து தூய்மையாகவும் ஆகும் இக்கல்வியை அகில உலகமெங்கும் பிரம்மாவின் மூலமாக உருவாக்கிய பிரம்ம குமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக் கழகத்தினூடாக கலியுக இறுதியாகிய தற்போதைய நேரம் கற்பித்துக் கொண்டிருக்கிறார்.

6) இப்போது சற்று சிந்திப்போமா?

உலக மனிதர் துன்பத்திற்காக கடவுளைக் கூப்பிட்டாலும் கூட துன்பத்திற்கான காரணத்தை அதாவது அதற்கான தம்மிடமுள்ள குறையைஅறிந்து அதற்கான நிவாரணம் காணவேண்டும் என்ற விழிப்புணர்வு இல்லாத நிலையில் இருப்பதால் கடவுளிடம் அதைத் தாருங்கள் இதைத் தாருங்கள் அதன்மூலம் எமது துன்பம் தீரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இல்லாவிட்டால் இறைவனையே நொந்து கொள்கிறார்கள்.

ஆனால் கடவுளின் விருப்பம் என்ன? குழந்தைகள் தமது அறியாமை நீங்கி தமது சக்திகளை கண்டுணர்ந்து அவற்றை விருத்தியடையச் செய்வதன் மூலம் மீண்டும் அமைதி மற்றும் சந்தோஷமான வாழ்வை உருவாக்க வேண்டும் என்பதாகும். அதற்காகவே வழியையும் காட்டுகிறார்.

அடுத்து கடவுள் கருணைக்கடலாவார். அவருக்கு பயந்து விரதம் அனுட்டித்தல் நேத்திக்கடன் செய்தல் போன்றவற்றைச் செய்கின்றார்கள். அன்புக்கடலான கடவுள் எம் அனைவரதும் தந்தையாவார். பயப்படுவதற்குரியவரா? அடுத்து அவர் ஆன்மிகமானவர் இத்தகைய பௌதீகமான கிரியைகளால் சந்தோஷத்தைப் பெறுபவரல்ல. அத்துடன் இவற்றால் அவரை நாம் அடையவும் முடியாது. குருட்டு நம்பிக்கையோடு செய்கிறோம் தற்காலிக சந்தோஷத்தை பெறுகிறோம். ஆனால் நாம் இதுவரை செய்த செயல்களின் பாவம் அழியவும் இனிமேல் சரியான செயல் செய்யவும் மனிதமனம் மற்றும் புத்தி தூய்மையாக வேண்டும்.

ஒவ்வொரு மனிதரும் மனம் புத்தி தூய்மையாகி அமைதியாக வாழவேண்டுமாயின் புத்தி மூலமாக மனதை இறைவனோடு தொடர்புபடுத்தும் தியானம் மட்டுமே ஒரேஒரு வழியாகும். அதுவும் அவரைப்பற்றி அறியாமலே இருப்பவர்க்கு தானே தேடி வந்து தன்னை அறிவித்து இத்தியானக்கல்வியையும் கற்பிக்கின்றார்.

தன் குழந்தைகளுக்காகவே இறைவன் இக்கல்வியை இலவசமாக உலகம் முழுவதிலும் பிரஜாபிதா பிரம்மாவினூடாக ஸ்தாபித்த பிரம்ம குமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக்கழகத்தினூடாக கற்பித்துக்கொண்டிருக்கிறார்.

நேரத்திற்கேற்ப ஞானத்தைப் ஞானோதயம் பெற்று வாழ்வோமாக!

**நன்றி,**
**திருமதி. ஞானா தனபாலசுந்தரம்**
**பிரம்ம குமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக் கழகம், ஸ்காபரோ**
(416) 439-9001

## குடும்ப தினம்

குடும்பம் என்பது கோவில் போன்றது
குடும்பத் தலைவி ஒளிவீடும் விளக்கு
கடமை தவறாக் கணவன் பூசாரி
குழந்தைகள் உணர்வுள்ள வழிபடும் விக்கிரகம்

பேரன் பேர்த்திகள் வழிபடும் பக்தர்கள்
பேரப் பிள்ளைகள் கோவில் மணிகள்
தாரமாய் மகனால் தத்தெடுத்த காரிகை
தமது பொறுப்பை செவ்வனே செய்வரே!

ஓடியோடி ஓய்விலா உழைத்துக் களைத்தவர்
ஓரிரு நாட்கள் ஓய்ந்திட இயலோர்
கூடிக் களித்துக் கொண்டாட முடியாதார்
குடும்பமாய்த் தங்கி இருக்க வாய்ப்பற்றோர்

உண்ண நேரமும் உறங்கவும் வழியற்றோர்
உற்ற துணையுடன் உறவாட நேரமற்றோர்
வண்ணமாய் வாழ்த்துக் கூறியே கொண்டாடி
வாஞ்சை செலுத்தும் உன்னதத் திருநாளே!

வாங்கிய வீட்டில் வசிக்க நேரமின்றி
வசதியாய்க் கட்டிலில் படுக்க முடியாதோர்
தாங்கிய வீடுவிட்டுத் தனிவீடு சென்றோர்
தொழில் நாடித் தொலைநகர் ஏகினோர்

முதுமை காரணமாய் மூத்தோரகம் அடைந்தோர்
மாமன் மாமிகள் பேரன் பேர்த்திகள்
மதுவும் மாமிசமும் பரிமாறி உண்டே
மகிழ்வுடன் கொண்டாடும் தினமே இந்நாளே!

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# தெற்காசியாவின் மிக நீண்ட காணாமல் போன தமது உறவினர்களின் தலைவிதியை வெளிப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் போராட்டம் ஒன்பதாவது ஆண்டில்

இலங்கை செய்திகள்
Sri Lanka News





இறுதிக்கட்டப் போரில், இலங்கை அரசின் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்த அல்லது கையில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் காணாமல் போன தமது உறவினர்களின் தலைவிதியை வெளிப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் போராட்டம் நீதியின்றி ஒன்பதாவது ஆண்டை எட்டியுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களிலும் பிரதிநிதித்துவத்துடன் தமிழ்த் தாய்மார்களால் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்ட இயக்கம் அண்மைக்கால வரலாற்றில் தெற்காசியாவிலேயே மிக நீண்ட போராட்டமாக கருதப்படுகிறது.

மே 2009 இல் உள்நாட்டுப் போர் இரத்தக்களரியுடன் முடிவடைந்ததிலிருந்து, தமது கணவர், மகள்கள், மகன்கள், சகோதரர்கள் மற்றும் உறவினர்களை தமிழர் தாயகப் பிரதேச மக்கள் தேடி வருவதோடு, பெப்ரவரி 20, 2017 முதல் 2,922 நாட்களாக தொடர்ந்து போராடும் பெற்றோர்களில் குறைந்தது 350 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

போராட்டம் எட்டு வருடங்களை பூர்த்தி செய்து ஒன்பதாவது வருடத்தை எட்டியுள்ள நிலையில், உள்ளூரில் கிடைக்காத நீதியை நிலைநாட்டுவதற்காக சர்வதேச சக்திகளிடம் தஞ்சமடைந்துள்ள, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தமிழ் தாய்மார்கள் போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சியில் நடைபெற்ற நடைபவனியில் ஒன்றிணைந்தனர்.

தமிழ்த் தாய்மார்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்த அதே வருடத்தில் அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட காணாமல் போனோர் அலுவலகம் (OMP) கடந்த 9 வருடங்களாக ஒரு காணாமற் போன ஒருவரின் தலைவிதியை வெளிப்படுத்த முடியவில்லை.

பெப்ரவரி 20 அன்றைய தினம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து தமிழ்த் தாய்மார்கள் தங்களின் தலையிலும் கைகளிலும் தீச்சட்டியை ஏந்தியவாறு கிளிநொச்சி டிப்போ சந்தி வரை சென்றனர்.

"குற்றவாளிகள் நீதியை வழங்குவார்களா?" என சிங்களத்தில் எழுதப்பட்ட பதாதைகளையும் போராட்டக்காரர்கள் கைகளில் ஏந்தியிருந்தனர்.

நீதி மற்றும் உண்மைக்கான தனது போராட்டத்தை ஒருபோதும் கைவிடப் போவதில்லை என, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் அம்பாறை மாவட்டத் தலைவி தம்பிராசா செல்வராணி போராட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

"இலங்கை ஜனாதிபதிகளிடமும் நீதியைக் கேட்டு நின்ற நிலையில் இன்று சர்வதேசத்திடம் நீதியை கோரி நிற்கின்றோம். எங்களுக்கு உள்ளக பொறிமுறையில் நம்பிக்கையில்லை. எங்களது உறவுகள் 350ற்கும் மேற்பட்டோர் இறந்தாலும் நாங்கள் இறக்கும் தருவாயில் இருந்தாலும் உண்மைக்கும் நீதிக்குமான எங்களது போராட்டம் தொடருமென்பதை உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டுகின்றோம்."

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு நீதி வழங்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் கால அவகாசம் வழங்கக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

"ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்திற்கு காலக்கெடுவை கொடுக்கக்கூடாது. எங்களது பிரச்சினைக்கான தீர்வை தர வேண்டும். தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்."

அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்கு மேலாகியும் தமது அன்புக்குரியவர்களுக்கு நீதியை வழங்குவதற்கான எந்த சமிக்ஞையையும் வெளியிடவில்லை எனவும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் தாய்மார்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.


கடந்த பெப்ரவரி 2ம் வாரத்தில் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களுக்கு எதிரான பாகுபாடு ஒழிப்பு குழுவில் (CEDAW) பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தலைமையிலான இலங்கை பிரதிநிதிகள் காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுடறிய போராடும் தமிழ் தாய்மார்கள் பற்றி எதுவும் கூறவில்லை.

இலங்கை அரசால் இழைக்கப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்பான உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் தண்டனையின்மையை அனுபவிக்கவும் வரப்பிரசாதங்களைப் பெறவும் அனுமதித்தமைக்காக நாட்டை ஆளும் அரசாங்கங்கள் சர்வதேச அளவில் விமர்சிக்கப்பட்டுள்ளன.





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1134

## வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையாஉ கோவில் தெல்லிப்பளை

இதுவரைகாலமும் தான் வாழ்ந்த வாழ்க்கையும், தான் கற்றுக்கொண்டவையும் தம்மைப் புகழ உதவியதேயன்றி, உண்மை நிலையை உணர்த்தவல்லவையல்'ல என்பதை உணர்ந்தார். இவைகளுக்கு அப்பாலுள்ள இறையுணர்ச்சியை ஒரு விநாடிகூட மறக்கவியலாநிலை எய்தினார். இதனால் அமைதிநாடி மருதடிப்பிள்ளையார் ஆலயத்தின் அருகே ஓர் ஆச்சிரமம் அமைத்து அப்பெருமானோடு இரண்டறக்கலந்து அவரோடு உரையாடிக்கொண்டு "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்ற நிலையில் ஏகாந்த உலகிலே இன்புற்றார். இவ்வாறாக மருதடியானுடன் இரண்டறக்கலந்து வாழ்ந்த வித்துவான் கணேசையர் அவர்கள், 1958 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இருபத்தி மூன்றாந்திகதி மருதடியானைத் தியானித்தவாறு இவ்வுலகை நீத்தர்.

மருதடியானின் புகழைப் பல புலவர்கள் பலவாறாகத் துதித்துப் போற்றிப் பாமாலைகள் பாடியுள்ளனர். இவர்களுள் மருதடியானுக்கு அருத்தமண்டபம் அமைத்த மெய்யடியார் கந்தரின் சகோதரர்களான புலவர் மயில்வாகனனாரும், ஆசிரியர் சரவணமுத்து அவர்களும் குறிப்பிடத்தக்வர்கள். இவர்களைப்போலவே மருதடியானின் புகழை இவ்வூரைச் சேர்ந்த முத்துக்குமார ஆச்சாரி சுவாமிகளும் பலவாறாக விதந்து பாமாலை செய்துள்ளார்.வருத்தலைவிளான் மருதடிப் பிள்ளையார்மீது கொண்ட ஆராத பக்தியின் காரணமாக, அவரது புகழைப் பாடிப் போற்றிய அன்பர்கள் உள்ளத்தில் என்றென்றும் விநாயகர் வீற்றிருந்து, காலத்தால் அழியாத பெரும பொக்கிஷங்களை உலகுக்கு வழங்க அருளியுள்ளார். இவர்கள் சென்ற பாதையிலே தற்காலத்திலும் பலஅன்பர்கள் சென்று மருதடியான்மேல் தோத்திரங்களும், போற்றுதல்களும் செய்து பேரின்பம் அடைந்து வருகின்றனர்.

பாடிப்பரவும் பணியில் திளைத்தவர்கள் ஒருபுறமும், வேண்டுதல்களை ஏற்று குறைநீக்கி நிறைவளிக்கும் குஞ்சரமுகத்து மருதடியானை மறவாது, அவன் தாள்பணிந்து கோயிற்பணிகளைத் தொடர்ந்தும் செய்வதில் ஆர்வம் கொண்டவர்கள் ஒருபுறமுமாக பக்தகோடிகள் காணப்படுகின்றனர். மருதடிப்பிள்ளையாரின் வீதியுலாக்காட்சியை அழகொளிரக்காணும்பொருட்டு, 1929 ஆம் ஆண்டு முதல் பல அடியார்கள் மருதடிப்பிள்ளையார் ஆலயத்திறகுப் பல வாகனங்களை உவந்தளித்துள்ளார்கள். முதல்முறையாக 1928 ஆம் ஆண்டு மருதடிப்பிள்ளையார் வீதிவலம் வருவதற்கேற்றவகையில், மூஷிகவாகனம் உபயம் செய்யப்பட்டது. பின்னர் குதிரை வாகனமும், சிறிய கேடயமும் திரு. முத்துத்தம்பி என்பவரால் செய்து கொடுக்கப்பட்டது. நீர்வேலியைச் சேர்ந்த திரு. செல்லப்பா அவர்களால் பெரிய சகடையும், திரு. வ. கதிர்காமத்தம்பி மற்றும் அவரது சகோதரிகளின் குடும்பத்தினரால் சிறிய சகடையும் உபயம் செய்யப்பட்டது. திரு. இராசரத்தினம் என்பவரால் சிறிய இடபமும், திரு. ந. நடராசா என்பவரால் ஆனைவாகனமும், திரு.க.விநாயகமூர்த்தி தம்பதிகளால் பெரிய மூஷிகவாகனமும் மருதடிவிநாயகனுக்கு உபயம் செய்யப்பட்டது.

1933 ஆம் ஆண்டு திரு. சண்முகம் தம்பதியினரால் தங்கவேல் பிரதிஷ்டை செய்யப்பட்டது. திரு. தம்பிமுத்து தம்பதிகளால் வேல் ஒன்று செய்து ஆலயத்திற்கு அளிக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு திரு.மாணிக்கவாசகர் தம்பதிகளால் சிவகாமி அம்பாள் சமேத நடேசர் சந்நிதி பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதேகாலப்பகுதியில், திரு. தம்பிமுத்து தம்பதிகளால் புதிய உற்சவமூர்த்தியும் செய்தளிக்கப்பட்டது. மருதடிவிநாயகர் திருப்பணிச்சபையால் அர்த்தமண்டபமும், கோவிலும் புனரமைக்கப்பட்டு 1976 ஆம் ஆண்டு மாசிமாதம் பதினோராந்திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இரண்டாவது கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நிறைவேறியது.

திரு. சுப்ரமணியம் அவர்களால் நிர்மாணிக்கப்பெற்ற மணிக்கூட்டுக்கோபுரத்தை, 1985 ஆம் ஆண்டு, திரு வல்லிபுரம் சாந்தமூர்த்தி அவர்கள் புதுப்பித்துச் சிறப்பாக அமைத்துள்ளார் இவ்வாறான உபயங்கள் இன்றுவரை தொடர்வது பக்தர்கள் மருதடியான்மீது கொண்ட பக்தியை எடுத்துக்காட்டுவதாகவே அமைகின்றது. அத்தோடு ஆலயத்திலும் காலத்திற்குக் காலம் திருப்பணிகள் பல செய்வது தொடர்ந்துள்ளது. ஆதிமூல மூலவர் தாபிரமூர்த்தியை, திரு. செல்லத்துரை தெய்வேந்திரம் அவர்கள் உபயம் செய்துள்ளார்கள். செல்வி ஜெயரத்தினதேவி சபாரத்தினம் ஆசிரியையால் பஞ்சமுகவிநாயகர் உபயமாக அளிக்கப்பட்டது. திரு. தம்பிமுத்து குடும்பத்தினரால் முருகன் பரிவார ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. நவக்கிரக சந்நிதியினை திரு. ச. தர்மலிங்கம் குடும்பத்தினரும், மூர்த்திகளை திரு. பிரேமச்சந்திரன் வசந்தாதேவி தம்பதிகளும் உபயம் செய்துள்ளனர். திருமதி. சிவமாலை தம்பிராசா அவர்களால் வைரவர் பரிவார ஆலயம் அமைக்கப்பட்டது. திருவாளர் தம்பிராசா அவர்களால் கொடித்தம்பம் உபயமாகச் செய்து கொடுக்கப்பட்டது. வசந்தமண்டபத்தினை திரு. சின்னப்பு அவர்கள் கட்டிக்கொடுத்துள்ளார். சண்டேஸ்வரர் சந்நிதியினை திரு. பொ. கனகரத்தினம் அவர்கள் உபயம் செய்துள்ளார்கள். இவ்வாறான பல பணிகளை அன்பர்கள் பலரும் செய்துள்ளனர். இந்நிலையில் 1989 ஆம் ஆண்டு பங்குனிமாதம் 22 ஆந்திகதி உத்தரநட்சத்திரத்தில், அக்காலத்து திருப்பணிச்சபை மூன்றாவது கும்பாபிஷேகத்தை சிறப்பாக நிறைவேற்றியது.

இக்காலப்பகுதியின் பின்னரும் காலத்திற்குக் காலம் பல்வேறு திருப்பணிகள் வருத்தலைவிளான் மருத்தடிப்பிள்ளையார் ஆலயத்திலே நடைபெற்று, கும்பாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளது. தமிழீப்பகுதிகளிலே தொடரும் யுத்தங் காரணமாக ஏனைய ஆலயங்களைப்போல இவ்வாலயத்தின் வரலாற்றிலும், பின்னடைவு தற்காலத்திலே ஏற்பட்டுள்ளது. ஆயினும், மருதடியான்மீது பக்திகொண்ட அன்பர்கள், நாட்டுநிலைமை காரணமாகப் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும், சூழ்நிலைகள் சரியாக அமையும் வேளைகளில் இவ்வாலயத்திற்கு வருகை தருவதோடு, ஆலயத் திருப்பணிகளில் நாட்டங்கொண்டும் செயற்பட்டு வருகின்றனர்.

*" தன்மம் சிறந்திங் குயிர்வர அயில்விடு தாதாய் வெண்*
*சங்கம் பரந்தங் கலையினில் அலைவுறும் செந்தூராய்*
*மன்னும் தடங்கன் புளியடி மருவிய மைந்தாவுன்*
*மன்றல் மலர்ந்தங் கருள்பொழி பதமலர் கண்டேன் என்*
*கன்மம் பொடிந்து கருகிய திதயமும் விண்டேயென்*
*கண்கள் மலர்ந்தங் கருவியில் ஒழுகிட முந்தாழிச்*
*சன்மம் மடிந்து தரைமிசை உருளவும் நின்றேனே*
*தங்கம் மலர்ந்த மணிமயில் கடவிடும் முன்னோனே. "*

**வளரும்...**

NO. #1 ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST



World Famous Indian Astrologer
PANDIT: SAI RAM
Face Reading, Palm Reading,
Horoscope & Date of Birth



SOLUTIONS & SUGGESTIONS:

OPEN 7 DAYS
9 AM to 7.30 PM

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.

Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob
Vasthu Prob
Real Estate
and all other

Call for 1 FREE QUESTION


இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

100% GUARANTEE

+1 437-829-1722
2993 Islington Ave, North York, ON, M9L 2K9
(Major intersection: STEELES & ISLINGTON)

# சிம்பலாகஸ்கொட்டுவ மதீனா தேசிய பாடசாலையில் கவிஞர் ரவூப் ஹஸீர் தலைமையில் இடம்பெறவுள்ள "கல்விப் பணியில் சவால்களும் சாதனைகளும்" நூல் வெளியீட்டு விழா

இலங்கை செய்திகள் Sri Lanka News




(அபூ ஷைனப்)

ஓய்வுநிலை அதிபர் எம்.எல்.எம். இஸ்மாயில் எழுதிய "கல்விப் பணியில் சவால்களும் சாதனைகளும்". என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 23-02-2025 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு சிம்பலாகஸ்கொட்டுவ மதீனா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் கவிஞர் ரவூப் ஹஸீர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக அதிபர் இஸ்மாயில் அவர்களின் மாணவர்களான கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை பேராசிரியர் எம்.டி.எம் மஹீஷ், வடமேல் மாகாண மேலதிக கல்வி பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றிருக்கும் யூ.எம்.பி. ஜெயந்திலா ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

கௌரவ மற்றும் சிறப்பு அதிதிகளாக அதிபர் இஸ்மாயில் அவர்களினால் உருவாக்கப்பட்டு கல்விப்புலத்தில் உயர் பதவிகள் வகிக்கின்ற இந்தப் பாடசாலையின் பழைய மாணவர்கள் பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்த நூல் பற்றிய நயவுரையை ஓய்வு பெற்ற குளியாப்பிட்டிய வலயக்கல்வி பணிப்பாளர் எம்.ஏ.ஜி. அஷ்ரப் வழங்க உள்ளார். நூலின் முதல் பிரதியை மதீனா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் எம்.ஆர்.எம் இம்ரான் பெற்றுக் கொள்வார். ஏற்புரையும் நன்றியுரையும் நூலாசிரியர் ஓய்வு பெற்ற அதிபர் எம்.எல்.எம். இஸ்மாயில் அவர்கள் வழங்குவார்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பும் தொகுப்பும் மதீனா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் கவிஞர் நாச்சியாதீவு பர்வீன் மேற்கொள்வார்.

"கல்விப் பணியில் சவால்களும் சாதனைகளும்" என்ற இந்நூலானது கல்விப் புலத்தில் இயங்குகின்றவர்களுக்கு உசாத்துணை நூலாக அமையும். கல்வி முகாமைத்துவம் மற்றும், பாடசாலை முகாமைத்துவம் போன்ற செயற்பாடுகளில் ஒரு அதிபர் எதிர்நோக்குகின்ற சவால்களை அடையாளப்படுத்தி அவற்றை சமயோசிதமாக தீர்த்து வைக்கின்ற வழிவகைகளை சொல்லி நிற்கிறது இந்த நூல்.

# கடந்த அரசாங்கங்களின் தவறான நிதி முகாமைத்துவத்தின் காரணமாக வங்குரோத்தடைந்த இலங்கையை கட்டியெழுப்ப வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அடிப்படை நடவடிக்கை இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக எடுக்கப்பட்டிருக்கின்றது

## கொழும்பு சினமன் லைப் ஹோட்டலில் 1 நடைபெற்ற 2025 வரவு செலவுத் திட்டத்திற்குப் பின்னரான கருத்தாடலில் ஜனாதிபதி அநுர குமார தெரிவிப்பு




கடந்த அரசாங்கங்களின் தவறான நிதி எமுகாமைத்துவத்தின் காரணமாக வங்குரோத்தடைந்த இலங்கையை கட்டியெழுப்ப வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அடிப்படை நடவடிக்கை இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக எடுக்கப்பட்டிருக்கின்றது என கொழும்பு சினமன் லைப் ஹோட்டலில் 19ம் திகதி நடைபெற்ற 2025 வரவு செலவுத் திட்டத்திற்குப் பின்னரான கருத்தாடலில் ஜனாதிபதி அநுர குமார தெரிவித்தார்.

19ம் திகதி புதன்கிழமை கொழும்பு சினமன் லைப் ஹோட்டலில் நடைபெற்ற 2025 வரவு செலவுத் திட்டத்திற்குப் பின்னரான கருத்தாடல் ("POST BUDGET FORUM 2025") இல் ஜனாதிபதி அநுர குமார அவர்கள் விசேட பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், கடந்த அரசாங்கங்களின் தவறான நிதி முகாமைத்துவத்தின் காரணமாக வங்குரோத்தடைந்த நமது நாடு, தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட தகுதிகாண் காலத்தில் இருப்பதாக இதன்போது சுட்டிக்காட்டியதுடன், இந்த சூழ்நிலையில் ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அடிப்படை நடவடிக்கை இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக எடுக்கப்பட்டிருக்கின்றது.

கடன் மறுசீரமைப்பு மூலம் கிடைத்த மூன்று வருட சலுகைக் காலத்தை சிறந்த முறையில் பயன்படுத்தி, 2028 ஆம் ஆண்டுக்குள் சரியான பொருளாதார முகாமைத்துவத்தின் மூலம் கடன் திருப்பிச் செலுத்தும் திறனை அடைய அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

வங்குரோத்தடைந்த ஒரு நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப பல உலகநாடுகளுக்கு ஒரு தசாப்தம் வரை சென்றாலும், இலங்கை அதிலிருந்து மீள்வதற்கு ஒரு தசாப்தத்திற்கும் குறைவான காலமே செல்லும் என்று கணிப்பிட முடியும்.

இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் அரச வருவாயை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.1% ஆக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளதாகவும், முன்னுரிமை அடிப்படையில் நிதியை செலவிடுவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

பொருளாதாரத்தை விஸ்தரித்து பொருளாதாரத்தை கிராமங்களுக்குக் கொண்டு செல்வதன் மூலமும், குடிமக்களைப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக மாற்றுவதற்கும் இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதையும், இதனால் குடிமக்கள் பயனடையும் திறனை அதிகரிக்க முடியும.

பொருளாதாரத்தில் இருந்து விலக்கி வைக்கப்பட்ட குழுக்களை மீண்டும் பொருளாதாரத்திற்குள் கொண்டு வருவதன் மூலம் கிராம மட்டத்தில் சிறிய பொருளாதார அலகுகளை உருவாக்க தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதையும், அதன்படி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோரை உருவாக்குவதற்கான ஆர்வத்தை நாட்டில் உருவாக்க எதிர்பார்ப்பதையும் இதன்போது கூறினார்.

கைத்தொழில்துறைக்கு உதவுவதே அரசாங்கத்தின் நோக்கம் என்று சுட்டிக்காட்டியதோடு, உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதன் மூலம் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்குவதே அரசாங்கத்தின் குறிக்கோள்.

கிராமப்புற வறுமையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக கல்விக்காக இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் அதிக அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் பாடசாலைக் கட்டமைப்பில் மனித மற்றும் பௌதீக வளங்களை மறுசீரமைக்க எதிர்பார்ப்பதாகவும் கூறியதோடு, இது ஒற்றைத் திசை கல்விக்குப் பதிலாக பல் திசைக் கல்வியை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அரச செலவின முகாமைத்துவம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதோடு அரச சேவைக்காக அதிக செலவு மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, அரச நிறுவனங்களின் செலவினங்களை மறுபரிசீலனை செய்யும் எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியல் அதிகாரத்தை ஊழல் இல்லாத இடமாக மாற்றியுள்ளதாகவும், இலஞ்சம் கொடுக்காத கலாச்சாரத்தை உருவாக்குவது குடிமக்களின் பொறுப்பாகும்.

ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்க புதிய வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட எதிர்பார்ப்பதாகவும், இந்த ஆண்டு அதிக ஏற்றுமதி வருவாயை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தேன்.

துறைமுக மையப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை உருவாக்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இந்த ஆண்டு திறமையான கொள்கலன் பரிமாற்ற மையத்தை உருவாக்குவதில் வரவு செலவுத் திட்டதின் ஊடாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்காக நகர வர்த்தக நாமத் திட்டங்கள் (City Brand) செயல்படுத்தப்பட்டு வருவதோடு அனுராதபுரம், யாபஹுவ மற்றும் யாழ்ப்பாணம் போன்ற நகரங்களை முன்னேற்றுவதற்கான திட்டங்களும் வகுக்கப்படுகின்றன.


நாட்டின் பொருளாதார வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு இராஜதந்திர சேவையைப் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் துமிந்த ஹலங்கமுவ, வர்த்தக முகாமைத்துவம் தொடர்பான முதுமானி ஆய்வாளர் சங்கத்தின் தலைவர் சுராஜ் ரதம்பொல உட்பட ஆய்வாளர்கள் மற்றும் வர்த்தகத் துறைசார்ந்தோர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.




# தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட வேலன் சுவாமியை விசாரணைக்கு அழைப்பு!

பு. கஜிந்தன்


SRI LANKA POLICE MESSAGE FORM

கடந்த பௌர்ணமி தினத்தன்று நடைபெற்ற சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் குறித்து வாக்குமூலம் பெறுவதற்கு வேலன் சுவாமிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

20ம் திகதி வியாழக்கிழமையன்று பலாலி பொலிஸ் நிலையத்திற்கு, நண்பகல் 12 மணிக்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரையானது மக்களது காணிகளை அபகரித்து சட்டவிரோதமாக கட்டப்பட்ட நிலையில், அந்த விகாரையை அகற்றுமாறு கோரி இந்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உலக செய்திகள்
World News

# தமிழர் தாயகத்தின் அடையாளங்கள் சிதைக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும்!

## பிரித்தானியா தமிழர் பேரவை கண்டனம்




தமிழ் மக்களின் பூர்விக தாயகத்தினை முற்றாக விழுங்கி அதன் அடையாளத்தினை சிங்கள பௌத்த சின்னங்கள் மூலம் பிரதியீடு செய்ய வேண்டும் எனும் நோக்கத்துடன் 1948இலிருந்து அரசின் மூல வளங்கள், அதிகாரங்கள், காவல் துறை மற்றும் ஆயுதப் படைகள், சட்டங்கள் என்பனவற்றை பயன்படுத்தி இலங்கை அரசு தொடர்ச்சியாக தமிழர் தேசத்தினை சிதைத்து வருகின்றது.

வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியாக பிரிக்கும் முக்கிய நோக்கத்துடன் சிங்கள குடியேற்றம், பௌத்த விகாரைகள், யுத்த வெற்றி நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் நில ஒதுக்கீடுகள், வனவிலங்குகள் சரணாலயங்கள், வனப் பகுதி ஒதுக்கங்கள், காணி மற்றும் விவசாய அபிவிருத்தி திட்டங்கள், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் விசேட பொருளாதார வலயங்கள் என்ற போர்வையில் தமிழர் பாரம்பரிய நிலத்தினை திட்டமிட்டு அழிக்கும் உத்திகள் இடம்பெறுகின்றன.

சட்டங்கள் மற்றும் அதிகாரங்கள் மூலமும் ஆயுத படையினரின் ஆக்கிரமிப்புகள் மூலமும் ஏனைய சமூகங்களின் திட்டமிட்ட குடித் தொகை வளர்ச்சியும் தமிழர் தாயகத்தின் குடித்தொகைப் பரம்பலில் கணிசமான பாதிப்பினை ஏற்படுத்தி விட்டது.

ஆயினும் வடக்கில் தையிட்டி, வெடுக்குநாறி மலை, குறுந்தூர் மலை போன்ற இடங்களிலும் கிழக்கிலே மயிலத்தனையிலும் தொடர்ச்சியாக போராடி வரும் தமிழ் மக்கள் நில ஆக்கிரமிப்பினை அடையாளபூர்வமாக வெளிக் கொண்டு வருவது மிக முக்கிமான விடயமாகும். உயிர்ப்புடன் இருக்கும் பாரதூரமான பாதிப்புகளை மக்கள் திரள் போராட்ட வடிவத்தில் தொடர வேண்டும்.

இருப்பினும் இப் போராட்டங்களானவை இலங்கை தீவிற்குள் மட்டுமே அடங்கி விடுமாயின் அரசுக்கு எதிராக காத்திரமான தாக்கத்தினை ஏற்படுத்தி விட முடியாது போய் விடும். ஈழத் தமிழர்கள் இலங்கைக்குள் மட்டுமே போராடி நாம் எதிர்பார்க்கும் சாதகமான முடிவுகளை அடைந்து விட முடியாது என்ற யதார்த்தம் கசப்பானது.

இலங்கையில் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் நில ஆக்கிரமிப்புகளை ஆதாரத்துடன் ஒன்று திரட்டி, தொகுத்து, இலங்கைக்குள் மட்டுமே நின்று விடாது, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையம் போன்ற முக்கியமான அமைப்புகளின் மூலம் உலக அரங்கில் அம்பலப்படுத்தும் வகையிலான சமாந்தரமான நடவடிக்கைகளை அரசியல்வாதிகளும் சிவில் சமூக கட்டமைப்புகளும் மேலும் காத்திரமாக முன்னெடுக்க வேண்டும்.

நில ஆக்கிரமிப்பு குறித்த பல்வேறு ஆவணங்களை பிரித்தானியா தமிழர் பேரவையானது ஆய்வு செய்து வெளியிட்டு வருவதுடன் அரசாங்கத்தின் நில அபகரிப்பு தொடர்பான நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபையில் தொடர்ச்சியாக முன் வைத்து அங்கத்துவ நாடுகளின் அழுத்தங்களை ஏற்படுத்த வாதாடி வருகின்றது. மாறாக சர்வதேச சக்திகளின் தலையீடுகளை இலங்கை அரசு முற்றாக வெறுத்து ஒதுக்க முற்படுகின்றது.

அன்று போரினால் ஈழத்தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேற நிர்பந்தித்த காரணிகளை மாற்றி அமைக்காமல் கபடத்தனமாக அதனை வெவ்வேறு வழிகளில் தொடர்ந்து வருகின்றது. வடக்கு கிழக்கிலே மக்கள் மீள குடியேறி வாழ உகந்த சூழ்நிலைகளை ஏற்படுத்தாமல் அங்கே வாழும் தமிழ் மக்களை தம் பூர்விக பூமியிலிருந்து வெளியேற்றும் சூழ்நிலைகளை உருவாக்கி வருகின்றது.

இதன் மூலம் தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் இன விகிதாசாரத்தைக் குறைக்கும் நோக்கில் இலங்கையின் சிங்கள அரசு செயல்பட்டு வருவதை பிரித்தானியா தமிழர் பேரவையானது வன்மையாகக் கண்டிக்கிறது. அத்துடன் உலகின் சக்தி வாய்ந்த முடிவெடுக்கும் மையங்களை தமிழ் மக்கள் நேரடியாக அணுகி தமது சட்டபூர்வமான அதிகாரங்களை நிலைநாட்ட செயல்திறனுடன் ஒருங்கிணைந்து போராட வேண்டும் என வேண்டி கொள்கின்றது.

---

*(9 பக்கத் தொடர்ச்சி)*

திருகோணமலையில் 61 எண்ணெய் தொட்டிகள் சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து மேம்படுத்தப்படும்.

யாழ். நூலகத்திற்கு அத்தியாவசிய வசதிகளை வழங்க 100 மில்லியன் ரூபாய்

வரலாற்றில் ஒரு காலத்தில் வாக்குகளுக்காக நூலகங்கள் எரிக்கப்பட்டன.

யாழ்ப்பாண நூலகத்திற்கும் அதுதான் நடந்தது. யாழ்ப்பாணம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களை சேர்ந்த மாணவர்களும் வாசகர்களும் யாழ்ப்பாண நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர்.

யாழ்ப்பாண நூலகத்திற்கு அத்தியாவசிய வசதிகளை வழங்க 100 மில்லியன் ரூபாய்.

ஏனைய பகுதிகளில் நூலக மேம்பாட்டிற்காக ரூ. 200 மில்லியன்.

விளையாட்டுத் துறையின் மேம்பாட்டிற்காக 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

ஐந்து மாகாணங்களில் விளையாட்டுப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிக்க 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

மகாபொல புலமைப்பரிசில் 5,000 த்திலிருந்து 7,500 ஆக அதிகரிக்கப்படும்.

உதவித்தொகை 750 ரூபாயிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தப்படும்.

ஒரு பாலர் பாடசாலை குழந்தையின் காலை உணவிற்கு செலவிடப்படும் தொகை 100 ரூபாயாக உயர்ந்துள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிக்க 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

பாடசாலை உள்கட்டமைப்பை மேம்படுத்த 1000 மில்லியன் ரூபாய்.

சுகாதாரத்திற்காக 604 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

மீண்டும் மருந்துப் பற்றாக்குறை ஏற்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

மருந்துகளை வழங்குவதற்காக 185 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.

ஒட்டிசம் உள்ள குழந்தைகளுக்காக ஐந்தாண்டு தேசிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தோட்ட வைத்தியசாலைகளுக்கு மனிதவளம் மற்றும் மருந்துகளை அரசாங்கம் வழங்குகிறது.

கர்ப்பிணித் தாய்மார்களின் ஊட்டச்சத்துக்காக 7000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட முதன்மை மருத்துவப் பிரிவுகள் நிறுவப்பட்டு வருகின்றன, மேலும் சுகாதார விநியோகத்தை மேம்படுத்த டிஜிட்டல் மயமாக்கல் பயன்படுத்தப்படுகிறது.

பெண்கள் அதிகாரமளிப்பு திட்டத்திற்கு 120 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

தாய்மார்கள் மற்றும் குழந்தைகளை வளர்க்கும் திரிபோ'ா திட்டத்திற்கு 5,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

இந்த சலுகைகள் அனைத்தும் ஏப்ரல் 2025 முதல் வழங்கப்படும்.

அரசு சொகுசு வாகனங்களும் அடுத்த மார்ச் மாதம் ஏலத்தில் விடப்படும்

அனைத்து விலையுயர்ந்த அரசு சொகுசு வாகனங்களும் அடுத்த மார்ச் மாதம் ஏலத்தில் விடப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட பொது வளங்களை திறம்பட பயன்படுத்த ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு எம்.பி.க்களுக்கு வாகனங்களோ அல்லது வாகன அனுமதிப்பத்திரங்களோ இல்லை.

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு 500 மில்லியன் ரூபாய்

சுற்றுலாத் துறைக்காக டிஜிட்டல் டிக்கெட் முறை ஆரம்பிக்கப்படும்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இரண்டாவது முனையத்தின் கட்டுமானப் பணிகள் ஜப்பானிய உதவியுடன் நடைபெற்று வருகின்றன.

சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை உருவாக்குவது ஒரு முதன்மை நோக்கமாகும்.

வளர்ச்சி கடன் திட்டங்களுக்கு அரச வங்கிகள் தங்கள் உடன்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன.

தகவல் தொழில்நுட்ப வருவாயை ஐந்து பில்லியன் டொலர்களாக உயர்த்த நடவடிக்கை

இவ்வாண்டு தகவல் தொழில்நுட்ப வருவாயை ஐந்து பில்லியன் டொலர்களாக உயர்த்த நடவடிக்கை

டிஜிட்டல் பொருளாதாரத்தின் வளர்ச்சியை விரைவுபடுத்த 3,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.

தரவு பாதுகாப்புக்கான சட்டங்களை வலுப்படுத்துதல்

உயர் மட்ட டிஜிட்டல் பொருளாதார அதிகாரசபை ஒன்று நிறுவப்படும்.

அனைத்து குடிமக்களுக்கும் இலங்கையின் தனித்துவமான டிஜிட்டல் அடையாள (டிஜிட்டல் அடையாள அட்டை) முறை மிக விரைவில் நிறைவடையும்.

தொழில்துறை மற்றும் சேவைத் துறைகளின் உற்பத்தித்திறனை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

துறைமுகத்தில் கொள்கலன் மேலாண்மையை மேலும் திறம்படச் செய்வதற்காக, வேயங்கொடையில் 500 மில்லியன் ரூபாய் செலவில் உள்நாட்டு கொள்கலன் தளம் நிறுவப்படும்.

இலக்கை அடைய 750 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

துறைமுக நெரிசலுக்கு நீண்டகால தீர்வு காண நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

நாட்டில் ஒரு தேசிய தர மேலாண்மை அமைப்பு தேவை.

எங்கள் இலக்கை அடைய இந்த ஆண்டு 750 மில்லியன் ரூபாயை ஒதுக்குகிறோம்.

புதிய சுங்கச் சட்டம்.

பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை அதிகரிக்க 2025 - 2029 ஆம் ஆண்டுக்கான தேசிய ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டம்.

உயர்தர, மலிவு விலையில் மூலப்பொருட்களை அணுகுவதில் உள்ள கட்டுப்பாடுகளை நீக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு தேசிய கட்டணக் கொள்கை.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் வணிக ஒத்துழைப்புக்காகப் பயன்படுத்தப்படுகிறார்கள்.

பொது சேவைகளை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் நாட்டில் வணிகம் செய்வதற்கான வசதிகளை அதிகரித்தல்.

அரசாங்கத்திற்கு சொந்தமான நிலங்கள் உற்பத்தி பொருளாதார நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு விடப்படுகின்றன.

பொருளாதார மாற்றச் சட்டம் திருத்தப்பட்டு வருகிறது. இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் விரிவுபடுத்தப்படுகிறது.

இவ்வாண்டில் 19 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருவாய்

இந்த ஆண்டு ஏற்றுமதி வருவாய் 19 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்றுமதிகளை விரிவுபடுத்துதல், தேசிய ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல், நெருக்கடியால் உருவாக்கப்பட்ட சூழ்நிலையைப் பயன்படுத்தி சிறந்த சூழ்நிலையை உருவாக்குதல்.

2028 ஆம் ஆண்டில் கடன் மீளச் செலுத்தல் ஆரம்பிக்கப்படும்

கடனைத் திருப்பிச் செலுத்த உதவும் ஒரு பொருளாதார சூழலை நாங்கள் உருவாக்கி வருகிறோம்.

2028 ஆம் ஆண்டில் கடனைத் திருப்பிச் செலுத்தத் ஆரம்பிப்போம்.

ஏழைகளுக்கு அதிகாரம் அளிப்பது முதல் படியாகும்.

கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக வரலாற்றில் மிகப்பெரிய தொகை

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக வரலாற்றில் மிகப்பெரிய தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 5 வீத பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது

போட்டி நிறைந்த சந்தைக்கு ஏற்ப விலைகளை நிர்ணயிப்பதன் மூலம் சில துறைகளை ஒழுங்குபடுத்தும் கருத்துரு செயல்படுத்தப்படுகிறது.

அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்ச்சியாகவும் நியாயமான விலையிலும் வழங்கப்படுகின்றன.

தரமான தயாரிப்புகளையும் வழங்குகிறது.

உற்பத்தியின் பலன்கள் சமூகம் முழுவதும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

இது மக்களின் தீவிர பங்கேற்புடன் செய்யப்பட வேண்டும். மக்களை தனிமைப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் எந்த அர்த்தமும் இல்லை.

தொழில்கள், சேவைகள் மற்றும் விவசாயத்தில் உற்பத்தியை அதிகரித்தல்.

உள்ளூர் நிறுவனங்கள் மற்றும் சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

கூட்டு ஒழுக்கத்துடனும், வலுவான உறுதியுடனும் நாம் முன்னேறும்போது, நாடு விரைவில் பலன்களைப் பெறும்.

ஊழல் எதிர்ப்பு செயல்முறை எங்கள் பணியின் ஒரு முக்கிய அங்கமாகும்.

பொருளாதாரத்தை டிஜிட்டல் மயமாக்குவது அவசியம்.

# இவ்வார ராசிபலன்

**21-02-2025 வெள்ளி தொடக்கம் 27-02-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** ஏற்றுமதி தொழிலால் லாபம் தரும் வாரம். தாய்வழி உறவில் நன்மை உண்டாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். வெளியூர் பயணம் வெற்றியைத் தரும். நல்லோர் நட்பு கிட்டும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். உத்தியோக இடமாற்றம் உண்டு. பயணம் தடைப்படும். திடீர் செலவு உண்டாகும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். அதிருப்தி அதிகரிக்கும். பால் தானம் செய்வதால் பாவம் போகும். இலக்கிய ஆர்வம் கூடும். இனிப்பான செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புகள் கிட்டும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். கல்வியில் தடை ஏற்பட்டு விலகும். புதிய பொருள் சேரும். காலணிகள் காணாமல் போகும். தாய், தந்தை உதவி உண்டு. வெகுமதி தேடி வரும். வீண் வம்பு ஓடி ஒழியம். வாழ்க்கை வசதி பெருகும். காரிய வெற்றி கிட்டும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. நல்ல வாய்ப்புகள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். வில்லங்கம் விலகும். தொல்லைகள் அகலும். போட்டிகள் மறையும். தீர்த்த யாத்திரை செல்லும் வாய்ப்பு வரும். திருப்புமுனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,9,4,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,C




**ரிஷபம்:** உற்சாகத்தோடு செயல்படும் வாரம். சகோதர ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குதூகலம் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. தொழில் உற்பத்தி அதிகரிக்கும். நிதி நிறுவனம் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்பு விலகும். வேண்டிய உதவி கிட்டும். விவசாய நிலம் சேரும். வெற்றிக்கான வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். செயல்களில் துணிவு கூடும். செய்த்தொழில் நன்மை தரும். செல்வாக்கு அதிகமாகும். வழக்குகள் திருப்பம் தரும். பொறாமைகள் விலகும். வேலை பளு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வருமானம் திருப்தி தரும். பூமியால் லாபம் உண்டு. நற்செய்தி நாடி வரும். தொழில் வாய்ப்பு கூடி வரும். தடைகள் விலகும். புதிய பொறுப்புக்கள் வரும். அரசியலில் பொறுமை தேவை. பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். செயலில் வேகம் கூடும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். கடன் கொடுப்பதை தவிர்க்கவும். பெரிய திருப்பம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 9,5,2,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,X




**மிதுனம்:** புதிய தொழில் வாய்ப்புக்கள் வரும் வாரம். மாற்று இன நட்பு பெருகும். வேற்று மதத்தினரால் உதவி உண்டு. தோற்றப்பொலிவு கூடும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபக்காரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். வெகுமதி தேடி வரும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் எண்ணம் ஈடேறும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். உறவினர் பாராட்டு கிட்டும். கடன் உபத்திரவம் குறையும். அளவான பேச்சு நன்மை தரும். வழக்குகள் சாதகமாகும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கிய அபிவிருத்தி உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வியாபாரம் லாபம் தரும். வாழ்த்துச் செய்திகள் வந்து சேரும். சொத்துச் சேர்க்கையுண்டு. ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரண சேர்க்கையுண்டு. மன சந்தோஷம் கூடும். அந்தஸ்து உயரும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். முன்கோபத்தை குறைக்கவும். புதிய முயற்சியில் சற்று கவனம் தேவை. மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் குறையும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டும். நிம்மதி பெருகும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 7,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**கடகம்:** தன வரவுகள் அதிகரிக்கும் வாரம். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசுவழி ஆதாயம் உண்டு. நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை குறையும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணம் உருவாகும். தகுதிகள் உயரும். வறுமைகள் ஒழியும். புகழ்ச்சி அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. காரியத்தடை விலகும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். குதூகலமான எண்ணம் மேலோங்கும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திருமண வாய்ப்பு கூடி வரும். ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவு அதிகரிக்கும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். மெத்தனப் போக்கு விலகும். பூமியால் லாபம் உண்டு. பாதகமான சூழ்நிலை விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. வருமானம் பெருகும். புத்திரர் வழியில் நன்மை உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காரியசித்தி ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 2,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,V




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**சிம்மம்:** சோம்பல் அதிகரிக்கும் வாரம். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புதமான வாய்ப்பு கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். ஆரோக்கியம் அதிகரிக்கும். மாற்று யோசனை பலன் தரும். வேலைவாய்ப்புக் கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். நிம்மதியாக இருப்பீர்கள். உத்தியோக உயர்வு உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மைகள் உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனைத் தீரும். வியாபாரம் சிறக்கும். இடமாற்றம் நன்மை தரும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். தொழில் போட்டிகள் உருவாகி மறையும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். சுயநலம் கூடும். ஸ்திர சொத்து சேரும். முயற்சியில் வெற்றி உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். பணிவான பேச்சுக்கள் தேவை. நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். சுபச்செலவு அதிகரிக்கும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதைகள் நீங்கும். நன்மைகள் பெருகும். பதவியில் பாராட்டுகள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். சிரமங்கள் குறையும். பெருமைகள் உயரும். நிர்வாக அலைச்சல் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,T




**கன்னி:** பதவி உயர்வு கிடைக்கும் வாரம். பொருளாதாரம் உயரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. படிப்பில் கவனம் வேண்டும். உடன்பிறப்பால் உதவி உண்டு. நண்பர்களால் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கணவன், மனைவி உறவு சீராகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் ஏற்படும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. பெண்கள் பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். தொழில் வாய்ப்புக்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் முடிவிற்கு வரும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மையுண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பழையகடன் வசூலாகும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். மங்கலச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். களவுபோன பொருள் திரும்ப கிடைக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**துலாம்:** சுப விரயம் ஏற்படும் வாரம். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். பழையக்கடன் வசூலாகும். மாற்று இன நட்பு பெருகும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். பெண்களின் ஆலோசனை பூர்த்தியாகும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆனந்தம் குடிகொள்ளும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித்தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பாதிப்புக்கள் அகலும். உற்சாகம் களைகட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். பணிவும், துணிவும் கூடும். கஷ்ட காலம் மறையும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வாகன மாற்றம் உண்டாகும். ஆன்மீகச் சிந்தனை அதிகமாகும். பணியில் கண்டிப்பு தேவை. தனவரவுகள் பெருகும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். மேன்மைகள் தொடரும். சுயதொழில் வாய்ப்பு அமையும். சாதனை படைக்கும் வாரம். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல் வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். பேச்சில் கம்பீரம் இருக்கும். மாற்றங்களை சந்திப்பீர்கள். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். பொறாமைகள் அதிகரிக்கும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. ஏற்றங்கள் அமையும். கௌரவம் அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். வெற்றி வீடு தேடி வரும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிராணிகளால் தொல்லை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பண்ணாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,3,5,7
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**விருச்சிகம்:** சுபசெய்தி வரும் வாரம். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரம். குடும்பத்தில் மேன்மை உண்டு. பூர்வீகச் சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பாதகமான சூழ்நிலை விலகும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களைகட்டும். யோகமான காலம். ஆடை, அணிகலன்கள் சேரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். விளையாட்டுத் துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும்.

(தொடர்ச்சி 30 பக்கம்)


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

## இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். திருப்புமுனை ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவிற்கு வரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். விரயங்கள் அதிகமாகும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு குறையும். சாதனையான எண்ணம் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 6,9,2,4

அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q




**தனுசு:** மாற்றங்கள் நிகழும் மகத்தான வாரம். வெகுமானம் கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டுக் கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். வெற்றிச்செய்தி வரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. மனோ பயம் அகலும். வினோதமான எண்ணங்கள் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பாராட்டுக்கள் அதிகமாகும். கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். நண்பர்கள் உதவி கிடைக்கும். திருமண வாய்ப்பு வரும். பொறியியல் துறை லாபம் தரும். செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். கனவுகள் பலிதமாகும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். வாழ்க்கை வசதி பெருகும். வாழ்வு நிலை உயரும். மனவேதனை குறையும். பணவிரயம் ஏற்படும். தேகப்பலம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,9,7,1

அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிரஷ்ட எழுத்துக்கள்: A,X




**மகரம்:** நலம் விளையும் வாரம். நன்மைகள் அதிகமாகும். நட்புகள் பெருகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். மங்களச் செய்தி வரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாகத் திறன் கூடும். செயல்திறன் வெளிப்படும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கடன் பிரச்சனை உருவாகும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். உள்ளம் மகிழும். மனைவியால் அமைதி உண்டாகும். முக்கிய எண்ணம் நிறைவேறும். உடன் பிறந்தோரால் உதவி உண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. சுப காரிய செய்தி வரும். வேலைபளு அதிகரிக்கும். தொழில் மாற்றம் ஏற்படும். சந்தோஷம் அலைமோதும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச்சலுகைகள் கிட்டும். தொழில் போட்டி மறையும். சோதனைகள் குறையும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். பணிமாற்றம் ஏற்படும். பெருமைகள் தேடி வரும். வெற்றிகள் குவியும். அரசு வகை ஆதாயம் கிட்டும். பழிச்சொல் தேடி வரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். புத்தி சாதுர்யம் கூடும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். தீய எண்ணம் விலகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு உதவிகள் கிட்டும். வில்லங்கம் விலகும். செயல்திறமை வெளிப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,T




**கும்பம்:** எச்சரிக்கையோடு செயல்பட வேண்டிய வாரம். எதிலும் நிதானம் தேவை. எடுத்தக் காரியம் தடைப்படும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து கூடும். பூர்வீக சொத்து சேரும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். விவசாயம் மேன்மை பெறும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். காரியம் கைக்கூடும். தொழில் லாபம் கிட்டும். மனதெளிவு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். உழைப்பு உயர்வு தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரணம் சேரும். வீண் வம்பு விலகும். நிதி நிலைமை சீராகும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் விலகும். கொடுக்கல், வாங்கலில் நன்மை உண்டாகும். கவலைகள் அடியோடு விலகும். விவசாயம் கை கொடுக்கும். தொலைதூர பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபார மந்த நிலை அகலும். கடன் உதவி கிட்டும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கெடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை தேவை. பணியில் உயர்வு கிட்டும். சுபக்காரியம் கைகூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். வேற்று மதத்தினரால் உதவிகள் உண்டு. தோற்றப்பொலிவு கூடும். மாற்று எண்ணம் உதயமாகும். அளவான பேச்சு நன்மை தரும். பயணம் நன்மை தரும். மங்களகரமான காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,9,5,1

அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,T




**மீனம்:** சாதனை படைக்கும் வாரம். சோதனைகள் நீங்கும். சகோதர உறவு பலப்படும். சந்தோஷம் அதிகரிக்கும். பாதகம் விலகும். பணியார்வம் கூடும். பண நெருக்கடிகள் தீரும். வீண் செலவு கூடும். வில்லங்கம் தீரும். வியாபாரம் மேன்மை தரும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். வீடு, மனை யோகம் வரும். வாகன மாற்றம் வரும். வாய்ப்புக்கள் தேடி வரும். புதிய தொழிலமையும். தனவரவு பெருகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். இனிக்கும் சம்பவம் அமையும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. முடிவுகள் சாதகமாகும். விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்பு விலகும். வெற்றிக்கான வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். திக்கற்ற நிலை மாறும். ஒப்பற்ற பலன் சேரும். தொழில் திறமை பளிச்சிடும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். பொருள் நஷ்டம் ஏற்படும். வேலைபளு கூடும். அரசியல் ஆதாயம் உண்டு. குடும்ப சச்சரவு ஏற்படும். பணியில் கவனம் தேவை. சங்கடம் அதிகமாகும். வருமான வரி தொல்லை ஏற்படும். விரோதம் ஏற்படும். படிப்பில் ஆர்வம் கூடும். ஆரோக்யம் சீராகும். தெய்வீகப் பற்று கூடும். மனச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நிதி நிலைமை சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மதுரை மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1

அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,X

# மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக போராடும் சட்டத்தரணி, அருட்தந்தையர் உட்பட 10 பேருக்கு நீதிமன்றம் பிறப்பித்துள்ள தடை உத்தரவு

- எஸ்.ஆர்.லெம்பேட் (17-02-2025)



மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக மக்கள் போராட்டம் ஒன்று இடம் பெறலாம் என்ற அடிப்படையில் இதனால் பொதுமக்களுக்கு இடையூறாக, நஷ்டம், தொந்தரவு ஏற்படலாம் என்ற வகையில் மன்னார் பொலிஸாரால் முன் வைக்கப்பட்ட தடை உத்தரவுக்கு பல்வேறு நிபந்தனைகளுடன் மன்னார் நீதவான் நீதிமன்றம் 17ம் திகதி அன்று திங்கட்கிழமை மாலை தடை உத்தரவுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கனிய மணல் அகழ்வு மேற்கொள்வதற்கான அனுமதி வழங்குவது தொடர்பாக அரச திணைக்கள அதிகாரிகள் ஆய்வு செய்வதற்காக இரு முறை மன்னார் மாவட்டத்திற்கு வருகை தந்த நிலையில் இரு முறையும் மக்களின் ஒன்றினைந்த எதிர்பால் அரச திணைக்களங்கள் உள்ளடங்களாக சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனமும் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவ்வாறான நிலையில் மீண்டும் குறித்த அரச திணைக்களங்கள் மற்றும் ஒரியன் மினரல் நிறுவனம் ஆய்வுக்காக மன்னார் ஓலைத்தொடுவாய் மற்றும் தோட்டவெளி பகுதிக்கு வருகை தர உள்ள நிலையில் பொதுமக்கள் அணி திரண்டு போராட்டம் மேற்கொள்ள உள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதன் அடிப்படையில் போராட்ட காரர்கள் என அடையாளப்படுத்தி சிலரின் பெயர்களை குறிப்பிட்டு பல்வேறு நிபந்தனைகளுடன் மன்னார் பொலிஸார் தடையுத்தரவை பெற்றுள்ளனர்.

குறித்த தடை உத்தரவானது சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் ,அருட்தந்தை மார்கஸ் அடிகளார் உள்ளடங்களாக 10 பேருக்கு எதிராக பெறப்பட்டுள்ளது.

குறித்த தடை உத்தரவின் கீழ் மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் போராட்டம் மேற்கொள்ளாமல் இருத்தல் வேண்டும். எந்த பொது சொத்துக்களுக்கு தனியார் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்த கூடாது. மிக முக்கியமாக மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் ஒரியன் மினரல் நிறுவனத்தின் செயல்பாட்டுக்கும் இடையூறு ஏற்படுத்த கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த நீதிமன்ற கட்டளை திங்கட்கிழமை 17ஆம் திகதி தொடக்கம் எதிர் வரும் 14 நாட்களுக்கு வலுவுள்ளதாக காணப்படும் என குறித்த கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் மன்னார் மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான பிரச்சார நடவடிக்கையின் போது மன்னார் மக்களுக்கு விருப்பம் இல்லாத கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்க போவதில்லை என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பகிரங்கமாக தெரிவித்த நிலையில் அவர் ஜனாதிபதியாக ஒரு வருட காலப்பகுதிக்குள் கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதற்கான கூர்ப்பு அறிக்கையை தயார் செய்வதற்கான இரண்டாவது முறை அரச திணைக்களங்கள் மன்னார் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS




## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

# NESAN

## Subramaniam



CONTACT US

# 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1507 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday February 21, 2025

# ஸ்கார்பாரோ தென்மேற்கு தொகுதி ஒன்றாரியோ மாகாண 2025 தேர்தலின் ஒன்றாறியோ என்டிபி வேட்பாளர் டோலி பேகம்

## Doly Begum, the Ontario NDP Candidate of 2025 Provincial Election for Scarborough Southwest



கனடாவில் விஞ்ஞானத்துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றவரான டோலி பேகம் அவர்கள் ஸ்கார்பாரோ தென்மேற்கிற்கான மாகாண நாடாளுமன்றத்தின் ஒன்றாறியோ என்டிபி உறுப்பினராக உள்ளார். அவர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27ம் திகதி நடைபெறவுள்ள மாகாணத் தேர்தலிலும் என்டிபி கட்சி சார்பில் போட்டியிடுகின்றார்.

டொலி பேகம் அவர்கள் தனது பெற்றோர் மற்றும் தம்பியுடன் ஒரு குழந்தையாக கனடாவுக்குச் வந்தார், மேலும் ஸ்கார்பாரோவில் தனது வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கழித்தார்.

கடந்த காலங்களில் மாகாண முதல்வர் கெத்தலின் வின் அவர்கள் தலைமையில் இருந்த லிபரல் அரசாங்கம் ஒன்றாரியோ மின்விநியோக நிறுவனம் மற்றும் ஹைட்ரோ மற்றும் வாசாகா மின் விநியோகத் திட்டம் ஆகியவற்றை தனியார்மயமாக்குவதை வெற்றிகரமாக நிறுத்திய மாகாண அளவிலான கீப் ஹைட்ரோ பொது பிரச்சாரத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளராக டோலி பேகம் விசுவாகமாக சேவையாற்றி அதில் வெற்றி கண்டார்.

அத்துடன் அவர் ஸ்கார்பாரோ சுகாதார கூட்டணியின் முன்னாள் இணைத் தலைவராகவும், வார்டன் வூட்ஸ் சமூக மையத்தின் துணைத் தலைவராகவும் உள்ளார், அங்கு ஸ்கார்பாரோ மக்களுக்கு வாழ்க்கையை சிறப்பாகச் செய்ய அவர் கடுமையாக உழைத்தார்.

டோலி டொராண்டோ பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர் மற்றும் லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் வளர்ச்சி, நிர்வாகம் மற்றும் திட்டமிடல் ஆகியவற்றில் முதுகலைப் பெற்றவர். அவர் ஜூன் 2018 இல் ஒன்றாறியோ சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார், கனடாவில் எந்த மட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியை வகித்த பங்களாதே' கனடிய பெண்மணி டொலி பேகம் ஆவார். குயின்ஸ் பார்க் மாகாணப் பாராளுமன்றத்தில், டோலி குடியுரிமை, வெளிநாட்டு நற்சான்றிதழ்கள் மற்றும் குடிவரவு சேவைகளுக்கான உத்தியோகபூர்வ எதிர்க்கட்சி விமர்சகர் ஆக பணியாற்றி மக்களின் பாராட்டுக்களைப் பெற்றார். பல முக்கிய சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சிகளுக்கு எதிராக விமர்சனங்களை இவர் முன்வைத்தார்

இந்தத் தொகுதியில் வாழும் தமிழ் மக்களோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருக்கும் டொலி பேகம் அவர்கள் கனடா கந்தசாமி ஆலயத்தின் வளர்ச்சி மற்றும் அதன் தேவைகள் ஆகியவற்றிலும் முன்னின்று ஆதரவு அளித்து வருகின்றார்.

# ஜஸ்டின் ட்ரூடோ அவர்களே கனடாவின் பிரதமராக தொடர்ந்து இருக்க வேண்டும்

## Justin Trudeau Should Stay On As Canada's Prime Minister

எமது கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு **Robert Nelly** என்பவரால் அனுப்பப்பெற்ற இந்த கட்டுரையை எமது வாசகர்களுக்காக இங்கு பிரசுரம் செய்கின்றோம்- கனடா உதயன் ஆசிரிப பீடம்

கனடா உதயன் ஆசிரிய பீடத்தாருக்கு:- இந்த விடயத்தில் எனது எண்ணங்களை கீழே எழுதியுள்ளேன், எனது கருத்துக்களை பரவலாக பரப்ப ஊக்குவிக்கிறேன், முடிந்தால் அவற்றை வெளியிடுங்கள் அல்லது உங்கள் சகாக்களிடையே பரப்பவும். - அன்புடன் ரோபர்ட் நெல்லி

பிரதம மந்திரி ஜஸ்டின் ட்ரூடோ ராஜினாமா செய்வதற்கான காரணங்கள் இப்போது பொருத்தமற்றவை, ஏனெனில் அவர் ஆதரவு வீழ்ச்சியடைந்ததால் அவர் விலகினார். எவ்வாறாயினும், சிஸ்டியா ஃப்ரீலாண்ட் ராஜினாமா செய்த மூன்று நாட்களுக்குப் பிறகுதான் ட்ரூடோவுக்கு 19.4% ஆதரவை வழங்கிய ஈகோஸ் வாக்குச் சாவடி, இப்போது ட்ரூடோவை 32% தருகிறது, இது அவரது போட்டியாளரான பியர் போலீயை விட 1.9% குறைவாகவே உள்ளது. இன்று தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டால் மற்ற கருத்துக் கணிப்புகளும் ட்ரூடோ கிட்டத்தட்ட பொலீவ்ருடன் பிணைக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டுகின்றன. மேலும், டொனால்ட் டிரம்ப் தனது அச்சுறுத்தல்களிலிருந்து பின்வாங்கியுள்ளார், எனவே பிரதமராக ஃப்ரீலேண்டை அனுப்ப வேண்டிய அவசியமில்லை.





# எம்.பி.யாகப்போகும் "சுமா"வும் வடக்கு முதல்வர் ஆசையில் "சத்தி"யும் ?

"உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடக்கவுள்ள நிலையில் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளராகவிருந்த சத்தியலிங்கத்தின் பதவி விலகலுக்கும் சுமந்திரனின் பதவி ஏற்புக்கும் பின்னால், "அன் கிளீன் தமிழரசுக்கட்சி" (**Unclean Tamil Arasu Party**)த் திட்டங்கள் உள்ளன. தற்போது வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் ஆசை காட்டி சத்தியலிங்கத்தின் பொதுச்செயலாளர் பதவியை கைமாற்றியுள்ள சுமந்திரன், சத்தியலிங்கம் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக அறிவிக்கப்படும்போது அவரின் தேசியப்பட்டியல் ஆசனம் ஊடாக பாராளுமன்றம் செல்வதே திட்டம்""

கே.பாலா

இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவராக பேராசைப்பட்டு அதில் படு தோல்வி கண்ட நிலையில் ""உள்வீட்டு"" கலகங்களில் ஈடுபட்டு தமிழ் தேசிய அரசியலையும் தமிழரசுக் கட்சியின் நற்பெயரையும் அதன் கட்டுக்கோப்பையும் நாடளாவிய ரீதியில் நாறடித்து வந்த மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் எனப்படும் எம்.ஏ. சுமந்திரன் தற்போது இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் பதவியைக் கைப்பற்றி யுள்ளார்.

(தொடர்ச்சி 22ம் பக்கம்)

# இந்த ஆண்டு எம்.பி.க்களுக்கு வாகனங்களோ அல்லது வாகன அனுமதிப்பத்திரங்களோ இல்லை.

## ஆனால். யாழ்ப்பாண நூலகத்திற்கு அத்தியாவசிய வசதிகளை வழங்க 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

### இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க திங்கட்கிழமையன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த நாட்டின் 2025 வரவு செலவுத் திட்டம்

2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு மசோதாவினை இலங்கையின் நிதியமைச்சரும் ஜனாதிபதிபதியுமான அனுரகுமார திஸாநாயக்க 17ம் திங்கட்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

அதன் விபரங்களை அவர் ஒவ்வொன்றாகவும் நிதானமாகவும் வாசித்தளித்தார்.

இவ்வருடத்தின் வரவு செலவுத் திட்டத்தில் கடந்த அரசாங்கங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது போன்று வாகனங்களோ அன்றி வாகன அனுமதிப்பத்திரங்களோ அல்லது மதுபான அனுமதிப்பத்திரங்களோ வழங்கப்படவில்லை என்பதும் அதேவேளை யாழ்ப்பாண நூலகத்திற்கு அத்தியாவசிய வசதிகளை வழங்க 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்ட விடயமும் தமிழ் மக்களை நன்கு கவர்ந்த விடயங்களாகத் தெரிகின்றன.

2025 வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு அமைகின்றன

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

